# மாணவர் விழா மலர்

ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையம் சென்னை

கற்பனைத் திறனும்,
கருத்துயர் கதையும்,
கண்கவர் வனப்பும்
கலந்த ஓவியங்கள்


தரும்

கலைக்கூடம்

AVM
புரொடக்ஷன்ஸ்

ஏவிஎம் ஸ்டுடியோஸ் • ஆற்காட் ரோட் • கோடம்பாக்கம் • சென்னை-26 •


கோட்டாகுடி பெரியநாயக்கர்
வு. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு



"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்."

—சி. சுப்பிரமணிய பாரதி.

1



கனம் கல்வி, நிதி மந்திரி

**திரு. சி. சுப்ரமணியம்**

தலைவர்.

முதற் பயிற்சி

**துவக்க விழா**

15 ஜூலை 1957.

முதற் பயிற்சி

**நிறைவு விழா**

30 அக்டோபர் 1957.

# கலைப் பெருக்கு

ஒரு மக்களின் வாழ்வு நிறைந்திருக்கும் நிலையில்தான் அங்கே கலைப் பெருக்கு காணும். கலைப் பெருக்கு கண்ட மக்கள் வாழ்வுதான் நிறைவு பெறும்.

ஒன்றையொன்று எதிர்பார்த்து நிற்பதுபோலத் தோன்றும் இந்த இரண்டும் உண்மைகள்.

இந்திய மக்களின் வாழ்வு நிறைவுக்கான பெருமுயற்சிகள் தீவிர கதியில் நடந்து கொண்டிருக்கின்றன. இயற்கையன்னை இந்த நாட்டில் கொட்டிவைத்துள்ள வளங்களை, மறைந்து கிடக்கும் சக்தி வளங்களைக் கண்டுபிடித்து வகைப்படுத்தி மக்கள் வாழ்வு நிறைவுக்கு வழிசெய்யும் பெரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன.

அதே நேரத்தில் நாடு முழுவதும், மூலை முடுக்குகளிலெல்லாம் கலைப் பெருக்கு இயக்கம் முளைவிட்டு, சிம்புவிட்டு, தழைவிட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளாகப் பேணி வளர்த்துக் கனிந்த நமது நுண் கலைகளும், பெருங் கலைகளும் புதிய உயிரோட்டம் பெற்றுப் படர்ந்து வருகின்றன.

புதிய இந்திய சமுதாயத்தின் கலைப் பெருக்கிலும், சிறப்பிலும் தமிழ் நாட்டின் பங்கு பெரிய அளவிலிருக்கும். நமது கர்னாடக இசை, பரத நாட்டியம் ஆகிய இரண்டு பெருங் கலைகளுமே இந்திய கலைப் பெருக்குக்குத் தனிச்சிறப்பு அளிக்கப்போகின்றன. தென்னாட்டின் சிற்பக்கலை நாளை இந்தியா முழுவதும் பரவிச் செழிக்கப்போகிறது என்றால் அது சோதிடம் கூறுவதேயல்ல. நமது சிற்பக் கலையின் உறங்கிக் கிடக்கும் அமரத்வம் மீண்டும் உயிர்த்துத் தழைக்கத் தொடங்கும்போது அது இந்தியா முழுவதும் எத்தகைய செல்வாக்குடன் பரவும் என்பதை சிறிது கற்பனைக் கண் கொண்டு பார்க்க முயன்றாலே போதும். அந்த அதிசயக் காட்சி புலனாகிவிடும்.

தமிழ் நாட்டின் பண்டைய நாடகக் கலையைப்பற்றிய சில குறிப்புகள் தாம் நம்முடைய இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. ஆனால் நமது நடிப்புத் திறமையின் தரத்தைப் பற்றி அறிய யாரும் இலக்கியங்களில்போய்த் தேடிப் பார்க்க வேண்டியதில்லை. கல்லிலும், செம்பிலும் ஒரு நடராஜாவையும், ஆயிரக்கணக்கான சிற்பங்களையும் வடிக்கும் கற்பனை வளம் பெற்ற ஒரு மக்களின் நடிப்புக் கலை மேதை இன்று உறங்கிக் கிடக்கிறது. அதைத் தட்டி எழுப்பி விட்டு விட்டால்போதும். நாடு, மொழி என்ற எல்லைகளையெல்லாம் தாண்டி உலகத்து மக்களெல்லாம் கண்டு சிலிர்த்து வியக்கும் அளவுக்கு அதை வளர்த்துவிட முடியும்.

அந்த முயற்சி, நமது நாடகக் கலையின் மறுமலர்ச்சி இயக்கம் பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது. அது சிறிது சிறிதாக வேர்விட்டுப் படர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒரு உறுப்பு தான் 'ஸேவா ஸ்டேஜ்' நாடகக் குழு. அதிலிருந்து தானாகப் பழுத்த கனிதான் நாடக கல்வி நிலையம். தமிழ் நாடகக் கலைக்குச் சேவை; அதன் வளர்ச்சி, அதைப் பரப்புதல் என்ற லட்சியங்களுக்காகவே சுமார் ஆறு ஆண்டுகளுக்குமுன் தோன்றியது ஸேவா ஸ்டேஜ் நாடகக் குழு. இந்தக் குழுவினரின் நாடகக் கலை சேவை இன்று வரலாற்றிலே இடம்பெறும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. நாடகக் கலையின் பல்வேறு துறைகளிலும் பயிற்சியளித்து, தென்னாட்டில் மூலை முடுக்குகளில் மங்கிக்கிடக்கும் கலை மேதைகளை வெளிப்படுத்தும் பெரு முயற்சிதான் ஸேவா ஸ்டேஜின் நாடகக் கல்வி நிலையம்.

நாடகம் எழுத, அதை அரங்கேற்ற, அதிலே நடிக்க இயல்பிலேயே திறம்பெற்ற ஏராளமான இளைஞர்கள் அவற்றை முறையாகக் கற்க வகையின்றி ஏங்கிக் கொண்டிருக் கின்றனர். அவர்களுக்கு அந்த வாய்ப்பளிக்கும் கல்விக்கூடம் ஒன்றை நிறுவவேண்டு மென்று ஸேவா ஸ்டேஜ் தீர்மானித்தது. அதற்காக முதல் திரட்ட வழி வகைகள் யோசிக்கப் பட்டன. அந்த நேரத்தில் நாடகக் கலைப் பயிற்சித் திட்டத்திற்கு மூவாயிரம் ரூபாய் மானியம் அளிக்கத் தயாராக இருப்பதாக அறிக்கை யனுப்பினர் சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கத்தினர்.

ஸேவா ஸ்டேஜ் திட்டத்திற்குத் தேவையான முதலில் இது நாலில் ஒரு பங்குதான். ஆயினும் அந்த மானியத்தை ஏற்க முடிவு செய்தோம். ஸேவா ஸ்டேஜ் நாடகங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட காட்சி ஜோடனைகள், உடைகள், அணிகளையெல்லாம் பயிற்சிக்காகப் பயன் படுத்துவது என்றும் தீர்மானித்தோம். அதன் பிறகும் துண்டுவிழும் தொகைக்கு ஸேவா ஸ்டேஜ் பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் முடிவு செய்தோம்.

முதன் முதலாக ஒரு மூன்று மாதப் பயிற்சித் திட்டம் வகுக்கப்பட்டது. கடல் போன்ற ஒரு கலையைக் கற்பதற்கு மூன்று மாதம்! ஆனல் முதல் பயிற்சி வகுப்புகளில் நாடகக் கலைத் துறைகளில் ஆதாரப் பயிற்சி மட்டும் அளிப்பது என்று தீர்மானித்து அதற்கேற்ப பாடத் திட்டங்கள் வகுத்தோம். ஜூலை மாதம் பதினைந்தாம் தேதி தொடங்கி அக்டோபர் பதினைந்து தேதிவரை மூன்று மாத காலம் இருபத்துநான்கு மாணவர்களும், ஒரே ஒரு மாணவியும் நடிப்பு, நாடகம் எழுதுதல், நாடகத் தயாரிப்பு, காட்சியமைப்பு போன்ற துறை களில் ஆதாரப் பயிற்சி பெற்றனர்கள்.

ஸேவா ஸ்டேஜ் வியாபார நோக்கில் நாடகங்கள் எழுதுவித்து நடத்துவதில்லை. ஆகையால் அதன் செல்வ நிலை இன்றுவரை 'கைக்கும் வாய்க்கும்' ஆகத்தான் இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையில் நாடகக் கல்வி நிலையத்தின் முதல் பயிற்சி அதை கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்திப் பார்த்துவிட்டது.

நன்றாக முடிவதெல்லாம் நல்ல பணிதான் என்பார்கள். எங்கள் முதல் முயற்சி நல்லபடியாக நடந்தேறி விட்டது. ஆனல் எங்கள் லட்சியப் பயணம் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. நாடகக் கலையில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது நூறு மாணவ மாணவிகளுக்காவது பயிற்சியளித்து வழி காட்டி உதவவேண்டும்; குறைந்தது பன்னிரண்டு மாதங்களாவது அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். இதுதான் எங்கள் லட்சியம்.

இந்த லட்சியம் நிறைவேற முழுமனத்துடன், தளரா நெஞ்சுடன் உழைக்க எங்களிடம் உற்சாகம் இருக்கிறது. ஆனல் அது நிறைவேற வெறும் உற்சாகம் மட்டும் போதாது. முழுப்பொறுப்பையும், முக்கியமாகப் பொருளாதாரப் பொறுப்பு முழுவதையும் ஏற்க இப்போது ஸேவா ஸ்டேஜுக்குப் போதிய பலமில்லை. இந்த நேரத்தில் அந்த லட்சியத்தில் ஆர்வ முள்ளவர்கள், நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோரும் அவரவர் பங்கை அளிக்க முன்வந்தால் இந்தப் பெரும்பணி தொடர்ந்து நடக்க முடியும்.

வால்மீகியும், வியாசரும், இளங்கோ அடிகளும், கம்பனும், நாயன்மார்களும், ஆழ்வார் களும் படைத்து வைத்துவிட்டுச் சென்றுள்ள நம்முடைய இலக்கியச் செல்வங்கள், எழுத்தறி வற்ற கோடிக் கணக்கான நம் நாட்டு மக்களிடையே பரவி வேரூன்றி உயிர்த்திருக்கின்றன. அவற்றை அப்படிப் பரப்பியது நாடகக் கலைதான். தலைமுறை தலைமுறையாக நூற்றுண்டு நூற்றுண்டாக நாடகக் கலைஞர்கள் தோன்றி அந்த மாபெரும் காப்பியங்களை மேடைமேல் நடித்துக் காட்டி நமது பாரதப் பண்பை வளர்த்துக்கொண்டே வந்திருக்கின்றனர். நம்முடைய நாடகக் கலை நம் நாட்டின் உயிர் நாடியான பண்புக்குச் செய்துள்ள சேவை அளவிலடங்காதது. அந்த மாபெருங் கலையைப் பேணி வளர்த்து அந்த மகத்தான தொண்டு தொடர்ந்து நிகழ உதவி செய்யவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

**Raj Bhavan,**
**Guindy, Madras - 22,**

11th October, 1957.

I am glad to learn of the completion of the first training course of the Seva Stage Nataka Kalvi Nilayam. I am well aware of the objectives of the venture. I am glad that Madras, in this as in other things, is doing pioneering work. As you are probably aware, the Central Sangeeta Nataka Academy has decided to start a National School of Indian Drama to provide for higher training and research in all branches of stage craft. Persons who take the training course in your Nilayam, at least some of them, can be sent to that school for further study. I hope the Nilayam will continue to serve the cause of the theatre in Tamilnad.

P. V. RAJAMANNAR,
Governor of Madras.

சென்னை,

12—10—1957.

தங்கள் சேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையம் தமிழ் நாட்டில் நாடகக் கலையை முறையாகப் பயிற்றுவிக்க சென்ற ஜூலை மாதத்தில் தொடங்கப் பெற்று இயங்கி வருவது அறிவேன்.

அக்கல்வி நிலையத்தில் முதலாவது மூன்று மாத பயிற்சித் திட்டம் இம்மாதக் கடைசியில் பூர்த்தியாகும் போது ஒரு சிறப்பு மலர் வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

அம்மலர் நல்ல முறையில் வெளிவரவும், தங்களுடைய புது முயற்சி வெற்றி பெறவும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

கு. காமராஜ்.

(முதலமைச்சர்.)

சென்னை,

15—10—1957.

நாடகக் கல்வி நிலைய பயிற்சி நிறைவு விழாவை யொட்டி, மலர் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தேச விடுதலைப் போராட்டத்தின்போது நாடகக் கலை அதில் சிறப்பான பங்கு வகித்தது. சுதந்திரம் அடைந்தபின், இக்கலையில் முக்கியத்துவம் இன்னும் அதிகம். ஏனெனில் சரியான முறையில் நடத்தப்படுமானல், உயர்ந்த லட்சியங்கள், ஒழுக்க முறைகள், சீலங்களைப் போதிப்பதில் நாடகங்கள் ஒரு சக்தி வாய்ந்த சாதன மாக விளங்கும். மக்கள் மகிழ்ச்சிகரமாகப் பொழுது போக்க உதவும். அதே சமயத்தில் இந்த உயர்ந்த பண்புகளை வளர்க்கக் கூடியது. ஆகையால் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு உதவுவது எல்லோருடைய கடமையுமாகும்.

சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் நல்ல முறையில் பணியாற்றி, புகழடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். தங்கள் நாடக கல்வி நிலையத்தின் பயிற்சி நிறைவு விழா இனிதே முடிவடைய கோருகிறேன்.

சி. சுப்பிரமணியம்.


(கல்வி, நிதி அமைச்சர்.)

70, ஆச்சாரப்பன் தெரு,

சென்னை.

தாங்கள் 7—10—'57-ல் அனுப்பிய நிருபம் கிடைத்தது. எனக்கு வயது மேலிட்டு கண்பார்வை மிகவும் குறைந்திருக்கிற படியால் உங்கள் நிலையம் நடத்தும் விழாவிற்கு நான் வர அசக்தனாய் இருக்கிறேன்; மன்னிக்கவும். உங்கள் நிலையமானது அநேக நூற்றாண்டு தமிழ் நாடகத்திற்காக உழைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவன் அருளைப் பிரார்த்திக்கிறேன்.

ப. சம்பந்தம்.



கல்வி நிலைய நிர்வாகிகள்.
மத்தியிலே பயிற்சிக்கு உபயோகப்படுத்தப்படும்
மாடல் ஸ்டேஜைக் காணலாம்.



கல்வி நிலைய ஆசிரியர்களும், மாணவர்களும்.

It has given me much pleasure to visit the Seva Stage where a Course is being given in Theatre Art. Though the Course is only for three months I was pleased to see the excellent syllabus that has been prepared as well as the devoted and creative work that is being carried on by Sri Sahasranamam with the help of other artistes. I am sure this work is a definite step towards the improvement of our Theatre in Madras State and I hope the Seva Stage will find much encouragement and help from everyone.

RUKMINI DEVI

---

Great hopes make great men. The Seva Stage Theatre Institute has been started with great hopes. Today when I happened to visit the art centre I was able to see the good work turned out by the promoters and pupils, both working in very happy consonance. I feel in the ripeness of time it will produce great men who are great actors like Sir Cedrick Hardwicke, Sir Lawrence Olivier etc., who lead more or less the lives of dedicated artistes.

C. S. KAMALAPATHI

---

நாடகக் கல்வி நிலையத்தின் கலைத் தொண்டுகளை உணர எனக்கு வாய்ப்புக் கிடைத்தது பற்றி மகிழ்கிறேன். வேறு பல கலைகளுக்குக் கல்லூரிகள் இருக்கும்போது எல்லோரையும் மகிழ்விக்கும் நாடகக் கலைக்கு ஒரு கல்லூரி மிக மிக அவசியம். இளைஞர்களும் கலைஞர்களும் செய்வதற்குரிய தொண்டுகள் பல இத்துறையில் உள்ளன. இவற்றிற்கெல்லாம் இக்கல்வி நிலையம் பிள்ளையார் சுழி போட்டிருக்கிறது. இது மென்மேலும் வளர்ந்து நாடகப் பல்கலைக் கழகமாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

நாடகக் கல்வி நிலையத்தை இருமுறை காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பெரிய முயற்சி! அரிய சாதனை! செயற்கரிய நற்பணியை செய்துள்ளார்கள். மூன்றே மாதங்களில் நிலைய மாணவர்கள் பெற்றுள்ள பயிற்சியின் தரம் வியக்கத் தக்கதாக இருக்கிறது. நாடகக் கலையின் இன்றைய நிலையை அறிந்தவர்களே இந்த வேலையின் அருமையை நன்கு உணர முடியும். நிலையத்தின் நிர்வாகிகளை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

டி. கே. ஷண்முகம்

---

நாடகக் கல்வி நிலையம் தமிழ் நாட்டிலே ஒரு புதிய முயற்சி. மிகத் தேவையான ஒரு முயற்சி. ஓரங்க நாடகத்தைப் பற்றிய சொற்பொழிவாற்றச் சென்றபோது அவர்களுடைய சிறந்த பணியை நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. நாடகக் கல்வி நிலையம் செய்யவேண்டிய வேலைகள் மிகப்பல இருக்கின்றன. இப்புதிய முயற்சிக்குப் போதிய ஆதரவு கிடைக்க வேண்டும் என்பது எனது விருப்பம். நாடகக் கல்வி நிலையம் மேலும் மேலும் வளர்க.

பெ. தூரன்

---

நாடகத்தில் அனுபவம் பெற்ற திரு. எஸ். வி. ஸஹஸ்ரநாமம் அவர்கள் தலைமையில் நடந்துவரும் ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையத்தின் கலைப் பணிகளை பார்வையிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நம் நாட்டில் முதன் முதலாக ஆரம்பித்திருக்கும் இக்கல்வி நிலையம், சிறந்த கலைவாணர்களை நாடகக் கலைக்கு அளிக்குமென நம்புகிறேன்.

டி. என். சிவதாணு

*Hearty Diwali Greetings!*

**TO ALL**

# TRANSPORT OPERATORS!

COMMEMORATE THIS HAPPY &
AUSPICIOUS OCCASION BY
CHANGING OVER TO

**Perkins**

P6V

AND ENJOY THE BENEFITS OF
DIESEL ECONOMY IN THE YEARS
TO COME

**May you PROSPER**
**from more PROFITS**
**thro' more PERKINS**

Simpson & Co. Ltd
**MADRAS-2**

**MANUFACTURERS OF PERKINS P6V AUTOMOTIVE DIESEL ENGINES IN INDIA.**

*Branches:* **BANGALORE, OOTACAMUND, SECUNDERABAD & TIRUCHIRAPALLI.**




DISTRIBUTORS :

| | | |
|---|---|---|
| Madras City : | | **M/s. Shivaji Films Private Ltd., MADRAS-14.** |
| S. Arcot, N. Arcot, Pondichery & Chittoor: | — | **M/s. Chamria Talkie Distributors, MADRAS-2.** |
| Madurai, Ramnad and Tinnevelly : | — | **M/s. Veeyar Films Private Ltd., MADURAI.** |
| Salem, Coimbatore and Nilgiris: | — | **M/s. Erode Pictures Circuit, ERODE.** |
| Mysore State : | — | **M/s. Vijaya Talkie Distributors, BANGALORE.** |
| F. M. S. | — | **Shaw Bros., SINGAPORE.** |

# நிலையத்தை நிரந்தரமாக்க வேண்டும்

டி. கே. சண்முகம்

1957 ஜூலை 15-ஆம் நாள்; தமிழ் நாடக உலகம் மறக்கமுடியாத நன்னாள். ஆம், அன்றுதான் தமிழகத்தின் தலைநகரில் முதன் முதலாக ஒரு 'நாடகக் கல்வி நிலையம்' தோன்றியது.

நாடகக் கல்வி நிலையம், எங்கள் நீண்டகாலக் கனவு. இதனை நனவாக்கத் துணிவுடன் முன்வந்தார் நடிகமணி நண்பர் எஸ். வி சகஸ்ரநாமம். முழு மூச்சோடு முனைந்து நின்று தமது முதல் முயற்சியிலே வெற்றியும் கண்டார். மூன்று மாதப் பயிற்சித் திட்டம் சிறப்பாக முடிந்தது.

திட்டங்களைத் தீட்டுவது எளிது. அதனை நிறைவேற்றி வைப்பதுதான் அரிது. அந்த மகத்தான சாதனையைச் செயல்படுத்திக் காட்டி நாடக உலகின் நன் மதிப்பைப் பெற்றார், நண்பர் சகஸ்ரநாமம். தமிழ் நாடகக் கலையின் வருங்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் அவரது பெருமுயற்சியைப் பாராட்டுவார்கள்.

எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் தொடக்கத்தில் எதிர்ப்புத் தோன்றுவது இயல்பல்லவா?... நாடகக் கல்வி நிலையத்துக்கும் அந்த எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது.

'நாடகக் கல்வி நிலையமா? இது வீண் முயற்சி' என நகைத்தனர் சிலர். 'பரம்பரை பரம்பரையாய் நாடகத் துறையில் ஈடுபட்டு உழைத்து வந்தவர்களே ஊதியம் கிடைக்க வழியின்றி ஆயிரக் கணக்கில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் படித்தவர்கள் சிலருக்குப் பயிற்சியளித்து, அவர்களோடு போட்டிக்கு விடுவதா?'... எனச் சீறி விழுந்தனர் சிலர்.

இவைபோன்ற கேலியும்-கிண்டலும், ஏசலும்-தூற்றலும், வேறு யாரிட மிருந்தும் வரவில்லை. நாடகக் கலைஞர்களிடமிருந்தே வந்தன. இவற்றையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல் எடுத்த காரியத்தை இனிது முடித்தார் நண்பர் சகஸ்ரநாமம்.

நாடகக் கலைஞர்களைத் தோற்றுவித்து நாட்டிற்களிக்கும் கலைக் கூடங்களாகத் திகழ்ந்து வந்தவை பண்டைக்கால 'பாய்ஸ் கம்பெனிகள்'. அவை இன்று இல்லை. இனித் தோன்றவும் வழியில்லை.

இன்று திரைவானிலே மின்னிக் கொண்டிருக்கும் நடிக நடிகையரெல்லாம் நாடக நடனக் குழுக்களில் பல்லாண்டு பயிற்சி பெற்று வந்தவர்கள் என்ற உண்மையை உணர்ந்தவர்கள், நிலைமையைப் புரிந்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. நடிக நடிகையரை மட்டுமன்று—திரையுலகிலே இன்று உலாவிக் கொண்டிருக்கும் சங்கீத டைரக்டர்கள், மேக்கப் நிபுணர்கள் மற்றும் பல திறப்பட்ட நுண்கலையாளர்களை யெல்லாம் உற்பத்தி செய்து தந்த பெருமையும் நாடகக் குழுக் களையே சாரும்.

நிலைமை இப்படியே இருக்குமானால் இன்னும் சில ஆண்டுகளில் பழைய பாய்ஸ் கம்பெனி நடிகர்களின் தலைமுறைக்குப் பின், திரைப் படவுலகம் நடிக நடிகையர் பஞ்சத்தினால் அவதிப்பட நேரும் என்பதை இன்றே அறுதியிட்டுக் கூறலாம். அவ்வாறு நேராமல் தடுக்கும் நல்ல முயற்சிதான் நாடகக் கல்வி நிலையம்.

மருத்துவர், வழக்கறிஞர், பேராசிரியர்-இவ்வாறு ஏனைய துறைகளில் ஈடு படுவோருக்குக் குறிப்பிட்ட கல்வித் தகுதிகள் இருக்கவேண்டுமென்ற நியதி இருப் பதைப்போல், நாடகத் துறையில் ஈடுபடுவோருக்கும் சில தகுதிகள் இருக்கத்தான் வேண்டும். கலைத்துறையில் மட்டும் கட்டுப்பாடற்ற நிலையில் எண்ணியவரெல்லாம் இடம் பிடித்துக்கொள்ள முயல்வதும், அதற்கு ஒரு முறையான படிப்பு இல்லாததும் எதிர்காலத்தில் கலையின் தரத்தைக் குறைத்து, உயர்வுக்கு ஊறு செய்வதாகவே இருக்கும். நாடக சினிமாத் துறையில் ஈடுபட்டிருப்போரும் நாட்டின் நலனில் பற்றுடையோரும் இதைப்பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். திரைப்பட உலகம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. ஆனல், இதற்கு உயிர் நாடியாக விளங்கும் நடிக நடிகையர் உற்பத்தியைப் பற்றிப் படாதிபதிகள் சிந்தித்துச் செயல் புரிவதாகத் தோன்றவில்லை. சிந்தித்திருப்பார்களானல் இத்தகைய நாடகக் கல்வி நிலையங்களின் தேவையை நன்கு உணர்வார்கள்.

தனிப்பட்டவர்கள் தமது கைப்பொருளைச் செலவு செய்து இதைப்போன்ற கல்வி நிலையங்களை நடத்துவதென்பது எளிதன்று. திரைப்படத் துறையில் நிரந்தரமாக ஈடுபட்டிருக்கும் செல்வந்தர்கள் கூட்டுறவு முறையில் நாடகக் கல்வி நிலையங்களையும், அதன் துணை நிறுவனமாக நாடகக் குழுக்களையும் நடத்த முன் வரவேண்டும்.

நண்பர் சகஸ்ரநாமம் நாடகக் கலையின் மீதுள்ள ஆர்வத்தால் இந்த நல்ல முயற்சியைத் தொடங்கியிருக்கிருர். படாதிபதிகள் தம்மால் இயலாவிட்டாலும் துணிவுடன் இதைச் செய்ய முன்வரும் நண்பர் சகஸ்ரநாமம் போன்றவர்களின் முயற்சிக்கு எல்லாவகையிலும் ஊக்கமளித்து உதவ வேண்டுமென்பது எனது வேண்டுகோள். மூன்று மாத காலம் இந்த நற்பணியில் ஈடுபட்டு உழைத்த நண்பர் சகஸ்ரநாமத்தின் ஸேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் நிரந்தரமாகத் தொடர்ந்து நடைபெறவேண்டும்.

மூவாயிரம் ரூபாய் மான்யம் அளித்து இந்த முயற்சியைத் தூண்டிவிட்ட சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கமும், சர்க்காரும் இந்த மூன்று மாதப் பயிற்சிக்கு உதவியதோடு முற்றுப்புள்ளி வைத்துவிடாமல் ஆண்டுதோறும் மான்யம் உதவி நண்பர் சகஸ்ரநாமத்தின் நாடகக் கல்வி நிலையத்தை நிரந்தர நிறுவனமாக்கு வதற்குத் துணை புரிவார்களென்று நம்புகிறேன்.

வாழ்க நாடகக் கல்வி நிலையம்.

## டி. கே. சண்முகத்தின் உரம்

மகாத்மா காந்தி நினைவு நிதிக்காக டி. கே. சண்முகம் ஒரு பிரபல வைர வியாபாரியை நேரில் சந்தித்து ஐந்து ரூபாய் டிக்கட்டு வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அவர் மறுத்து விட்டார்.

பிற்பாடு அதே வைர வியாபாரி டி. கே. எஸ். சகோதரர்களுடைய நாடகம் போட வேண்டுமென்று வந்தபோது சண்முகம் அவரைப் பார்க்கவும் மறுத்துவிட்டார். ஒரு நாடகத்துக்கு ரூ. 5,000 தருவதாக அவர் ஆசை காட்டியபோதும் சண்முகம் உறுதியாக 'மாட்டேன்' என்று சொல்லிவிட்டார்.

# இன்றைய தமிழ் நாடகமேடை

பி. எஸ். ராமையா

இன்றைய தமிழ் நாடகத்தைப் பற்றிப் பேசுமுன் தமிழ் நாடக இலக்கியம், நாடகக் கலை ஆகிய இரண்டு அம்சங்களின் சரித்திரம், மரபு ஆகியவற்றைப் பற்றிச் சில சொற்கள் சொல்லியாகவேண்டும்.

தமிழ் மக்களின் நாடகக் கலைக்குச் சரித்திரமும், மரபும் உண்டா ?

''உண்டு ; நீண்ட சரித்திரமும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் வளர்ந்து படிந்த மரபும் உண்டு'' என்கிறார் தற்காலத் தமிழ்மேடையின் முதுகிழவர் திரு. பம்மல் சம்பந்த முதலியார். ''நம் நாட்டில் நமது வாழ்க்கை முறையின் பெரும்பாலான அம்சங்களும், நமது கலை விகாசங்களும் பல நூற்றாண்டுகளாகப் படிந்து வந்துள்ள ஒரு மரபையொட்டியே அமைந்துள்ளன. ஆகையால் நம்முடைய தெருக்கூத்துகளிலும், சில ஆண்டுகளுக்குமுன் வரை நகரமேடைகளிலும்கூட நாம் கண்ட நாடகக்கலை முறை அம்மாதிரி ஒரு மரபை ஒட்டித் தான் அமைந்திருக்கவேண்டும் என்று ஊகிப்பது தவறாகாது என்பது என் கருத்து'', என்கிறார் திரு. முதலியார். நாடகமேடைமேல் ஐம்பது ஆண்டுகளுக்குமேல் அனுபவமும், நாடகக்கலைபற்றிய ஆராய்ச்சி அறிவும் பெற்றுள்ள அவரது இந்தக் கருத்திலிருந்து தமிழ் நாட்டில் நாடகக்கலை நெடுங்காலத்திற்கு முன்பே சிறந்த அளவில் வளர்ந்திருந்தது என்பது தெளிவாகும்.

நம்முடைய பண்டை இலக்கியங்களில் நாடகம் எழுதுவது, நடத்துவது என்பவை பற்றி மிகவும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. சுமார் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முந்திய நூலான தொல்காப்பியத்திலும், சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்திய நூலான சிலப்பதிகாரத்திலும் நாடகசாலை, மேடை, நடிப்பு, நாடக நூல்கள் பற்றி பல அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

அந்த நூல்களில் பல நாடகங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் துரதிர்ஷ்டவசமாக இன்று அவற்றில் ஒன்றுகூட நமக்குக் கிட்டவில்லை. அந்த நாடகங்களின் கதைக் கருத்துகள்கூட நமக்குத்தெரிய இடமில்லை. நாட்டு வரலாற்றில் ஒளிவீசி நிற்கும் ராஜ ராஜ சோழன் காலத்திய நாடகம் ஒன்றைப்பற்றித் தஞ்சைக் கோயில் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது. அந்த நாடகம்கூட இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அது பத்தாம் நூற்றாண்டின் முடிவில் அல்லது பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டு மேடைமேல் நடத்தப்பட்டிருக்கிறது.

அதன் பிறகு 17-ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் நாடகக்கலையின் வளர்ச்சி பிரகாசமாக இருந்திருக்கிறது. புதிய நாடகங்கள் படைக்கப்பட்டு நடித்துக் காட்டப்பட்டன. புதிது புதிதாகக் குறவஞ்சிகளும், பள்ளு நாடகங்களும் தோன்றின. அவை முழுக்க முழுக்கச் செய்யுள்களாகவே எழுதப்பட்டன. குறவஞ்சிகளில் எல்லாம் ஆதாரக்கதை வடிவமும், உட்கருத்தும் ஒரே மாதிரி இருந்தாலும், கவிதைச் சுவையில் சில மிகமிக உயர்ந்த தரத்தில் உள்ளன.

இதைத் தொடர்ந்து கீர்த்தனை அல்லது பாடல் வடிவத்தில் நாடகம் படைக்கும் பருவம் தோன்றியது. அருணாசலக்கவிதான் இந்த வகை நாடகப் படைப்பில் முதல்வர். அவருடைய 'ராம நாடகக் கீர்த்தனைகள்' இன்றும் பிரபலமாக உள்ளன. அருணாசலக்கவியும், அவருக்குப்பின் அம்மாதிரி நாடகங்கள் படைத்தவர்களும் மக்களின் பழகுதமிழ்ச் சொற்களையே பெரிதும் கையாண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்' தான் இந்தவகை நாடகங்களில் கடைசி என்று கூறலாம்.

இடையே ஆங்கிலமும், ஆங்கிலக் கல்வி முறையும் புகுந்தன. அவற்றுடன் ஒரு புதிய சிந்தனை வழியும், புதுமுறை இலக்கிய இயக்கமும் தோன்றின. ஆங்கிலத்திலிருந்தும், ஸம்ஸ்கிருதத்திலிருந்தும் நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. புதிதாகவும் சில நாடகங்கள் படைக்கப்பட்டன.

ஆயினும் நாடகமேடை புதிய கல்வி முறையில் பயிலாத மக்கள் வசத்திலேதான் இருந்தது அவர்கள் பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டின் புராணக்கதை, இசை நாடகங்களையே நடித்துக்கொண்டிருந்தனர். இவை தெருக்கூத்துகள் என்று குறிப்பிடப்பட்டன. நாடகத்தையே தொழிலாகக் கொண்ட சிலர் ஊர் ஊராகப் போய் இவற்றை நடித்தார்கள். அங்கங்கே கிராமங்களிலும் ஆண்டுதோறும் விழாக் காலங்களில் சிலர் கூடி இவற்றை நடித்தார்கள்.

இந்த நாடகங்கள் செய்யுள் அல்லது கீர்த்தனை வடிவத்தில் எழுதப்பட்டிருந்தன. பாடல்களுக்கிடையே தேவையான உரையாடல்களை நடிகர்கள் தாங்களே கற்பனையாகப் பேசுவார்கள். அல்லது நாடகத்திற்குப் பொறுப்பு வகிப்பவர் கற்பனை செய்து கொடுப்பார். நடிகர்களின் கற்பனை வளர்ச்சிக்கு வழிசெய்யும் இந்த உரையாடல் முறை வியப்பிற்குரியது தான். ஆனல் நாடகமேடைக்கு அத்தியாவசியமான கட்டுப்பாடு தோன்றுவதற்கு இந்த முறை அபாயகரமானது. ஆனல் மேடைத் தொழிலுக்குக் கட்டுப்பாடு வேண்டும் என்ற கருத்தே புதிது. அது இப்போதுதான் அந்தத் தொழிலில் அல்லது கலையில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளங்களில் பதிந்து வருகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியைத்தான் தமிழ் நாடகக் கலையின் மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லலாம். 1877-ல் அந்தக் காலத்திய வாழ்க்கையை எடுத்துக் காட்டிய 'டம்பாச்சாரி' என்ற நாடகம் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து 'பிரதாப சந்திர விலாசம்', 'சோழவிலாசம்', 'இந்திர சபா' முதலிய நாடகங்கள் தோன்றின. 1883-ல் முதல் முதலாக ஷேக்ஸ்பியரின் 'வெனிஸ் வர்த்தகன்' என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பு வெளிவந்தது. அதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு 1893-ல் 'இளவேனிற் கனவு' என்ற நாடகம் மொழிபெயர்க்கப்பட்டது. ஏறக்குறைய இதே காலத்தில் அல்லது சற்றுப் பிந்தி ஸம்ஸ்கிருதத்திலிருந்து 'சாகுந்தலமும்' 'ம்ருச்சகடிகா'வும் மொழி பெயர்க்கப் பட்டன.

தெருக்கூத்துகள் பாட்டும், செய்யுளுமாக இருந்தாலும் மக்களின் நாடகக்கலை மேதையையும், திறமையையும் வெளியிடுவதற்கிருந்த சாதனம் முறை அது ஒன்றுதான்! அந்த நாடகங்களிலிருந்த நாடகச் சுவை அல்லது வேகம் சிறந்த முறையில், எல்லையில் நடித்துக் காட்டப்பட்டு, தலைமுறைக்குப்பின் தலைமுறைகளில் ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றைக் கண்டு களித்து, சிலிர்த்துப் பயனும் பெற்றுர்கள். அந்த நாடகங்கள் மக்கள் வாழ்க்கையையே பண்படுத்தின.

இந்த மறுமலர்ச்சிக் காலத்தில்தான் தஞ்சை கோவிந்தசாமிராவ் முதன் முதலாக நவீனகால நாடகமேடை அமைப்பைத் தோற்றுவித்தார். புதுமுறை மேடை அமைத்து, அதன்மேல் காட்சிகள் வரைந்த திரைகளையும் அவர் பயன்படுத்தினர். அந்த நாட்களில் ஆண்பிள்ளைகள்தாம் பெண் பாத்திரங்களாக வேடம் தரித்தார்கள். அந்த நாடகங்களில் பின்பாட்டுக்காரர்களும் இருந்தார்கள்.

போன நூற்றுண்டின் இறுதியில்தான் நாடகமேடைமேல் பெண்பிள்ளைகளே வேடம் தரித்து வருவது ஏற்பட்டது. நடிப்புத் திறமையாலும் துணிச்சலாலும் மக்களை பிரமிக்க வைத்த பாலாமணி மேடைமேல் தோன்றினர். அந்த அம்மையார் பெரும்பாலும் நடிகையரே அமைந்த ஒரு நாடக கோஷ்டியையும் நிறுவினர்.

1891-ம் ஆண்டில் பம்மல் சம்பந்த முதலியார் சில நண்பர்களுடன் 'சுகுண விலாச சபா' என்ற அமெச்சூர் நாடகச் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்தார். அதுதான் தற்காலத் தமிழ் நாடகமேடையின் தொடக்கம் என்றுகூடச் சொல்லலாம். அவரே பல நாடகங்கள் எழுதி அவற்றை மேடையும் ஏற்றினர்.

அங்கிருந்து நாடகத் தொழிலில் ஒரு புதிய சுறுசுறுப்பு தோன்றியது. பல புதிய நாடகத் தொழில் சபைகள் தோன்றின. அந்த சபைகள் பழைய புராணக்கதை நாடகங்களைத் தான் நடத்தின. அல்லது புராணக்கதைகள், சம்பவங்களை வைத்துப் புதிய நாடகங்கள் எழுதுவித்தன.

1920-ம் ஆண்டுக் காலத்தில் பல 'பாய்ஸ் கம்பெனிகள்' என்ற சிறுவர்களடங்கிய நாடக சபைகள் தோன்றின. இந்த சபைகள் 7 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களைச் சேர்த்து நாடகங்களில் நடிக்கப் பயிற்சியளித்தன. சிறுவர்கள் எல்லாப் பருவத்து ஆண்களாகவும், பெண்களாகவும் வேடம் தரித்து நடித்தார்கள். இந்த சபைகள் புதிதாகச் சில நாடகங்கள் எழுதுவித்து நடத்தின. இந்த சபைகள்தாம் அன்று பிரபலமாக இருந்த சில துப்பறியும் நாவல்களை நாடகமாக மாற்றி நடத்தின. அந்த நாடகங்கள் வியாபார முறையிலும் வெற்றிபெற்றன.

1930-ம் ஆண்டுவரையிலும் கூடத் தமிழ் மேடை நாடகத் தொழிலாளர் வசத்தில்தான் இருந்தது. அவர்கள் தங்கள் பழைய நாடகங்களுக்குக் கிடைத்த வெற்றியுடன் திருப்தியடைந்தார்கள். புதிய நாடகங்கள் எழுத எழுத்தாளர்களைத் தூண்டும் சக்தி, உற்சாகப் படுத்தும் சக்தி, அவர்களிடமிருக்கவில்லை. கடலும், நதிகளுமிருக்க அவற்றைப் பற்றிய நினைவேயின்றி மக்கள் திரும்பத்திரும்ப குளிப்பதற்குக் கோயில் குளத்துக்கே செல்லும் மன நிலைமையைத்தான் அன்றைய நிலைக்கு ஒப்பிடலாம்.

ஆனால் மற்ற இலக்கியத் துறைகளில் புதுவெள்ளத்தின் வேகத்தில் புதிய படைப்புகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. பாரதியும், அவருடைய அன்பர் திரு. வ. வே. சு. அய்யரும் உறங்கிக் கிடந்த தமிழ் இலக்கிய மேதையைத் தட்டி எழுப்பிவிட்டார்கள். அரசியல் இயக்கம் அதற்கு இன்னொரு வழியில் உற்சாகமூட்டியது. பல புதிய எழுத்தாளர்கள் புது முறை நாவல்களும் சிறு கதைகளும் படைத்து வெளியிட்டார்கள். ஆனால் இன்னும் சிறந்த நாடகம் ஏதும் வரவில்லை. அங்குமிங்குமாக, எப்போதோ ஒரு புதிய நாடகம் எழுதப்பட்டு வெளிவந்தது. ஆனால் அதன் ஆட்டத்தகுதி மேடைமேல் உறைத்துப் பார்க்கப்படவில்லை. அமெச்சூர் சங்கங்கள்கூட மேடைமேல் நிச்சயமாக வெற்றிபெற்ற சம்பந்த முதலியார் நாடகங்களையே எடுத்து நடத்தின.

1930-க்கும் இரண்டாவது உலக யுத்த முடிவுக்கும், அதாவது 1945-க்கும் இடையில் சில புதிய நாடகங்கள் எழுதப்பட்டு புத்தக வடிவில் வெளிவந்தன. ஆனால் அவற்றின் ஆட்டத்தகுதி உறைத்துப் பார்க்கப்படாமல் அவை வெறும் இலக்கியக் காட்சிப் பொருள்களாகவே இருக்க நேர்ந்தது. என் நண்பர் ஒருவர் சொல்லுவதுபோல மேடை ஏறாத நாடகமும், மணமாகாத பெண்ணும் ஒரே மாதிரிதான்!

யுத்தத்திற்குப் பிறகு, அதிலும் சுதந்திரத்திற்குப் பிறகு, எல்லா இலக்கியத் துறைகளிலும் ஒரு புது வேகம் பிறந்திருக்கிறது. நல்ல தரமுள்ள சில நாடகங்கள் வெளிவந்துள்ளன.

மேடைமேல் கலைத் திறமையை வெளியிடும் ஆவலின் காரணமாகப் பல அமெச்சூர் சங்கங்கள் தோன்றியுள்ளன. ஆனால் இந்தப் புதிய சங்கங்கள் பிரசுரமான நாடகங்களை எடுத்து நடிக்க முன்வரவில்லை. இந்த சங்கங்கள் தங்கள் பொருளாதார நிலைக்கு ஏற்ப புதிய நாடகங்கள் எழுதுவித்துக் கொண்டன. அல்லது, 'கல்கி', 'தேவன்', 'அகிலன்' போன்ற பிரபல எழுத்தாளர்களின் நாவல்களை நாடகமாக மாற்றி அமைத்துக்கொள்ள முனைந்தன. சில சமயங்களில் நாடக ஆசிரியரே சிலரைச் சேர்த்துக்கொண்டு தன் நாடகத்தை மேடையேற்ற முயற்சி செய்தார்.

இந்தக் காலத்தில் திராவிட இயக்கத்தின் அடிப்படையில் புதியதொரு நாடகமேடை இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்தில் பல நாடக மேடைத் தொழில் நடிகர்களும், சினிமா நடிகர்களும் சேர்ந்து புதிய நாடகங்கள் எழுதுவித்து நடித்தார்கள். இந்த நாடகங்கள் பெரும்பாலும் பிரசாரம். இவற்றில் நாடகத் தரம் குறைவு. ஆனால் சிலவற்றில் நாடக வேகம் உயர்ந்த அளவிலிருந்தது. இந்த நாடகங்களிலிருந்து ஒரு புதிய உரையாடல் முறையும் நடையும் தோன்றி அது நிலையும் பெற்றுள்ளது.

பழைய தொழில் நாடக கோஷ்டிகள் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்து போயின. ஆயினும் அவர்கள் எப்போதாவது கூடித் தங்கள் பழைய முறை நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

பாய்ஸ் கம்பெனிகளில் சேர்ந்து நாடகத் தொழிலாளிகளாக வெளிப்பட்ட சிலர் புதிய நாடக சபைகளை அமைத்தார்கள். இந்தச் சபைகள்தான் புதுமுறை நாடகங்களை மேடை யேற்றினர்கள். இவர்கள், சில புதிய எழுத்தாளர்களைக் கவர்ந்து, அவர்கள் ஒத்துழைப்பைப் பெற்றார்கள். இலக்கியத் தரத்திலும் நாடகச் சுவையிலும் சிறந்த சில நாடகங்கள் எழுதப் பட்டு நடிக்கப்பட்டன.

திரு. டி. கே. சண்முகம் தமது கோஷ்டியாருடன் முதலில் 'குமாஸ்தாவின் பெண்' என்ற நாடகத்தை அரங்கமேற்றினர். அதையடுத்து 'மனிதன்', 'ரத்தபாசம்' போன்ற நாடகங்களை நடத்தினர். இவற்றின் நாடகத் தரம் சிறந்திருந்தது. இந்த சபையார் திரு. அரு. ராமனுதன் எழுதிய 'ராஜ ராஜ சோழன்' என்ற நாடகத்தை நடத்திக் காட்டினர்கள். இதில் சில இடங்களில் நாடகச் சுவை மிக உயர்ந்த எல்லையை எட்டுகிறது. இந்த நாடகம் குறுகிய காலத்தில் இருநூறு தடவைகளுக்குமேல் நடத்தப்பட்டுள்ளது.

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டின் தலைமை நகைச்சுவைக் கலைஞர் என். எஸ். கிருஷ்ணன் மங்கிக்கொண்டிருந்த ஒரு நாடக சபைக்குப் புத்துயிர் கொடுத்து அதை நிறுத்தி வைத்தார். இந்த சபை, சம்பந்த முதலியாரின் மிகச்சிறந்த நாடகமான 'மனோகரா'வுக்குப் புத்துயிர் அளித்து நடத்தியது. பின்னல் திரு. எஸ். வி. ஸஹஸ்ரநாமம் இந்த சபையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, 'நாம் இருவர்' 'பைத்தியக் காரன்' என்ற உயர்தர நாடகங்களை நடத்தினர். இவை மேடைமேலும் வெற்றி பெற்றன. பின்னல் சினிமாப் படமாகவும் எடுக்கப்பட்டு வெற்றியடைந்தன.

பின்னல் திரு. ஸஹஸ்ரநாமம் தமது சொந்தக் குழுவாக 'ஸேவா ஸ்டேஜ்' என்ற நாடக சபையை நிறுவினர். அந்த சபைக்காகவே திரு. ராஜாமணியால் எழுதப்பட்ட 'கண்கள்' என்ற நாடகம் அவர்களால் முதன் முதலாக நடிக்கப்பட்டது. அடுத்து ஸேவா ஸ்டேஜ் குழுவினர் திரு. ராஜாமணியால் எழுதப்பட்ட 'இருளும் ஒளியும்' என்ற நாடகத்தை நடத்தினர். கால்ஸ்வொர்த்தியின் ஒரு சிறு கதையைத் தழுவி எழுதப்பட்ட இந்த நாடகம் தமிழ் மேடைமேல் ஒரு பெரிய தீரமான முயற்சி என்று கூறலாம். மூன்றே அங்கங்கள், ஐந்தே காட்சிகள், நான்கே பாத்திரங்கள் கொண்டது இந்த நாடகம். கால அளவிலும் மிகக்குறைவு. இரண்டு மணி நேரத்திற்குள் நடந்தேறுவது. 'நாடகம்' என்ற சொல்லின் இலக்கணத்திற்கு முற்றிலும் பொருத்தமானது இந்த நாடகம். அதன் நாடகத் தரம் மிகமிக உயர்ந்த எல்லையைச் சேர்ந்தது.

இந்த நாடகம் பெரிய நகரங்களில் நல்ல வெற்றியடைந்ததாயினும் இதர இடங்களில் மக்கள் அதை அவ்வளவாக ரசிக்கவில்லை. அதன் அமைப்பும், நேரடியாக எடுத்துக்காட்டப் பட்ட நாடக ரஸமும், ஜனங்களுக்குப் பழக்கப்பட்ட நாடக ருசிக்கு முற்றிலும் மாறுபட்டவை யாக, புதுமையாக இருந்தன.

திரு. ஸஹஸ்ரநாமம் தமது நாடகங்களுக்குக் காட்சிகள் அமைக்க திரு. கலாஸாகரம் ராஜகோபாலின் ஒத்துழைப்பைப் பெற்றார். திரு. ராஜகோபால் ஒரு ஓவியர்; சிற்பி; நடனக் கலைஞர். அவர் மேடைமேல் காட்சிப் படுதா முறையைக் கைவிட்டு, காட்சி நிகழும் இடங்களைச் சுட்டிக்காட்டும் புதுமுறையொன்றைப் புகுத்தினர். சில தட்டிகளைக் கொண்டு கட்டிட அமைப்பு மயக்கத்தை எழுப்பி, அதை வர்ணக் கலப்புகளாலும், யுக்தி நிறைந்த ஒளிப் பாய்ச்சலாலும் சிறப்பித்துக் காட்டினர். இந்தப் புதிய காட்சியமைப்பு முறை ஸேவா ஸ்டேஜ் நாடகங்களில் இருந்த நாடக ரஸத்தை எடுத்துக் காட்டியது. இன்னும் சிறப்பித்துச் சொன்னல் இந்த முறை நாடகத்திற்கு ஒரு புதுப் பரிமாணமே அளித்தது.

இன்று புதிது புதிதாக நாடகங்கள் எழுதப்பட்டு புத்தகங்களாகப் பிரசுரிக்கப் படுகின்றன. ஆனல் அவை மேடையேறுவதில்லை. தனிமையிலமர்ந்து மௌனமாகப்

படித்து ரசிப்பதற்குரிய மனோதர்ம நாடகங்கள் அவை. இலக்கிய அளவில் அவை உயர்ந்த தரத்திலிருக்கின்றன என்பது என் கருத்து. ஆனால் அவற்றின் ஆட்டத்தரத்தைப் பற்றி ஏதும் சொல்ல இயலாத நிலையிலிருக்கிறது.

ரேடியோவும் நாடகமேடைக்கு ஒரு அளவுக்கு நல்ல உதவி செய்திருக்கிறது. ஒலி, சொல், குரல் ஆகிய மூன்றின் உதவியிலேயே இயங்கும் வானொலி, மேடைமேல் இன்னும் முயன்றுபார்க்கத் துணியாத, பல கருத்துகளின்மேல் கட்டிய நாடகங்களை நடத்திக்கொண் டிருக்கிறது.

தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் 'காதல்' என்ற கருத்தை, உணர்ச்சியை, ஒரு தனி முறையில் கையாண்டிருக்கிறார்கள் என்பதை இங்கு எடுத்துக் காட்டவேண்டும். 'லைலா மஜ்னு' 'ரோமியோ ஜூலியட்' அல்லது 'அனார்க்கலி' போன்ற காதல் தத்துவ நாடகங்களில் வாழ்க்கையில் காதலுக்குமிஞ்சிய மதிப்புள்ளது எதுவுமில்லை என்ற எல்லையில் அது கையாளப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் நாடகங்களில், 'ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தத்தம் மனதிற்குகந்த வாழ்க்கைத் துணைவியை, அல்லது துணைவனைத் தானே தேர்ந் தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் இருக்கவேண்டும். அப்படி சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டவர்கள் மனம் நிறைந்து வாழ்வார்கள்' என்ற கருத்திலேயே காதலைக் கையாண்டிருக்கிறார்கள்.

புதிய தத்துவக் கோணங்கள், கருத்துக்களை வைத்தும் நாடகங்கள் எழுதி நடிக்கப் பட்டுள்ளன. உதாரணமாக 'மனிதன்' என்ற நாடகத்தில், 'ஏமாந்து களங்கப்பட்ட மனைவியைக் கணவன் மன்னித்து, அவள் திருந்தி வாழ ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும்' என்ற கருத்து எடுத்துக் காட்டப்பட்டது. 'இருளும் ஒளியும்' என்ற நாடகத்தில் குற்றம் செய்த மனச்சாட்சியின் உறுத்தலுக்கும், பிராயச்சித்தத்தில் அதை சமாதானப்படுத்தும் முயற்சிக்கும் உள்ள ஏற்றத் தாழ்வைத் திறமையுடன் எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். 'மனிதனும் மிருகமும்' என்ற நாடகத்தின் ஆசிரியர் திரு. எஸ். டி. சுந்தரமும் குறிப்பிடப் படவேண்டிய ஒரு நாடக ஆசிரியர். அவரும் புதிய கருத்துக்களை வைத்து நாடகங்கள் நடத்தியிருக்கிறார்.

ரஷ்ய ஆசிரியர் கோகோல், எழுதிய 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' என்ற நாடகக் கதையின் தளத்தின்மேல் எழுதப்பட்ட, 'பிரஸிடெண்டு பஞ்சாட்சரம்' என்ற அரசியல் நையாண்டி நாடகம் 1956-ல் அரங்கேற்றப்பட்டு நல்ல வெற்றியடைந்தது. முன்னணி தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர் திரு. தி. ஜானகிராமன் எழுதிய 'நாலு வேலி நிலம்' என்ற நாடகமும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. அவர் நாடகத்தைத் தஞ்சை ஜில்லாவின் பழகு தமிழ் நடையில் அமைத்திருப்பது இதன் பல பெருமைகளில் ஒன்று. பழகு நடையை அவர் மிகவும் திறமையுடன் ஆண்டிருக்கிறார்.

ஆயினும் இன்றும் பல நாடகங்கள் நமது புராதனமான 'பத்தினி' அல்லது 'சதி'யின் பெருமையைத்தான் ஆதாரக் கருத்தாக வைத்து எழுதப்படுகின்றன. இந்த நாடகங்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டாலும் அல்லது தயாரிப்பிலே தரம் குறைந்திருந்தாலும்கூட வெற்றி பெறுகின்றன. சிலப்பதிகாரக் கண்ணகியின் வார்ப்பிலே சமைக்கப்படும் பத்தினிக் கதா பாத்திரங்கள் நம் நாட்டில் எக்காலத்தும் மக்களைக் கவரும். எழுத்தாளர்களுக்கும் அது கவர்ச்சி நிறைந்த ஒரு நாடகப் பாத்திரம்.

சமீப காலத்தில் நம்முடைய வரலாற்றின் பண்டைய, அண்மைக் காலத்து வீரத் தலைவர்களை நடுநாயகமாகக் கொண்ட நாடகங்கள் எழுதப்பட்டு நடத்தப்படுகின்றன. இப்போது 'கட்டபொம்மன்' பருவம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று மேடைமேல் பல கட்டபொம்மன்கள் தோன்றியிருக்கிறார்கள். இவற்றில், அண்மையில் சிவாஜி கணேசனின் 'கட்டபொம்மன்' பெரும் செலவில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு வெற்றியடைந்திருக்கிறது.

இன்று தமிழ் நாடகமேடை பல அம்சங்களில் ஒற்றையடித் தடத்தில் நடக்கும் எல்லை யிலேயே தானிருக்கிறது. நடிகர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிடும் செயல்களிலும், உரையாடல்களைப் பேசுவதிலும் பழைய முறைகளையே பின்பற்றுகிறார்கள். நடிகர் தாம் மேற்கொண்ட பாத்திரத்தின் தன்மையில் தான் கலந்துக்கொள்வதற்கு பதில், அந்தப்

பாத்திரத்தைத் தன்னில் கலந்துகொள்ள வைக்கிறர். அதாவது பாத்திரத்திற்குள் அவரே புகுந்து அதை ஆட்டிவைக்கிறர். அதன் பயனுக ஒரு நடிகர் மேற்கொள்ளும் பாத்திரங்கள் எல்லாம் ஒரே மாதிரி அங்க சேஷ்டைகளுடனும், பேச்சுப் பாணியுடனும் மேடைமேல் உலாவுகின்றன.

ஆனல் புதிய முயற்சிகள் செய்பவர்கள், நாடகக் கலேக்குப் புது மெருகு ஏற்ற திறம் படைத்தவர்கள் தோன்றியிருக்கிறர்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு நிலேமை. ஸேவா ஸ்டேஜ் குழுவினர் இம்மாதிரி புது முயற்சிகள் செய்கின்றனர் என்பது முன்பே குறிப்பிடப் பட்டுள்ளது. அதோடு ஸேவா ஸ்டேஜ் தென் இந்தியாவில் முதன் முதலாக ஒரு நாடகக் கல்வி நிலேயம் அமைத்து பலருக்கு நாடகக் கலேயின் பல்வேறு அம்சங்களிலும் பயிற்சி அளிக்க முன் வந்திருக்கிறது. குழவிப் பருவத்திலுள்ள இந்த நிலேயம் சாதித்திருப்பது, அல்லது சாதிப்பதற்கு அதற்குள்ள சக்தி ஆகியவற்றைப்பற்றி இப்போது ஏதும் கூறிவிட முடியாது. அதைக் காலம்தான் எடுத்துக்காட்ட இயலும்.

சென்னே அடையாற்றின் கரைமேல் மேடை வளர்ச்சிக்கான இன்னெரு பெரிய முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. தென்னுட்டின் நுண்கலேகள் பெற்றபேறு என்ற புகழுக்கு உரிய திருமதி ருக்மிணி தேவியின் தலேமையில் அங்கே 'கலா க்ஷேத்திரம்' நடன நாடகங்கள் இயற்றி மேடைக் கலேயை வளர்க்கச் சிறப்பாகப் பணி செய்துகொண்டிருக்கிறது. அந்த நிலேயம் இன்னும் உரையாடல் அமைத்த நாடகங்களேயும், நிகழ்கால வாழ்க்கையைப் பற்றிய நாடகங்களேயும் எடுத்து நடத்தவில்லே. ஆயினும் அதன் அனுபவங்களும், முயற்சிகளும் வருங்காலத் தமிழ் மேடையை உருவாக்கும் சக்தியுடையவை என்பது என் கருத்து.

நாடகம் எழுதுவதும், அதை அரங்கேற்றுவதும் ஒன்றையொன்று அண்டி நிற்பவை. புதிய நாடகங்கள் எழுதப்பட்டால்தான் அவற்றை மேடைமேல் நடித்துக் காட்டமுடியும். நாடகங்கள் நடத்துவதற்கென்றே மேடைகளுமிருந்து, உயிரோட்டமுள்ள நாடகக் கலே இயக்கமும் இருந்தால்தான் புதிது புதிதாக நாடகம் எழுதும் எழுத்தாளர்களுக்கு உற்சாகம் பிறக்கும்.

சுருங்கச் சொன்னல் தமிழ் நாடகக் கலேயின் வளர்ச்சி ஒரு கையகல மண்ணே நம்பி ஒரு காணி நிலத்திற்கு ஏங்கி நிற்கிறது இன்று. நாடகக் கலே மறுமலர்ச்சி பெற்றுவிட்டது. ஆனல் அது மணம் வீசி, தனது வர்ணங்கள் மிளிரக் காட்சியளிக்க இடம் கிடைக்காமல் தத்தளிக்கிறது. இது தமிழ் நாட்டில் மட்டும் உள்ள நிலேமை அல்ல. பாரத நாட்டின் எல்லா ராஜ்யங்களிலிருந்தும் இதே ஏக்கப் பெருமூச்சுதான் எழுவதைக் காண்கிறேம். இந்தப் பரந்த நாட்டில் மக்களின் பெருங் கலேயான நாடகக் கலே குடியேறி வாழக் கொட்டகைகள் கட்டச் சிறு நிலத் துண்டுகள் இல்லே!

எந்தக் கலேயானலும் இன்று அது பிழைப்புக் கவலேயுடன் பின்னிக்கொண்டு தவிக் கிறது. எந்தக் கலேயில் மேதையுடன் பிறந்தவனும், தன் கலே மேதை விலாசத்துக்கு பசியற்று வாழ்போதிய ஊதியமாவது கிடைக்குமா என்று கணக்குப் பார்க்கும் பரிதாப நிலேயில் இருக்கிறன் இன்று இந்த நாட்டில். பரிதாபகரமான நிலேதான்; ஆனல் மறுக்கமுடியாத உண்மை.

ஆயினும் இந்தப் பரிதாப நிலே மாறிவருகிறது; அல்லது விரைவில் மாறிவிடும் என்று நம்பவைக்கும் அறிகுறிகளும் தென்படுகின்றன. புதிய தமிழ் நாடக மேடை பிறந்து வேக மாகக் குழந்தைப் பருவத்தைத் தாண்டிக்கொண்டிருக்கிறது என்பது என் எடை.

(சமீபத்தில் கோட்டயத்தில் நடந்த
கேரள ஸாஹித்ய ஸம்மேளனத்தில் நிகழ்த்திய பிரசங்கம்).

# MANJULA CONFECTIONERY PRIVATE LTD.,

## HOSPET.

★

*MANUFACTURERS :*

Quality lines of Confectionery made from finest ingredients covering a range of over fifty wrapped and unwrapped Boilings of Soft Fruit Centres, Hard Boiled Goods, Satin Goods, Toffee Assortment, Dragees and Gelatine Products.

★

*Sole Selling Agents for South India :*

**AMALGAMATED COMMERCIAL TRADERS PRIVATE LTD.,**

**MADRAS-17.**

வருகிறது!

ஆர். ஆர். பிக்சர்ஸ் அதி உன்னத தயாரிப்பு...



R.R. PICTURES.

# காத்தவராயன்

டைரக்ஷன்

**ராமண்ணா**

திரைக்கதை, வசனம்.. துறையூர் K. மூர்த்தி    சங்கீதம்.. G. ராமநாதன்

பாடல்கள் ...தஞ்சை ராமையாதாஸ்

# நடிப்புப் பயிற்சி

**எஸ். வி. ஸஹஸ்ரநாமம்**

நாடக கல்வி நிலேயம் ஆரம்பிக்கத் திட்டம் வகுத்து அனுப்பியதிலிருந்து சதா அதை எப்படி நடைமுறையில் கொண்டு செலுத்துவது என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்! அடிக்கடி என்னுடன் இன்று கல்வி நிலேயத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டுவரும், திரு. ராமய்யா, கலாசாகரம் ராஜகோபால், ராஜாமணி மூவரையும் கலந்தாலோசித்தபடியே பத்து பதினேந்து தினங்களேக் கழித்தேன். ஏனென்ருல் நான் இதுவரையில் நடிப்புப் பயிற்சி அளிக்கும் ஆசிரியனுகப் பணியாற்றியவனல்ல. மேடையில் தொழில் நடிகர்களேக் கொண்டு தொழில் நாடகங்களே நிர்வாகம் செய்து அமைத்துக் கொள்ளும் அனுபவம் தான் எனக்குண்டு! அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் முறையும் எனக்குத்தெரியும்! நாட்கள் நெருங்க நெருங்க என்னுள்ளத்தில் எழுச்சியின் வேகம் உந்த ஆரம்பித்தது. பிறகுதான் நடிப்பைப்பற்றி நான் முதலிலிருந்து ஆராய்ச்சி செய்யவே தொடங்கினேன். நாம் எப்படி நடிகனுனேம், நம் அனுபவம் எப்படி என்றும், கடந்த காலத்தைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினேன். ஆனல் அப்பொழுதும் எனக்குத் திருப்தியான முறை அமையவில்லே. காரணம் என்னவென்ருல் அந்தக் காலத்தில் நாடக ஆசிரியர்களென்றிருந்தவர்கள் கற்றுக் கொடுக்கும் முறைகள் அவர்கள் வாயிலாக மாணவர்களேப் பேசும் மொழிகள் எல்லாம் கர்ண கடூரமாயிருந்து வந்தன. இருந்தாலும் எனக்கு ஒரு பெரியாரின் உருவமும் அவர் நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுத்த முறையும் கவனத்துக்கு வந்து பெரிதும் ஊக்கமளித்தது. அந்தப் பெரியார்தான் சமூக நாவல்களே நாடகமாக்கி மேடையிலே உலவவிட்டவர்! எம். கே. ராதா அவர்களின் தந்தையார், காலஞ்சென்ற திரு எம். கந்தசாமி முதலியார், அவர்கள். ஒவ்வொரு நாடகத்தைத் தயாரிக்கும் போதும் அவர் எடுத்துக்கொண்ட சிரமங்களெல்லாம் எவ்வளவு என்று இன்றைக்கு எண்ணும்போதுகூட எனக்கு பிரமிப்பை உண்டுபண்ணுகிறது என்று சொல்வது மிகையல்ல! அடிமரம் போல் ஒரு நடிகன் விழவேண்டிய கட்டம் வரும். அவர் முதலில் விழுந்து காட்டுவார். மனேஹரா என்ற நாடகத்தில் 'சங்கிலி சீன்'— மகன் தந்தையிடம் நியாயம் கேட்டுக் கடும் சினம் ஏறி, வாளால் வெட்டப்போகும் சமயம் தாய் வந்து தடுக்கும் காட்சி மேடைமேல் நடைபெறும். தாய் மகனிடம் கட்டளே போடுவாள். மகன் தத்தளித்துத் தடுமாறி தாயின் கட்டளேயை மீற முடியாமல் கதறிக் கீழே விழுந்து புலம்புவான். உள்ளே பார்த்தால் அதே நிலேமையெல்லாம் அந்த நடிகருக்குத் தெரியும்படியாக தட்டிக்கு மறைவில் கந்தசாமி முதலியார் அவர்கள் செய்துகொண்டிருப்பார்கள். கண்ணீரும் கம்பலேயுமாகக் காட்சியளிப்பார்கள். நடந்த ஒரே நாடகம்தானே என்ற அலட்சிய மனப்பான்மையை அந்தப் பெரியாரிடம் நான் ஒருநாள் கூடக் கண்டதில்லே. எத்தனே



நாடக ஆசிரியர்,
திரு. M. கந்தசாமி முதலியார்

நூறு முறை நடந்த நாடகமானுலும் அன்றன்றைக் குப்புதியதாக நடிப்பதுபோல் அவ்வளவு சிரத்தையாகப் பணியாற்றிய ஆசிரியர் அவர் ஒருவரைத்தான் என் வாழ்நாளில் நான் பார்த்திருக்கிறேன்!

பிறகு இதையெல்லாம் எண்ணிக்கொண்டேயிருந்தேன், ஆரம்ப விழாவும் வந்துவிட்டது! எண்ணங்களும் சிறிது சிறிதாக மனதிலே உதயமாக ஆரம்பித்தன!

நான் கல்லூரியில் படிக்காதவன். ஆனுல் வந்திருந்த மாணவர்களில் பெரும் பங்கு கல்லூரிப் படிப்பை முடித்து வந்திருந்தவர்கள்! எங்கள் அதிர்ஷ்டவசமாகவோ அல்லது அவர்களுக்குப் பேட்டியளித்துத் தேர்ந்தெடுத்தது எங்கள் சாமர்த்திய மென்று சொல்வதோ தெரியவில்லை. முதன் முறையாக நாடக கல்வி நிலையத்தின் ஆரம்ப விழாவை வெகு சிறப்பாக நமது கனம் கல்வி மந்திரி சி. சுப்ரமணியம் அவர்கள் நடத்தி வைத்தார்கள். நானும் வரவேற்புரை தயாரித்து எங்கள் நோக்கம் என்ன என்பதுபற்றி விளக்கினேன். நாடக கல்வி நிலையத்தின் ஆரம்ப விழாவில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டிய முக்கியமானவர்களான சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கத் தலைவி திருமதி ருக்மிணி தேவியாரும், நாடகம் இலக்கியம் முதலியவை களில் ரசிகரும், ஆராய்ச்சியாளருமான டாக்டர் மு. வரதராசனுர் அவர்களும் வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறியதில் ஊக்கம் பன்மடங்கு பெருகியது.


ஆரம்ப விழாவில், "ஊர்கூடித் தேரிழுக்க வேண்டும்" என்பதை விளக்கும் முறையில், சிறந்த சிறு கதை எழுத்தாளரான திரு. தி. ஜானகிராமன் அவர்களால் எழுதப்பட்ட 'ஊரும் தேரும்' நாடகத்தைக் கல்வி நிலைய மாணவர்களுக்கும் வந்திருந்த பொது மக்களுக்கும் ரஸிகர்களுக்கும் நடித்துக் காட்டினேம்! எல்லோ ராலும் பாராட்டுதலைப் பெற்ருேம்! ஊக்கம் கொடுத்தால் ஆக்கம் தானே பிறக்கிறது! அடுத்த தினத்திலிருந்து நான் நடிப்பு ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி விட்டேன்! முதல் பாடமாக மாணவர்களிடையே கேள்விகள் இரண்டொன்று கேட்டேன். "உன்னை மேடைமேல் வேஷம் போட்டுவிட்டால் நீ என்ன செய்வாய்?" என்பது ஒரு கேள்வி. பலரும் பலவிதமாகச் சொன்னுர்கள்.

நான் தெளிவுபடுத்திச் சொன்னேன்! 'பிறரைப் போலப் பாசாங்கு செய்வது' அதாவது 'நாமல்லாத இன்னெருவராக இருந்து நாம் ஒரு வேலையைச் செய்வது' என்றும், இதற்கு விளக்கம் பலவும் கொடுத்தேன்.

இரண்டாவதாக, நாடகத்தில், நடிப்பு மட்டும் முக்கியமா, சம்பாஷணை முக்கியமா? வெறும் பேச்சுக்களை மட்டும் ஒரே இடத்தில் நின்று பேசாமல் சில செயல்களையும் செய்துகொண்டு பேச வேண்டுமென்பதைப்பற்றியும், வெறும் பேச்சைக் காட்டிலும், சம்பவம்தான் மனதிலே பதியும் என்பதைப் பற்றியும், அதற்கு "மனமுனைப்பு" (Concentration) அதிக முக்கியமென்பதையும், இதைப் பயிற்சி பெறுவதற்காக சில தனிப் பாடங்களையும் வகுத்துக் கொடுத்தேன். சொல் சுத்தம் சிலருக்கு இல்லாமலிருந்தது. அதற்காக சில எளிய தமிழ்க் கவிதைகளைத் திருத்தமாகப் பல முறை சொல்லச் சொல்லியது பெரும் பயனளித்தது.

தமிழ் நாட்டில், அதுவும் நம்மால் ஆரம்பிக்கப்படும் இந்தக் கல்வி நிலையம் நல்ல சிறப்புப் பெற்று ஒரு கல்லூரியாக நிரந்தரமாக வாழும் என்று உறுதி கொள்ளும் அளவுக்கு மாணவர்கள் கல்வி நிலையத்தில் பயிற்சி பெற தங்களைப் பண்படுத்திக்கொண்டார்கள். இதில் நானடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது.

இந்த மூன்று மாதத்தில் மாணவர்களோடு பொழுது போனதே தெரியாமல் போய் விட்டது! அவர்கள் இந்தப் பயிற்சியினுல் என்ன நன்மை அடைந் துள்ளார்கள் என்பதைப்பற்றி உடனே என்னுல் சொல்ல இயலவில்லை. என்ருலும் குறைந்த காலத்தில், முடிந்த அளவுக்கு, இன்னமும் அவர்கள் இடத்துக்குப்போய்க் கூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாடத் திட்டத்தின் மூலமே திறன்பெறக்கூடும்படியாகப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது என்று நிச்சயமாக நம்ப முடிகிறது.



We were happy to visit your theatre institute and the interesting work that is carried on there in the field of dramatics. The approach of the institute and students to the theatre is extremely simple and healthy and is bound to give a great impetus to the theatre art in India. We wish you all success in your undertaking and we hope your students who will come out of the institute will give their contribution to the theatre world.

DURGA KHOTE

# THE DHANALAKSHMI INDUSTRIALS,



*Manufacturers of :*

**High Class Art Silk, Cotton Carpets and All Sorts of Handloom Textiles,**

Post Box No. 7,

**BHAVANI P.O.** (*Via*) **Erode,**

**Coimbatore Dist. (S. India)**

★

*AGENTS:*

**Wanted throughout India and all over the world.**

★

**All orders will be attended to immediately and overseas orders promptly executed.**

★

**Oldest Established Textile Manufacturers in South India. Best references from our Bankers.**

★

**Write for particulars by Air Mail to-day either in Tamil or in English.**

★

ஐயா,

எங்கள் சொந்த பேக்டரியில் நூல் ஜமக்காளங்களும், கண்கவர் பூ வேலைப்பாடுள்ள பட்டு பார்டர் ஜமக்காளங்களும், பந்தி, ஹால் ஜமக்காளங்களும் மற்றும் கைத்தறி ஜவுளிகளும் ஏராளமாய் தயார் செய்து வருகிறோம். தங்கள் தேவைக்கு ஒரு முறை ஆர்டர் செய்தால் உண்மை தெரியவரும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். குறைந்த லாபமும் அதிக வியாபாரமுமே எங்கள் குறிக்கோள்.

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் தரப்படும். விபரங்களுக்கு விரைவில் எழுதுங்கள்.

★

## தி தனலக்ஷ்மி இண்டஸ்டிரியல்ஸ்,

(புரொப்ரைட்டர்: எஸ். பி. சென்னியப்ப முதலியார்)

தபால் பெட்டி நெ. 7,

**பவானி. (வழி) ஈரோடு. S. Ry.**

# H. M. V.
# &
# COLUMBIA RECORDS

*Available at :*

## INTERNATIONAL *Traders*

76, ROYAPETTAH HIGH ROAD,

MYLAPORE MADRAS-4.

*Departmental Stores*

# N. K. AHAMMED,

TIMBER MERCHANT

*Stockist of :*

All kinds of PLYWOODS & MASINETS.

All varieties of

TILES, ROOFINGS & CEILINGS.

★

**Phone : 84406.**

## N. K. AHAMMED,

**84/A, Hamilton Bridge Road, Mylapore,**

**MADRAS - 4.**

ஸேவா ஸ்டேஜ்

அளிக்கும்

மகத்தான புதுத் தயாரிப்பு!

# "தேரோட்டி மகன்"

தமிழ் நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர்

பி. எஸ். ராமையாவின் உணர்ச்சி மிக்க படைப்பு!



பாரதக் கதைபோல் நிலைத்து நிற்கும் நாடகம்!

வானொலியில் கேட்டதும் பல்லாயிரவர் பாராட்டைப் பெற்ற

**"தேரோட்டி மகன்"**


விரைவில் அரங்கேற்றம்.

# குழந்தைகள் நாடகம்

குமாரி எஸ். சாந்தி

[இளமையில் கல் என்பது ஔவையார் வாக்கு. கலையில் தேர்ச்சிபெற வேண்டுமானால் இளமையிலிருந்தே பயிலவேண்டும். சின்னஞ் சிறு செல்விகளோடு சேர்ந்து நாடகம் எழுதித் தயாரித்துப்போட்ட குமாரி சாந்தி, ஸஹஸ்ரநாமத்தின் புதல்வி, தன் அனுபவத்தை இங்கே விவரிக்கிறார்.]

விடுமுறை நாட்களில் பொழுது போகவில்லை. என்ன செய்வது என்று யோசித்தேன். இக்கேள்வியை எல்லாரிடமும் கேட்டேன். ஒருவர் பதிலும் திருப்தி அளிக்கவில்லை. இப்படி யோசிப்பதே ஒரு பொழுது போக்காகிவிட்டது. ஒரு நாள் சட்டென ஒரு யோசனை தோன்றியது. போன விடுமுறையில் குழந்தைகளை கூட்டிக்கொண்டு நாடகம் நடத்தி இருக்கிறேன். அதேபோல் இப்போதும் போட்டால் என்ன என்று ராஜாமணி அத்தான் கேட்டார். பிறகு அதைவிட அதைப் பற்றி ரசமான கட்டுரை எழுது என்று கூறினார். அந்த பதில் என்னை திருப்திப்படுத்தியது.



இந்தக் கட்டுரையின் ஆசிரியை எட்டு வருஷங்களுக்கு முன்.

நாங்கள், நான் எழுதிய மூன்று நாடகங்களை நான்கு தடவை நடத்தினோம். முதல் நாடகமான 'சீனுவின் சமர்த்தியம்' இரண்டு தடவை நடைபெற்றது. இதில் நடித்தவர்கள்: மாஸ்டர் முரளி, குமார், சங்கர், நான், உமா, கௌரி முதலியவர்கள். ஒத்திகையின்போது சண்டை வந்தாலும் கஷ்டம், சமாதானம் வந்தால் அதைவிடக் கஷ்டம். ஏனெனில் சண்டை வந்தால் அடிதடி பிரயோகம் ஆகும்! அவன் வந்தால் நான் கட்டாயம் வரமாட்டேன்' என்பான் ஒருவன். சமாதானம் ஏற்படுத்த நாம் ஒருவனை கடிந்துகொண்டால் உடனே அவன் மற்றவர்களிடம் 'டேய் நாம் இவ நாடகத்திலே நடிக்கவே வேண்டாம்' என்று இழுத்துக் கொண்டு போய்விடுவான்! இப்படி ஒரு ஒத்திகைக்குள் ஓராயிரம் மாற்றங்கள்! எப்படியோ ஒத்திகை சில நாட்கள் நடந்து நாடகத் தேதியும் குறிக்கப்பட்டது.

மேக் அப் பொறுப்பு, ஆடை அணி அலங்காரம், ஜடை சிங்காரம் முதலியவற்றை கல்பகம் மாமி, மீனாட்சி அக்கா முதலியவர்கள் நடத்தினார்கள். நாங்கள் எங்களுக்குத் தெரிந்த எதிர்வீடு, பக்கத்துவீடு போன்ற வீடுகளுக்கு அழைப்பு அனுப்பினோம். எல்லோரும் வந்தனர். நாடகம் ஆரம்பமாகியது. முதல் காட்சி சரியாக நடந்தது. என் தம்பி குமார் வசனத்தை மறந்துவிட்டான்! உடனே முரளி, 'என்னடா மறந்துட்டியா?' என்று கேட்டுவிட்டுப் பெரிதாக சிரித்தான். அப்புறம் நாடகம் அதோகதிதான்! ஒரே கும்மாளம்! பெரியவர்களும் கலாட்டா செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இப்படியாக அன்று நாடகம் முடிந்துவிட்டது. இனி இவர்களை வைத்துக்கொண்டு நாடகமே போடுவது இல்லை என முடிவு செய்தேன்.

சில நாட்கள் கழித்து முரளி தன் சகாக்களுடன் என்னிடம் வந்து, 'சாந்தி, நாம் மறுபடியும் 'சீனுவின் சாமர்த்தியம்' போடலாமே என்ருன். நான் வரவே மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். நாங்கள் ரகளையே செய்யமாட்டோம் என்ருர்கள். சரி போடலாம் என்றேன் நானும்.

நாடக தினமும் வந்தது. நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது நடுவில் முரளி தன் வேலையை செய்தான். உடனே அந்தக் காட்சிக்கு வேண்டாதவர் களான குமார், சங்கர் எல்லோரும் வந்தனர். உமாவும், கௌரியும் எதையும் கவனி யாமல் நடனம் ஆடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு ஒரே ஆத்திரமாக வந்தது. எல்லோரையும் வைதேன். உடனே ஒரே ரகளை. அப்புறம் அத்தான் வந்து முதலிருந்து ஒழுங்காக போடும்படிச் செய்தார். கடையில் எல்லோருக்கும் மிட்டாய் வழங்கினர்.

மறுபடியும் நாங்கள் 'வனரோஜா' என்னும் நாடகம் போட்டோம். இதில் பக்கத்து வீட்டில் உள்ள நடிகை நடிகரான பத்மா, விஜி பங்கெடுத்துக் கொண்டனர். இதில் அரசனுக முரளியும், ராஜகுருவாக குமாரும் நடித்தனர். சேவகனுக நடித்த விஜி "அரசே உங்களுக்கு கடிதம் வந்துள்ளது." என்பதற்குப் பதிலாக லெட்டர் வந்துள்ளது என்ருன். உடனே முரளி "என்னடா மெட்ருஸ் பாஷை பேசறே" என்ருன். பிறகு ராஜகுருவாக நடித்த குமாரின் தாடியை பிய்த்தான். ஒரே சிரிப்பு! கும்மாளம். முரளி விகடம் செய்தான். கதாகாலட்சேபம் செய்தான். நாங்கள் பின் என்ன செய்வது? மங்களம் பாடினேம். மிட்டாய் சாப்பிட்டோம். நாடகம் தவறினுலும் தவறலாம். மிட்டாய் தருவது தவறவே தவருது.

என் ராஜாமணி அத்தானின் தூண்டுதலால் கிராமப் பள்ளிக்கூடம் என்னும் நாடகம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இதில் புதிதாக ராஜாமணி அத்தான் பெண்ணுகிய கீதா பங்கெடுத்துக்கொண்டாள். இதில் முரளி பள்ளிக்கூடத்தை பார்வையிடும் இன்ஸ்பெக்டராக வருகிருன். ஆனல் அவன் நிஜத்தில் இன்ஸ் பெக்டர் அல்ல. அவனை இன்ஸ்பெக்டராக நினைத்துக் கொள்கிருர் வாத்தியார். அந்த வாத்தியாராக நடித்தேன் நான். இன்ஸ்பெக்டருக்கு வாத்தியார் இளநீர் கொடுக்கிருர். அதற்காக ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தேன். உடனே அவன் "என்ன வாத்தியார் சார்! இளநீருக்குப்பதில் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்து ஏமாற்றுகிறீர்களே, எனக்கா தெரியாது உங்கள் ஏமாற்று வித்தை" என்ருன். உடனே எல்லோரும் கொல் என்று சிரித்தனர். அதே நாடகத்தில் வாத்தியாராக நான் இன்ஸ்பெக்டரிடம் மற்ருெரு வாத்தியாருக்காக லீவு லெட்டர் கொடுப்பதுபோல் ஒரு காட்சி வந்தது. அப்போது நான் மேஜை மேல் கிடந்த ஒரு நோட்டீஸை எடுத்து அவரிடம் கொடுத்தேன். உடனே அவன் அதிலுள்ள நிகழ்ச்சி நிரலை உரத்த குரலில் படிக்க ஆரம்பித்தான். மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.

இந்த பிரச்சினைகளைத் தவிர இன்னும் சில புதிய பிரச்சினைகளை எழுப்பு வார்கள். "திரை வேணும் வேணும், இது எல்லாம் இருந்தால்தான் நாங்கள் நடிப்போம். இல்லாவிட்டால் நடிக்கவே மாட்டோம்," என்பார்கள். போன லீவில் பொழுது போக்கிற்காக நாடகம் நடத்தினேம். இந்த லீவில் பொழுபோக்கிற்காக அதைப்பற்றி கட்டுரை எழுதிவிட்டேன்.

---

## ஆசிரியரும், மாணவரும்!

கல்வி நிலையத்தில் ஒரு நாள் மாலை நிறைய வேலையிருந்தபொழுது மாணவர்களும் உற்சாகமுடன் பங்குகொள்ள முன் வந்தனர். அவர்கள் ஆசிரியர்களுடன் அளவளாவிக்கொண்டும், அன்புடன் அவர்களுடைய குணுதிசயங்களை வர்ணித்துக்கொண்டும் இருந்தனர்.

அப்போது ஒரு மாணவர் வியந்தவாறு "எஸ். வி. எஸ். ஸுக்குத்தான் வெற்றிலை, பாக்கு, புகையிலை ஒரு கெட்ட பழக்கங்கூட இல்லை" என்று சொன்னர்.

"என்ன செய்வது? எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் கற்றுக்கொள்ள மாட்டேன் என்கிருரே?" என்று அதரத்தில் நவரஸமும் ததும்ப பதிலளித்தார், திரு. பி. எஸ். ராமையா.

# மாணவச் செல்வர்கள்

[இந்தப் பகுதியில் மாணவர்கள் அறிமுகமாகிறார்கள். ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல மற்ற மூவர் அவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்கள்.]

**ஆர். நாச்சிமுத்து :** "எங்களூரில் நான் நாடகம் ஆரம்பித்தால் சரியாகப் பத்து மணி என்று அர்த்தம்"



"ஷாப் சட்டப் பிரகாரம் 'ரிகர்சல்' கடையைத் திறப்பார். நேரம் முடிந்ததும் பலகையைப் போட்டுக் கொண்டு கணக்குப் பார்ப்பார்"—**அருணாமோகன்.**

"கலைஞர் வியாபாரியாகவில்லை. வியாபாரி கலைஞராகி விட்டார்"

—**வே. ரங்கராஜன்.**

"நலந்தானே!"—**மு. லியோ.**

**வே. ரங்கராஜன் :** "கடுமை + இல்லை = கலை என்பதே என் கருத்து"



"பி.காம் வகுப்பில் இப்படித்தான் கணக்குக் கற்றுக் கொடுத்தார்களோ?"—**ஆர். ராமகிருஷ்ணன்.**

"அன்னை பராசக்தி அருள் புரிவாளாக"—**செ. முத்துகிருஷ்ணன்.**

"கல்வி நிலைய 'ரிஸர்வ் ஹீரோயின்'!"—**ஆர். நாச்சிமுத்து.**

**அருணாமோகன் :** "நான்கூடப் பெண் வேடத்தில் நடித்திருக்கிறேன்"



"இருந்தாலும் ரங்கராஜன் இருக்கும் வரையில் கல்வி நிலையத்தில் 'ஹீரோயின் சான்ஸ்' உங்களுக்கில்லை"—**சிவ. இளங்கோ.**

"நாற்று நடும் கை, நல்ல கை நாடகத்தைச் செழிக்க வந்த கொங்கு நாட்டுக்கை"—**கோமல். சுவாமிநாதன்.**

"நல்லவருக்கு நல்லவர்"—**செ. முத்துகிருஷ்ணன்.**

**எஸ். எம். ராமன் :** "என் பெயர் ராமன், எல்லோருமாகச் சேர்ந்து என்னை ராவணனாக்கி விட்டீர்கள்"



"சரித்திர நாடகத்திற் கேற்ற சரியான ஆள்"—**சிவ. இளங்கோ.**

"மேக்-அப்புக்கு முந்திக்கொள்வார். ரிஹர்சலுக்குப் பிந்திக் கொள்வார்"—**வே. ரங்கராஜன்.**

"ஒத்திகைக்குத் தாமதமாக வருவதனால் காப்பிச் செலவை நீர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்"—**ஆர். நாச்சிமுத்து.**

**ஆர். ராமகிருஷ்ணன் :** "ஐந்து—என்னுடைய அதிர்ஷ்ட நம்பர்"



"நடிப்பில் மன முனைப்பு அதிகமோ என்னமோ ராமகிருஷ்ணன் உடல் இளைத்துக் காணப்படுகிறார்"—**கோமல் சுவாமிநாதன்.**

"நேற்று ஹிந்தி ஆசிரியர்; இன்று நாடகக் கலை மாணவர்; நாளை...?"
—**வே. ரங்கராஜன்.**

"உம்மைக் காட்டிலும் மூத்த மாணவர்களுக்கு எப்படித்தான் பாடம் சொல்லிக் கொடுத்தீரோ"—**சிவ. இளங்கோ.**

**ராதா கிருஷ்ணன் :** "இங்கு வந்த பிறகு எனக்கு மனமுனைப்பு அதிகமாகி யிருக்கிறது".



"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை உணராதவர்"
—**சிவ. இளங்கோ.**

"நாடகக் கல்வி நிலையத்தின் நகைச்சுவை மாணவர்"
—**வே. ரங்கராஜன்.**

"இவர் அமைதியாக இருப்பதைவிடச் சிரிப்பது ஆபத்து"
—**எம். லியோ.**

**எஸ். கே. சொருபன் :** "நடிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால் நாடகக் கலையில் ஆர்வமுண்டு".



"நீர் பேச ஆரம்பித்தால் நான் தூங்க ஆரம்பித்து விடுவேன்"
—**ஆர். ராமகிருஷ்ணன்.**

"கோட்டயம் சென்ற கல்வி நிலைய முதல் தூதுவர்"
—**சிவ. இளங்கோ.**

"அன்ன நடை ஆண் சிங்கம்"—**எம். லியோ.**

**ஜோகி :** "செலக்ட் செய்யவில்லை என்றால் என் போட்டோக்கள் இரண்டையும் திருப்பி அனுப்புமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்".



"மலைப் பகுதியில் இருந்து வந்தாலும் கலையிலே உமக்கிருக்கும் ஆர்வம் மலையை விடப் பெரிது"—**சிவ. இளங்கோ.**

"சினிமாவிற்கு சந்திரபாபு; நாடகத்திற்கு ஜோகி பாபு"
—**ஆர். நாச்சிமுத்து.**

"ஏதாவது காரணம் சொல்லி வகுப்பிலிருந்து 'லீவு' பெற்றுச் செல்லுவதில் சமர்த்தர்"—**ஆர். ராமகிருஷ்ணன்.**

**நேமிநாதன் :** " நான் ஒரு மிட்டாய்ப் பொட்டலம் !"



" இவர் ஒரு கம்பல்ஸரி போரி (Bore)ஸ்ட் "—**அருணுமோகன்.**

" அப்பா ஜமீன்தார் ; மகன் வேலைக்காரன் ஒரே நாடகத்தில் "
—**ஆர். ராமகிருஷ்ணன்.**

" நாலணு தபால் தலை அனுப்பாமலேயே கல்வி நிலைய விண்ணப்பத்தாள் பெற்ற சாமர்த்தியசாலி "—**சிவ. இளங்கோ.**

**கோமல் சுவாமிநாதன் :** " இன்றைய ஜனநாயக அமைப்பிலே.........!"



" ஓ ! கோமல் சுவாமிநாதன் பேச ஆரம்பித்து விட்டாரா "
—**ஆர். ராமகிருஷ்ணன்.**

" பிறரைப்பற்றி நகைப்பாக எழுதுவதில் கெட்டிக்காரர் "
— **அருணுமோஹன்.**

" புத்தகங்களைப் புரட்டுவதில் வித்தகர் "—**செ. முத்துகிருஷ்ணன்.**

**சி. வி. சூரியகுமார் :** " ஒரு காப்பியை இரண்டு பேராகச் சாப்பிட்டுக் கொண்டு நாடகம் நடித்த நாட்களுமுண்டு ".




" நம் கருத்தைத் தெரிந்துக் கொள்வார். தன் கருத்தை வெளியிட மாட்டார் ".—**ஆர். ராமகிருஷ்ணன்.**

" பாவம்! ஹாலிவுட்டில் பிறந்திருக்க வேண்டியவர் ".
—**ஆர். நாச்சிமுத்து.**

" புது முகம்.........சூரியகுமார் ".—**சிவ. இளங்கோ.**

**திருநாவுக்கரசு :** " ஏழு வருஷங்களாகப் பன்னிரண்டு நாடகங்களுக்கு மேல் கதாநாயகனுக நடித்திருக்கிறேன் ".



" வேஷத்திலும் முதுமையைக் கண்டு அஞ்சுபவர் ".
—**அருணுமோகன்.**

" Fiat ஆ ? Plymouth ஆ ? இதுவே இவர் பிரச்னை ".
—**கோமல் சுவாமிநாதன்.**

" மடிப்பு கலைந்தால் மனங் கலங்கும் ".—**மு. லியோ.**

**செ. முத்துகிருஷ்ணன் :**



"பராசக்தி...! எதையும் தாங்கும் இதயம் வேண்டும் !"

"கொங்கு நாட்டு செங்கரும்பே! தமிழகத்து மேடை தங்களுக்காகக் காத்திருக்கிறது"—**கோமல் சுவாமிநாதன்.**

"குமணன் பிறந்த நாட்டிலா நீர் பிறக்கவேண்டும் !"—**மு. லியோ.**

"உலகத்தை உள்ளங்கையென நினைப்பவர்"

—**கே. எம். கிருஷ்ணன்.**

**ஜி. பி. ராம்நாத் :** "பி. எல். படித்துவிட்டு 'கோர்ட்'டுக்கு (Court)ப் போய் நிற்பதைவிட 'ஆர்ட் ஸ்கூலு'க்கு (Art School) வந்து விட்டேன்"



"இவர் சிவில் கிரிமினல் வழக்குகளில் சம்மந்தப்படாதவர்"

—**கிராம முன்சீப் நற்சாட்சிப் பத்திரம்.**

"இவர் கைவசம் எப்பொழுதும் அவருடைய போட்டோக்கள் ஒரு டஜன் இருக்கும்"—**செ. முத்துக்கிருஷ்ணன்.**

"தன் குற்றத்தை எடுத்துக் கூறுபவரைத் தண்டிக்காது விடமாட்டார்"

—**ஜி. ராஜசேகரன்.**

**ஜி. ராஜசேகரன் :** "தங்கமேனியும், அகன்ற முகமும், 32 இஞ்ச் சுற்றளவுமுடைய மார்பும், 5 அடி 5 அங்குல உயரமும் உடையவன் நான்".



"முன் அனுபவமே யில்லாத உமக்குக் கல்வி நிலையத்தில் இடம் கிடைத்தது பேரதிர்ஷ்டமே."—**எஸ். கே. சொருபன்.**

"அனுபவமே யில்லை! ஆனல் எல்லோரும் ஆசைப்பட்ட கதாநாயகன் பாத்திரத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டீரே !".

—**சிவ. இளங்கோ.**

"நல்ல நடிகரய்யா நீர்! நாச்சிமுத்துவையே சகுந்தலையாக நினைத்துக் கொண்டு உணர்ச்சியாக நடிக்கிறீர் !".—**கோமல் சுவாமிநாதன்**

**வெ. ச. நடராசன் :** "நான் இந்த நாடகத்துக்குத் தயாரிப்பாளராக இருந்தால் சந்திர குப்தனைத் தான் நடிப்பேன்".




"அதுதான் உங்களுக்குப் பட்டு என்ற 'பிட்' (Bit) கொடுத்திருக்கிறதே !"—**ஆர். நாச்சிமுத்து.**

"மார்லேன் பிராண்டோ—கோசல நாட்டு மன்னன். (கூனனையும் நிமிரச் செய்யும் ஆற்றல் படைத்தவர்)—**சிவ. இளங்கோ.**

"என்ருவது இவர் மிகவும் புகழுக்கு வந்தால் இவருடைய சலியாத உழைப்பு யாவருக்கும் வியப்பைத் தரும்".—**மு. லியோ.**

**கஸ்தூரி :** "கஸ்தூரி, கோடம்பாக்கம் என்று போட்டால் போதும், தபால் என்னைத் தேடி வந்துவிடும்".



"கிரிக்கெட்டில் ஒரு கால் ; நாடகத்திலே ஒரு கால்".

—**கோமல் சுவாமிநாதன்.**

"அப்படியென்றால் ஆபீஸில் காலை வைப்பதில்லையா ?".

—**சிவ. இளங்கோ.**

"அதிகம் கள்ளம் கபடமில்லாதவர் !".—**செ. முத்துக்கிருஷ்ணன்.**

**மு. லியோ :** "நான் இங்கு வந்து சேரும் வரை என்னை சிறந்த நடிகனுகக் கருதிக் கொண்டிருந்தேன்".



"தீராத விளையாட்டுப் பிள்ளை ; ஆனால் இவரால் யாருக்கும் இல்லை தொல்லை".—**சிவ. இளங்கோ.**

"விழி வழி புகுந்து பலருடன் விளையாடுவார்".—**வே. ரங்கராஜன்.**

"நடனம் பயில உடலை வளைத்துக் கொண்டிருக்கிறார்".

—**ராஜசேகரன்.**

**சுந்தரேஸ்வரன் :** "ஆயிரம் பேருக்கு முன்னால் பேச அஞ்சாதவன் ; இங்கே பேச எழுந்தால் தடுமாறுகிறது".



"ஐயா, இப்படி ஒரு நிமிஷம் வருகிறீர்களா ?"

—**ஆர். ராமகிருஷ்ணன்.**

"யாரைப் பற்றிக் கேட்டாலும் நல்லதைத் தவிர வேறெதையும் சொல்லத் தெரியாது இவருக்கு".—**வே. ரங்கராஜன்.**

"அமைதி ! அமைதி ! அமைதி !".—**சிவ. இளங்கோ.**

**கே. எம். கிருஷ்ணன் :** "கற்றது கைம்மண்ணளவே யாயினும், அதனின்றும் வழுவாது நடக்க வேண்டுமென்பதே என் லட்சியம்".



"நிறை குடம் ; சில சமயங்களில் தளும்புவதும் உண்டு".

—**ஆர். ராமகிருஷ்ணன்.**

"சந்தம், அணி, சப்தம் என்ற மூன்று சகடை வண்டியில் தம் சரக்கை ஏற்றிச் செல்லும் நூதன கவிஞர்".

—**வே. ரங்கராஜன்.**

"நீர் பிடித்த முயலுக்கு எத்தனை கால் ?".—**மு. லியோ.**

குப்புசாமி :

"பெரிய நடிகனுக வேண்டும்... எல்லாரையும் பிச்சு உதறணும் பிச்சு ".

"கொதிக்கும் நீர்க்குடம்".—கே. எம். கிருஷ்ணன்.

"மாணவருக்கு மடல் அனுப்பாமல் மணம் செய்து கொண்டதேனே ?".—சிவ. இளங்கோ.

" தமக்கு வேண்டிய பாத்திரம் கிடைக்காமல் போனுல் இவர் உயிரைக் காத்தலரிது ".

—ஆர். ராமகிருஷ்ணன்.

சிவ. இளங்கோ :

"சென்ற ஆண்டு இந்தியப் பிரதமர் நேருவை சந்திக்கச் சென்ற என். ஜி. ஒ. சங்க தூது கோஷ்டியில் நானும் ஒருவனுகச் சென்றிருந்தேன் ".

"உணவும் காற்றுங்கூட இல்லாமலிருப்பார் இளங்கோ. ஆனல் இருபத்து நான்கு மணி நேரமும் படுக்கையில் சாயாமல் இருக்கமாட்டார் ".—ஆர். ராமகிருஷ்ணன்.

"இளங்கோவுக்குப் பெண் கொடுக்க விரும்புபவர் தயவு செய்து 'ரோட்டரி பிரஸ்' வைத்துக் கொண்டு விண்ணப்பிக்கவும் ".—மு. லியோ.

"இளங்கோவினுடைய எழுத்தா ?... அவரையே படிக்கச் சொல்லுங்கள், கேட்போம் ".

—எஸ். வி. ஸஹஸ்ரநாமம்.

வி. சாந்தா :

"நாட்டியம் மட்டும் ஆடத்தெரியும் என்றிருந்த என்னை நடிக்கவும் சேர்த்துக்கொண்ட 'கல்வி நிலையத்தாரை' வாழ்த்துகிறேன் ".

"மார்க்ஸிம் கார்க்கி எழுதிய 'இருபத்தாறு ஆண்களும் ஒரு பெண்ணும்' என்ற சிறு கதை நினைவுக்கு வருகிறது ".—கோமல் சுவாமிநாதன்.

"வசந்தாவுக்கு ஓட்டு போடாதற்காக சக மாணவர்கள் என்னை மன்னிப்பார்களாக ".

—கே. டி. ராதாகிருஷ்ணன்.

"கல்வி நிலைய விஜயலக்ஷ்மி பண்டிட் ".—ஆர். ராமகிருஷ்ணன்.

## கல்வி நிலையத்தில் ராமாயணம் !

கல்வி நிலைய மாணவர்கள் மகாபலிபுரம் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தனர். மகாபலிபுரத்தில் நாடக ஒத்திகைகளை நடத்தலாம் என்று அபிப்பிராயம். ஆனல் அதில் ஒரு பெரிய பிரச்சினை நடிகைகளைப் பற்றியது. நடிகைகளை அழைத்துக் கொண்டு சென்றல் அவர்களுக்குத் துணையாக அவர்களுடைய உறவினர் இரண்டு பேர்களாவது வருவார்கள். அவர்களைக் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருக்குமென திரு. ராஜாமணி அபிப்ராயப்பட்டார்.

அப்போது ஒரு மாணவர் ராமர் காட்டுக்குப் போகும்போது லட்சுமணனும் சீதையும் கூடவந்தது போல நடிகைகளோடு யாராவது துணை வரத்தான் செய்வார்கள் என்று தன் கருத்தைத் தெரிவித்தார்.

உடனே ராஜாமணி அப்படியானல் நாம் வானர சேனைகளாக இருக்க வேண்டியதுதான் என்ருர்.

கல்வி நிலையம் அதிர சிரிப்பொலி எழுந்தது.

# நல்லாசிரியரும் நல்மாணவரும்!

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்
திங்களன்ன கல்வியும் திங்களொடு.
ஞாயிறன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும் வெஃகா வுள்ளமும்
துலேநா வன்ன சமநிலே யுளப்பட
எண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாஅ ளாண்மையும்
உலகியலறிதலும் நிலேயுயர் தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருளுணர்த்துஞ் சொலல் வன்மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்.
இன்னேரன்ன தொன்னெறி மரபினர்
பல் பெருஞ்சிறப்பின் நல் லாசிரியர்
அறனே பொருளே அன்பென மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலே
முன்னர்க் கூறிய எண்வகை யுறுப்பினுள்
ஏற்பவை யுடைய ராகிப் பாற்படச்
சொல்லியப் பொருளே சொல்லியாங் குணர்த்தலும்
சொல்லிய வகையொடு சூழ்ந்துநன் கறிதலும்
தன்னே ரன்னேர்க்குத் தான் பயன் படுதலும்
செய்ந் நன்றி யறிதலும் தீச்சார் பின்மையும்.
மடிதடு மாற்றம் மானம் பொச்சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை இன்மையும் சென்று வழிபடுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்பறிந் தொழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினுதலும் விடுத்தலும் உரைத்தலும்
உடையோ ராகி நடை யறிந் தொழுகுநர்
நன்மாணக்க ரென்ப மண் மிசைத்
தொன்னூற் பரவைத் துணிபுணர்ந்தோரே!

**ஆத்திரேயன் பேராசிரியன் சொன்னது**

## நாடகத்தில் பஞ்சசீலம்

கல்வி நிலையத்தில் பயிற்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் 'பிளாக் போர்டில்' மாணவர்கள் தினமும் காலையில் ஏதாவது நல்லதொரு கவிதை எழுதி நாளை நன்கு தொடங்குவது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் காலையில் நாடக ஒத்திகைகளுக்குவேண்டி ரஸமான ஐந்து விதிகள் குறிக்கப்பட்டிருந்தன. அவைகளின் கருத்து பின்வருமாறு :

1. ஒத்திகைக்குத் தவருமல் காலம் தாழ்த்தாமல் வரவேண்டும்.
2. ஒத்திகையின் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அமர்ந்திருக்க வேண்டும்.
3. தன் பாகத்தைத் தவிர வேறு ஏதாவது யோசனை தோன்றினல் அதை உரிய காலத்தில் உரியவரிடம் சொல்லவேண்டும்.
4. தன் பாகத்தை சரிவரப் படித்தும் தயார் செய்து கொண்டும் வரவேண்டும்.
5. நாடகத்தின் முழு வெற்றியில்தான் வெற்றியைக் காண வேண்டுமே தவிர தான்மட்டும் தனியாக முன்னல் தெரிய வேண்டுமென எண்ணக் கூடாது.

## இது தான் நாடக மேடை

பொதுவாக ஒரு சம்பவம் நிகழ்ந்த செய்தியை எடுத்துச் சொல்லுகிறவன் அல்லது ஒரு உணர்ச்சியை வெளியிடுகிறவனுக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பது மனித இயல்பு. அவன் சொல்வதைக் கேட்பவர்களுக்கு அவ்வளவு முக்கியமான இடம், பிரதானமான இடம் கிடையாது. இது நாடக மேடையில் இருந்து தோன்றி வளர்ந்த ஒரு இயல்பு என்றுகூடச் சொல்லலாம். ஒருவன் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி விவரிப்பதை மற்றவர்கள் ரொம்ப கவனத்துடன் கேட்பது சகஜம்.

ஆனல் நிகழ்ச்சியை விவரிக்கிறவன் பின்னல் ஒதுங்கி நிற்க, நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட பாத்திரங்களே முன்னலே வந்து அந்த நிகழ்ச்சி எப்படி நேர்ந்த தென்று நடத்திக் காட்டும்போது, அதற்கு விசாலமான இடம் அவசியமாகிறது. அதுதான் நாடக மேடை.

—"கலாஸாகரம் ராஜகோபால்".

## பாவம்! கிளாஸ் டம்ளர்கள்!

எனெஸ்கே நாடக சபாவின் பைத்தியக்காரன் நாடகம் அரங்கேற்றப் பட்டது. அந்நாடகத்தில் ஒரு காட்சி. தங்கை விதவையாகி விட்டாள் என்ற துயரத்தில் சகோதரன் மூழ்கியிருக்கும் கட்டம். அவன் தங்கையிடம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிருன். அவள் தண்ணீர் கொண்டு வருவதற்குள் இவன் மனநிலை மாறிவிடுகிறது; தண்ணீர் வேண்டாம் என்று அதை அவன் திருப்பி விடுவதாக சம்பவம். ஆனல் அன்று தங்கை அதை வாங்கும்போது எதேச்சையாக கிளாஸ் டம்ளர் கீழே விழுந்து நொறுங்கியது. அந்தக் கட்டம் ரசிகர்களிடையே மெய்சிலிர்ப்பை உண்டுபண்ணி, அக்காட்சியின் ஜீவ நாடியான துயரச் சுவையை அதிகமாக்கியது.

பிறகு கேட்க வேண்டுமா? ஒவ்வொரு நாள் நாடகத்திற்கும் ஒரு கிளாஸ் டம்ளர் "குளோஸ்". சில நாட்கள் கிளாஸ் டம்ளர் கீழே விழுந்து உடையாமல் இருந்துவிடும். அப்போதெல்லாம் நடிகர்கள் துயரப் படுவார்களாம்.

# நாடகமும் நாகரிகமும்

[அ. வெ. சுப்பிரமணியன்]

நீள அகலங்களைக் கஜக் கோலினல் அளக்கிறேம். ஒரு நாட்டின் நாகரீக வளர்ச்சியை அளக்க எதனைக் கஜக் கோலாகப் பயன்படுத்தவேண்டும்? நாகரீகம் கலையாக வெளிப்படுகின்றது. குப்தர்களின் காலம் பொற்காலம் என்றும் அவர்கள் அரசாண்ட காலத்திலே மக்களின் நாகரீக வளர்ச்சி என்றுமில்லாத உயர்ந்த நிலையை அடைந்திருந்தது என்றும் சரித்திரம் கூறுகிறது. இதற்குச் சான்றுகக் குப்தர்களின் காலத்துக் கலை வளர்ச்சியைக் காட்டுகிறார்கள் சரித்திராசிரியர்கள். அஜந்தாவின் கலைத்தரம் குப்தர் காலத்து நாகரீகத்தின் தரத்துக்கு ஓர் அளவு கோல் ஆகிறது. குப்தர் காலத்தில் வாழ்ந்த காளிதாசனின் கவித்திறத்தைக் கொண்டு அக்கால மக்களின் பண்பாட்டினை ஒருவாறு உணர்ந்து கொள்ளுகிறேம். இலக்கியம், நாடகம், சித்திரம், சங்கீதம்—இவற்றின் உயர்வினைக் கொண்டே ஒரு நாட்டின் நாகரீகத்தை ஒருவாறு மதிப்பிடலாம்.

இந்நோக்கில் பார்த்தால் நாம் வாழும் இக்காலத்தில் நாகரீகம் முதிர்ச்சி யடைந்திருக்கிறது என்று கூறமுடியுமா? நமது பண்பாட்டினை மதிப்பிட்டுப் பார்த்தால்—நம் காலத்துக் கலை வளர்ச்சியை ஓர்ந்தால்—நம் நாகரீகம் சற்றும் முதிர்ச்சியடையாத நிலையில்தான் இருக்கிறது என்ற உண்மை உதயமாவதைக் காணலாம். 1500 ஆண்டுகளுக்கு முன் கலைஞன்கையிலே, கற்பனையிலே, உளியின் முனையிலே பிறந்த கலைப் பொருள்களின் தரத்தை இக்காலத்துக் கலைஞர்களின் சிருஷ்டிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அடைந்திருக்கும் பின்னேற்றத்தை ஓரளவு மதிப்பிடலாம். அன்று கலையுலகத்தில் அழியாத சிருஷ்டிகளை ஆக்கி உலகுக்குத் தந்த பாரதநாடு இன்று இந்நிலையை அடையக் காரணம் என்ன? மக்கள் எதை ஆர்வத்துடன் தேடுகின்றார்களோ அதனையே முடிவில் அடைகிறார்கள் என்பது இயற்கையின் நியதி. சென்றுபோன சகாப்தங்களில் மக்கள் கலைவளர்ச்சி யையும் ஆன்மீக முன்னேற்றத்தையுமே வேண்டினார்கள்; முயன்று பெற்றார்கள். இக்காலத்தில் நாம் தீவிரமாகத் தேடும் பொருள்கள் யாவை? தனிப்பட்ட மனிதர்கள் பணத்தையே வாழ்நாள் முழுதும் ஒரே நோக்காகத் தேடுகிறார்கள். நாடுகள் ஒரே வீச்சில் ஒரு நகரத்தையே சர்வநாசம் செய்யும் வெடிகுண்டுகளைத் தேடுகின்றன! பணத்தையும் ஆயுதங்களையும் குவித்துப் பார்த்து மகிழ்வடைகிறேம் இந்நாளில். இச் சூழ்நிலையில் கலை வளர முடியுமா?

கலை வளர்ச்சியை அந்நாளில் தீவிரமாக வேண்டினார்கள் மக்கள் என்று சொன்னேம். கலைப் பொருள்களை ஆக்கித் தந்த கலைஞர்களை அந்நாளில் மக்களும் அரசனும் விரும்பிப் போற்றினார்கள். முடியுடை மூவேந்தர்கள் பாரியின் குன்றத்தை முற்றுகையிட்டு வெற்றி காணாத நிலையில் கபிலர் இயற்றிய பாட்டு ஒன்று புற நானூற்றிலே இடம் பெற்றிருக்கிறது. "அரசர்களே, நீங்கள் ஆயுத வலிமையினால் எங்கள் பாரியை வெல்ல முடியாது. ஆனால் அவர் நாட்டைப் பறித்துக்கொள்ள ஒரு வழி சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் மூவரும் பாணர் உடையில் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் வாருங்கள். உங்கள் மனைவியர் விறலியர் வேடத்தில்

பின் தொடரட்டும். கலைஞர்களுக்கு எங்கள் அரசனின் சபையில் எல்லா உரிமைகளும் உண்டு. நீங்கள் பாரியின் முன் வந்து பறம்பு மலையை வேண்டினாலும் கொடுத்துவிடுவான், பெற்றுக்கொள்ளலாம்'' என்ற பொருளமைந்த பாடல் அது. கலைஞர்களை அரசன் கௌரவித்த முறையைப் பாருங்கள்! பாணரும், கூத்தரும் அரசனின் நோக்கிலே உயர் மக்களாக வாழ்ந்தார்கள். அந்நாளிலே. கலைஞர்களை இழிகுலத்தவர்களாக நினைக்கும் இக்காலத்தில் கலை வளர்ச்சியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? புலவர்கள் அந்நாளில் தவறான வழியில் செல்லும் அரசர்களுக்கும் நல் வழி காட்டித் திருத்தினார்கள். நாட்டின் ஆட்சியில் கலைஞர்களுக்குப் பெரும் பங்கு இருந்தது. கலைஞன் நாட்டின் ஆதர்ச புருஷனாக வாழ்க்கை நடத்தினான். அவனை அரசன் ஆதரித்ததால் அரசனுக்குப் புகழ் ஏற்பட்டது. அரசன் மதிக்கவில்லை என்று தெரிந்தால் "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே'' என்று கலைஞன் வெறுப்புடன் வெளியேறிவிடுவான். கலைஞனின் சினத்துக்கஞ்சி நல்லாற்றில் சென்றது அரசும் நாடும்.

ஆக, நாடு முன்னேற வேண்டுமானால், நம் நாகரீகம் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், கலைஞர்களைப் போற்றுங்கள்! நடிகனை அமரத்துவம் பெற்ற கலையை சிருஷ்டித்துத் தருகின்ற உபகாரியாகப் பாராட்டுங்கள்! கூத்தாடி என்று பழிக்காதீர்கள்! போர் முனையில் பாரசீக மன்னனை முறியடித்த நிகழ்ச்சியைவிட ஈஸ் கைலஸ் (Aeschylus) ஒரு புதிய நாடகம் எழுதியதைப் பெரிதாக மதித்துக் கொண்டாடினர் கிரேக்க மக்கள்! கலைப் பொருளுக்கு உயர்ந்த மதிப்பை அளியுங்கள்! அரசியல் பொதுக் கூட்டங்களைத் தவிர்த்து நாடக மேடையின்மேல் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். சிறந்த நடிகன் நாட்டின் ஆட்சி மன்றத்தில் வீற்றிருக்கும் நாள் எந்நாளோ, கலையில் வல்லுநன் மந்திரியாக நாடாளும் நாள் என்றோ அன்றுதான் நம் கலைகள் வளர்ச்சி பெறும். நாமும் நாகரிகமடைந்த மக்கள் என்ற பெறற்கரிய பெயரைப் பெறுவோம்.

★

## கல்வி நிலையத்தில் ஏகலைவர்கள்!

கல்வி நிலையத்தில் தீபாவளி கொண்டாடப்பட்டது. விருந்துக்கு முன்பு ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்தினிடமிருந்து ஆளுக்கு அரை ரூபாய் பரிசு பெற்ற மாணவர்கள் நம்பிக்கையுடன் ஆசிரியர் ஸ்ரீ பி. எஸ். ராமையா அவர்களை அணுகி அவரையும் தங்களுக்கு தீபாவளிப் பரிசு தரும்படி கேட்டனர். ஆனால் அவரோ மாணவர்கள்தாம் தமக்குக் குரு தட்சிணை கொண்டுவர வேண்டுமென்று கூறிவிட்டார்.

குரு தட்சிணையாகத் தர தங்களிடம் கட்டை விரல்கள் உள்ளன என்று மாணவர்கள் கூறியதும் எங்கும் சிரிப்பு மயமாகியது.

## Ravai's Prints are Good Prints

SOUVENIRS, BROCHURES, MAGAZINES, INVITATIONS, BOOK-BINDINGS AND PHOTO ENGRAVINGS.

★

*Manufacturers of:*

Cartons, Steel Dies, Copper Plates, Wax Seals, Peon Badges, Rubber Stamps, Door Plates, etc.

★

**Phone: 85269**

★

RAVAI & SONS

QUALITY PRINTERS

148, Big Street, Triplicane, MADRAS-5.

ஸ்ரீ

## பவானி

### ஜுவலரி

பொன், வெள்ளி, வைர நகை வியாபாரம் & தயாரிப்பாளர்கள்.

65, பைகிராப்ட்ஸ் ரோடு

திருவல்லிக்கேணி : சென்னை-5.

# புதிய எவர்சில்வர் மாளிகை!

**A. T. N. தம்மண்ண செட்டியார் & கோ.,**

(போஸ்டாபீஸ் எதிரில்)

ராஜ வீதி : கோயமுத்தூர்.

(தலைமை ஆபீஸ்: திருப்பூர்)

(ஸ்தாபிதம்: 1944)

பித்தளை, செம்பு & ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் எல்லா தினுசுகளிலும் விலை சகாயமாகவும் நல்ல வேலைப்பாடு உள்ளதாகவும் ஏராளமான தினுசுகள் வந்துள்ளன.

தங்கள் தேவைக்கு ஒரு முறை விஜயம் செய்யக் கோருகிறோம்.

குறிப்பு :—ஆர்டர்கள் பேரில் தங்கள் தேவைக்கு உகந்தபடி எல்லாவித பித்தளை, செம்பு & ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களும் தயார் செய்து கொடுக்கிறோம்.

**தங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்!**

'Grams :
" WOODLANDS "
Madras.

**BY POPULAR POLL**

'Phone :
86461 (4 Lines)
84221.

# WOODLANDS HOTEL

**EDWARD ELLIOTS ROAD, MYLAPORE, MADRAS-4**

ALWAYS GETS

**ELECTED THE BEST**

**VEGETARIAN, ROOMY, CLEAN AND COMFORTABLE HOTEL IN THE CITY.**

TEA PARTIES, LUNCHES AND DINNERS, ARRANGED IN JUST 24 HOURS IN OUR LAWNS.

— *Branches* —

**College Road,**
**COIMBATORE.**
'Grams: Woodlands, COIMBATORE.
'Phone: 111 & 1111

**5, Sampangi Tank Road,**
**BANGALORE-1.**
'Grams: Woodlands, BANGALORE.
'Phone: 2161.

K. KRISHNA RAO,
*Proprietor.*

# கல்வி நிலையமும் கல்வித் தகுதியும்

வெ. ச. நடராசன் *

''சுற்றியுள்ள நாடுகளை நோக்குவோம்—அங்கு
சொக்கும் புதுமைதனை நமதாக்குவோம்,''

—சுத்தானந்த பாரதியார்.

சேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையத்தின் விண்ணப்பத் தாளில் கல்வி நிலையத்தில் சேரும் மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. கல்வித் தகுதி வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. நான் முதன் முதலாக அதனைக் கண்ணுற்றபோது பெரிதும் வருந்தினேன். ஏனென்றால் எனக்கு மேற்குறித்த கல்வித் தகுதி கிடையாது. ஆனால் கல்வி நிலையத்தில் சேரவேண்டுமென்ற ஆவலோ அளவு கடந்து இருந்தது. நாடகம் சம்பந்தப்பட்ட ஒரு கல்வி நிலையம் தமிழகத்தில் தோன்றவேண்டுமென பல காலமாக கனவு கண்டுகொண்டிருந்தவன் நான். கனவு நனவானது கண்டு மகிழ்ந்தேன். ஆனால், கல்வித் தகுதி வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தது கண்டு கலங்கினேன். விண்ணப்பத் தாளை திருப்பித் திருப்பிப் படித்தேன். அதுபோது, என்போன்றோர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்தாற் போன்றதொரு வாசகம் அதில் காணக்கிடைத்தது.

அதாவது 'நாடகம் சம்பந்தமான முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மேற்படி தகுதிகளிலிருந்து விதி விலக்கு தரப்படும்' எனக் குறிப்பிட்டிருந்தது. அப்படியானால் எனக்கும் கண்டிப்பாக கல்வி நிலையத்தில் இடம் கிடைக்கும் என உறுதியாக எண்ணினேன். எனது நம்பிக்கை வெற்றி பெற்றது.

நாடகக் கல்வி நிலையத்தில் சேருவதற்கு முன் இந்தக் கல்வித் தகுதியைப் பற்றி நான் பலவாறு சிந்தித்ததுண்டு. தமிழக நடிகர் உலகிலே அன்று முதல் இன்று வரை பெரும்பாலும் கல்வித் தகுதி பெருதவர்களே சிறந்த நடிகர்களாகத் திகழ்ந்து வருகின்றனர். கல்வித் தகுதியுள்ள சில நடிகர்கள் மக்களிடையே செல்வாக்குப் பெறமுடியாமல் எதனாலோ ஒதுங்கிப்போனதும்கூட உண்டு. ஆங்கில நாடக உலகை உலுக்கி வைத்த பேரறிஞர் பெர்னாட்ஷா 'நான் பள்ளியில் எதனையும் கற்றுக்கொண்டதாகவே நினைவில்லை' என்று கூறுகிறார். கலைத் துறை மட்டுமல்ல, அரசியல் துறைக்குப் போனாலுங்கூட ஏழைகளைச் சிரிக்க வைத்த ஸ்டாலின் கல்வித் தகுதி பெருதவர்தான். மாசே துங் கல்லூரிக்கு வெளியில்தான் அதிகம் கற்றார்; இன்றும், தமிழக மக்களின் நெஞ்சினில் நீங்கா இடம் பெற்ற கலைவாணர் என். எஸ். கே. கல்வித் தகுதி பெருதவர்தான். இப்படிப்பட்டவர்களின் விஷயத்தில் எல்லாம் கலை வேறு, கல்வித் தகுதி வேறு என்றுதான் காணப்படுகிறது—படிப்பு வேறு, பண்பு வேறு எனப்படுதல்போல. ஆனால் குறிப்பிட்ட கால அளவுக்குள் நாடகக் கல்வி பயிலவேண்டுமானால் இன்றைய கால நிலைமையில் கல்வித் தகுதி அவசியம் தேவை என்பதைக் கல்வி நிலையத்தில் சேர்ந்த பின்தான் தெரிந்து கொண்டேன்.

தமிழ் மொழியில் நாடகக் கலை வளர்ச்சிக்குரிய மூலாதார நூல்கள் இல்லை. வாழ்க்கையின் ஏனைய முன்னேற்றகரமான துறைகளுக்கு நாம் மேலை நாட்டு அறிவைத் தேடி நிற்பது போலவே நாடகக் கலை விஷயத்திலும் ஆங்கில நூலறிவை

---

* கல்வி நிலைய மாணவர்.

நாம் நாடி நிற்கிறோம். நாடகக் கலைக்கு தேவைப்படும் ஒலி, ஒளி, ஒப்பனை, காட்சி ஜோடனை முதலியன பற்றிய விபரங்களை தெரிந்துகொள்ள ஆங்கில அறிவு மிகத் தேவை. அது சம்பந்தப்பட்ட பொருட்பெயர்களெல்லாம் இன்னும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படவில்லை. மேற்படி சொற்களைப் புரிந்துகொண்டு காரியமாற்ற வேண்டுமானால் ஆங்கில மொழியறிவு அவசியம் தேவைப்படுகிறது. சென்னை போன்ற நகரங்களில் வாழ்பவர்கள் கல்லூரியில் கால் வைக்காமலேயே ஆங்கில அறிவைப் பெற வாய்ப்பு இருக்கிறது. என்போன்றோர்க்கு அந்த வாய்ப்பு இல்லை. கல்வி நிலையத்தில் பயிற்சிபெற வந்த மாணவர்களிலேயே நான் ஒருவன்தான் ஆங்கிலம் அறியாதவன். இதனால், ஒரு தனி மனிதன் போன்ற உணர்ச்சிகூட இருந்தது. கல்வி நிலையத்தில் சில சமயம் நடக்கும் சொற்பொழிவுகளை நான் புரிந்து கொள்ளவே முடியவில்லை. உதாரணமாக ஒரு சமயம் வட இந்திய நடிகர் பால் ராஜ் சஹானி அவர்கள் கல்வி நிலையம் வந்து நாடகக் கலை பற்றி ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர். எல்லா மாணவர்களும் அந்தச் சொற்பொழிவைக் குறிப்பெடுத்தனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் அவரது உருவத் தோற்ற அமைப்புகள் பற்றித்தான் குறிப்பெடுக்க முடிந்தது !

இந்திய மண்ணில் பிறந்த வேதங்களையே ஆங்கில மொழிவாயிலாகத்தான் அறிந்து கொள்ளவேண்டியிருக்கும்போது நவீன நாடகக் கலையைப்பற்றி அறிந்து கொள்ள ஆங்கில மொழி அறிவு இன்றைய நிலையில் அவசியம் தேவைதான் என்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். எடுத்துக் காட்டாக ஒன்று கூறுகிறேன். ஒரு கூட்டம் ஒன்றில் 'பெரியார்' அவர்கள் பேசும்போது கூறினர் : "தமிழன் முன்னேற தமிழ் மொழியில் எவ்வித இலக்கியமும் இல்லை. தமிழ் மட்டும் கற்றவன் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது" என்று பெரியார் சொன்னர். அப்போது ஒருவர் எழுந்து 'தமிழைப் பழிக்கிருயே நீ யாருக்குப் பிறந்தவன் ?' எனக்கேள்வி எழுப்பினர். அதற்குப் பெரியார் "காலை எழுந்தது முதல் இரவு துயில்வது வரை ஆங்கிலேயனின் பழக்க வழக்கங்களைத் கடைப்பிடிப்பதன்மூலம் ஒவ்வொரு தினமும் எத்தனையோ தடவை தமிழன் ஆங்கிலேயனுக்குப் பிறந்துகொண்டே இருக்கிருன். இந்நிலையில் என்னைப்பற்றி நான் கவலை கொள்ளவில்லை," என்று கூறினர். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மேலைநாட்டு அறிவு புகுந்திருக்கிறது. அதன் உதவியால் நாம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம். ஆனால் இன்று ஒரு விசித்திரமான நிலையொன்றையும் காண்கிறோம். என்னவெனின் ஆங்கிலமொழியறிவால் நாம் வளர்ந்துகொண்டே, வாழ்வு வசதியைப் பெருக்கிக்கொண்டே அதனைக் குறை கூறும் முயற்சியிலும் ஈடுபடுகிறோம்.

பாரதியின் கூற்றுப்படி பிறநாட்டுக் கலைகளைத் தமிழ் மொழியுடன் இணைப்போம் ; வளருவோம். தமிழ் மொழி ஆட்சி மொழியாகிவரும் நேரம் இது, ஆனதால், தமிழில் புதிய புதிய சொற்களைப் படைத்து, தமிழை வளர்த்து, பிற மொழியின் துணையில்லாமலேயே நாடகக் கல்வியைப் புகட்டும் நிலைக்கு உயருவோம். ஆங்கில அறிவில்லாத என்போன்றோர்கள் தமிழ் மொழியின் மூலமே நாடகக் கல்வியைப் புரிந்துகொள்ளுமளவுக்கு தமிழில் நாடகக் கலைப்பற்றிய நூல்களைப் பெருக்குவோம். சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் இத்தகைய வளர்ச்சியைத் தூண்டும் ஒரு கருவியாக அமையும் என நம்புகிறேன்.

---

*For Special Occasion and General Use*
*famous House for*
**HAND TEX Fabrics SAREES AND DHOTIES**

'Phone : 4791

*Branch :* **NELLORE**

*Retailers to :* **B. & C. Mills and Mettur Mills Products.**
*Stockists of :* **All kinds of Handloom Sarees Dhoties & Cholies (Cotton & Silk)**

## THE BHARATHI MART (Private) LTD.,

**369, 371, N. S. C. Bose Road, (opp. High Court) MADRAS-1.**

*PERFECTION — SATISFACTION — OUR MOTTO!*

---

## *With compliments*

# The Southern Industrial Corporation Private Ltd.,

**6, ARMENIAN STREET,**

**MADRAS-1.**

★

*MANUFACTURERS OF :*

CHAINS

FASTENINGS

AND

SCREWED WIRE PRODUCTS

*Use always*

# Ambi's

PICKLES
APPALAM
PAPPADAM
SAMBHAR POWDER
RASA POWDER

★

*AVAILABLE AT :*

## AMBI'S CAFE

**6, BROADWAY : MADRAS-1.**

## சக்தி மலிவுப் பதிப்பு நூல்கள்

**மகாகவி பாரதியார் கவிதைகள்** ரூ. 1=50

மகாகவி பாரதியாரின் கவிதைகள் அனைத்தும் 512 பக்கங்கள். வெள்ளைக் காகிதம். இதுவரை அச்சில் வெளிவராத கவிதை களுடன். (மூன்றும் பதிப்பு.)

**திருக்குறள்** ரூ. 1=50

பரிமேல் அழகர் உரையுடன். மூலம்—உரைகளின் கடின பதங்களுக்கு உரையும். 512 பக்கங்கள். வெள்ளைக் காகிதம்.

**பிரதாப முதலியார் சரித்திரம்—சுகுண சுந்தரி** ரூ. 1=25

மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய அற்புத நாவல்கள். 350 பக்கங்கள்.

(தபால் செலவு தனி)

மற்றும் மலிவுப் பிரசுரங்கள் பல வெளிவரக் காத்திருக்கின்றன.

★

**சக்தி காரியாலயம்,**

**1/142, மவுண்டு ரோடு, சென்னை-6.**

★

கிளைக் காரியாலயம்: நாகப்பட்டணம், தாம்பரம்.

# நாடக ரசிகர்

## தி. ஜானகிராமன்

நாடகாசிரியருக்குத் தகுதி வேண்டும். எழுதுகிற சக்தி வேண்டும். நாடக உணர்வு வேண்டும். நடிப்பவருக்கும் தகுதி வேண்டும். ஆசிரியர் உருவாக்கின பாத்திரங்களை உருவம் மாருமல், கொலை செய்துவிடாமல் உயிர் கொடுத்து அரங்கத்தில் எழுப்பி, பார்ப்பவர் களின் உள்ளத்தில் பதிக்கவேண்டும். இப்படி ஒவ்வொருவருக்கும் தகுதி சொல்கிருர்கள். ஆசிரியன், நடிகன், காட்சி அமைக்கிறவர் (இந்தக் காலத்தில்), பின்னணி இசைவாளர்கள் எல்லோருக்கும் தகுதி சொல்கிருர்கள். ஆனல் இன்னும் ஒரே ஒருவருக்குத் தகுதி யாராவது சொல்லியிருக்கிருர்களா என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. அந்த ஒருவர் தான் பார்க்கிறவர். நாடகம் பார்க்கத் தெரியவேண்டுமா? கற்றும் கொள்ளவேண்டுமா? ரசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமா?

ஷேக்ஸ்பியரைப்போல, காளிதாசனைப்போல யாராவது நம் மொழிகளில் நாடகம் எழுதினல் அந்த நாடகம் வெற்றிகரமாக ஓடுமா? நம்பிப் பிழைக்கும் நடிகர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வயிற்றுக்குக் கொடுக்குமா என்றெல்லாம் கேட்கவேண்டியிருக்கிறது.

கத்தல், கூச்சல், அசட்டு பிரமை என்ன என்ன என்ற அல்பாயுசு ஆசையைக் கிளப்பித் தணிக்கிற உத்திகள் இவைகள் எல்லாம் வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. நாடகம் பார்க்கப்போகிறவர்களுக்கு நல்ல பொழுதாகவும் போகத்தான் வேண்டும். ஆனல் கலை நுட்பம், குறிப்பாக உணர்த்துதல், உண்மை—இவைகளைக் கழித்துவிட்டு, வெறும் வசனம், பாட்டு, உத்தி மேன்மைகள், இவைகள் மட்டும் தாண்டவமாடினல் வெகு நாள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

விரல் விட்டு எண்ணுகிற அளவுக்குமேல் நம் நாட்டில் உயர்ந்த, கலை முத்திரை பெற்ற நாடகங்கள் வராததற்குக் காரணம் பெரும்பாலும் ரசிகர்கள் என்றுதான் சொல்லவேண்டி யிருக்கிறது. ரசிகர்கள் ஏன் இல்லை என்று கேட்டுக்கொண்டேபோனல் எத்தனையோ குப்பைகளைக் கிளறியாகவேண்டும். குழந்தைகளைப் படிக்க வைக்கிற முறையிலிருந்து எல்லாவற்றையும் கிளறி ஆய்ந்துதான் ஆகவேண்டும்.

சினிமா, இலக்கியம், நடனம் எல்லாவற்றிலும் உள்ள பிரச்னைதான் இது. ஜனங்களுக்கு இது பிடிக்காது, புரியாது என்று யாரோ இரண்டு மூன்று பேர்கள் தீர்மானம் செய்கிருர்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்களிடம் பணம் குவிந்து கிடக்கிறது. அல்லது பணம் தேடிக்கொள்கிற வித்தையோ வசதியோ சேர்ந்து கிடக்கிறது. இந்த நாலைந்து பேர் சேர்ந்தால் நல்ல கலைகளை அமுக்கி, நஷ்டப்படுத்தி கழுத்தை நெரிக்கமுடியும். லங்காஷயர் துணிகளும் மேல்நாட்டு சாமான்களும் நம் நுண் தொழில்களைக் கழுத்தை நெரித்த கதைதான். கைத்தறிக்கு உலுப்பை தந்து உயிர் தருகிருர்ப்போல யாராவது உலுப்பை தந்து அனுதாச்ரம நிர்வாகம்போல கலையையும் காப்பாற்றத்தான் வேண்டும். ஜனங்களின் ருசியை நன்கு தெரிந்ததாகச் சொல்லிக் கொள்கிற பணக்காரத் தயாரிப்பாளர்கள் "இதற்கும் இருக்கட்டும்" என்று உண்மையான கலையழகு நிறைந்த முயற்சிகளுக்கும் அவ்வப்போது பணத்தைச் செலவழிக்கலாம் (அல்லது அழிக்கலாம்) என்று சிலர் சொல்கிருர்கள். இதற்கு இரண்டு வசதிகள் வேண்டும். முதலில் அந்தத் தயாரிக்கிற பணக்காரருக்கும் உண்மையான கலை முயற்சி என்று கண்டு மதிப்பிடுகிற திறமை வேண்டும். "என்னமோ சார்! பணத்துக்காக இதையெல்லாம் செய்கிறோம்". நல்லதும் பிழைக்கட்டும் என்றுதான் இப்படி ஒன்றிரண்டில் பணத்தைப் போட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு அழாமல் இருக்கிற தெம்பு வேண்டும். இரண்டாவதாக, அந்த மனத்தெம்பு இருப்பதில்லை. பெரிய தோரணையில் செலவழித்து பெரிய ஆடம்பரங்கள் செய்து பழக்கமாகிவிட்டால், இதற்கு நேரமிராது. மனசும் திரும்பாது. யோக்யனுயிருக்கிறவன் சூதாடியாகவோ, ஸ்திரீலோலனுக மாறுகிற கதை இது. திரும்பிவர மனமிராது. கையில் ஒன்றும் இல்லாமல் போனல்தான் உணர்வு வரும்.

ஆக ரசிகர்கள்தான் ஏதாவது செய்யமுடியும். அவர்கள் விடாப்பிடியாக நல்லதைத் தான் பார்ப்பேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டால்தான் உண்டு. அந்த ரசிகர்கள் முதலில் குறைவாகத்தான் இருப்பார்கள். அந்தக் கூட்டத்தைப் பெருக்குவதும் அவர்களால்தான் முடியும். ரசிகர்கள் என்று சொல்லும்போது சபைகளை விட்டுவிட முடியாது. ''சபா'' ''சபா'' என்று ரசிகர்கள் ஸ்தாபனரீதியாகக் கலையை ரசிக்கத் தொடங்கி விட்டார்கள். நல்ல நாடகங்களை வளர்க்கிற பணியை இவர்களைவிட வேறுயாரும் திறமையாகச் செய்துவிட முடியாது. நல்ல நாடகத்துக்கு பண வசூல் அதிகமாயிராது என்று அவர்களுக்குத் தெரியும். (பணம் வசூல் இல்லாத நாடகம் எல்லாம் நல்லதா என்று திருப்பிக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன்). அனுபவத்தில் தெரிந்தது. மெம்பர்கள் நிரந்தரமாக இருக்கிற சபையில் பணத்திற்காக டிக்கெட் துவாரத்தை நம்பியிருக்க வேண்டிய துரதிர்ஷ்டம் நிச்சயமாக இல்லை. சபை என்று சொல்லக்கூடிய அங்கத்தினர்களில் 60 சதமாவது நல்ல விஷயங்களை ரசிப்பார்கள் என்று தோன்றுகிறது. ஆக சபை நிர்வாகிகள் நல்ல நாடகங்களுக்கு அதிக ஆதரவு விடாப்பிடியாகக் கொடுத்து உதவலாம். அதாவது கைத்தறி வாங்குகிறது போல டிக்கட் துவாரத்தையே நம்பியிருக்கிற சபைகளைப்பற்றி பேச்சில்லை. மற்ற சபைகள் இதைச் செய்ய முடியும். நல்லதைக் கொடுத்துக் கொடுத்து ரசிகர்களின் எண்ணிக்கையைப் பெருக்க முடியும். சபைக் காரியதரிசியாகவும், தலைவராகவும், நிர்வாகஸ்தர்களாகவும் உள்ள பெருமக்களின் கையில்தான் சுவையை உயர்த்தும் பொறுப்பு இருக்கிறது.

சகுந்தலை நாடகம் தொடங்கும்போது ''பெரிய சபையாக இருக்கிறதே. நாம் ஜாக்கிரதையாகச் செயலாற்றவேண்டும்'' என்கிறான் ஸூத்ரதாரன். ''நீங்கள் எதையும் நன்றாகச் செய்கிறவர்களாயிற்றே. நகைப்பிற்கிடமாக, குறைக்கிடமாக ஒன்றுமிராதே'' என்கிறாள் நடி. ''இல்லையம்மா, வித்வான்கள் உவகை அடைந்தால் ஒழிய என் முயற்சியை நல்லதென நான் ஒப்புக்கொள்ள முடியாது. நல்ல கட்டுப்பாடும் திறமும் உள்ளவர்களுக்கு எத்தகைய பலன்கள் இருந்தாலும் தம்மைப்பற்றிய வரையில் அவநம்பிக்கை இருக்கத்தான் செய்யும்'' என்று விடையிறுக்கிறான் ஸூத்ரதாரன். நடி ஒரு கட்சி, ஸூத்ரதாரன் ஒரு கட்சியோ என்று நினைக்கக்கூட இடம் வைத்திருக்கிறான் காளிதாசன். சாதாரண மக்களை மட்டும் திருப்திப்படுத்திவிட்டு சபாஷ் வாங்கிப்போக மனமில்லை அவனுக்கு. அறிஞர்களின் பாராட்டுக்கு ஏங்குகிறான் அவன். காளிதாசனே இந்த அடக்கத்துடன் பேசுகிறபோது சபையின் தரம் மிகமிக உயர்ந்ததாகத்தான் இருந்திருக்கவேண்டும். ரகுவம்ச காவியத்தை மக்கள் முன் வைக்கும்போதும் நல்லது கெட்டது என்று பிரித்து எடைபோடும் சான்றோர்களின் உரைகல்லை எதிர்நோக்குகிறான் அவன். பொன்னை அக்னியில் புடம் போட்டுத் தூய்மை காண்பதுபோல ரசிகர்களின் பாராட்டு என்ற அக்னி பரீட்சைக்குத் தயாராக நிற்கிறான். இது தன்னடக்கம் மட்டுமில்லை. ரசிகர்கள் தங்கள் தரத்தை உயர்த்திக்கொண்டு அதன் மூலம் நல்ல நாடகங்களையும் பிறப்பித்து வாழ்வளிக்க வேண்டிய கடமையையும் சேர்த்துத்தான் சொல்கிறது. அந்தக் காலத்து சபைகளுக்கு மின்றி இந்தக் காலத்து ''சபா''க்களுக்கும் கலைக் கழகங்களுக்கும் சொன்ன வார்த்தைதான்.

---

### பாத்திரத்திற்கேற்ற பாத்திரம்.

ஸ்விட்ஜர்லாந்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாஷன் பிளே (Passion Play) நடைபெறும். அதைப் பார்க்க உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரளாகக் கூடுவார்களாம். அதில் வரும் இயேசுகிறிஸ்துவாக நடிப்பவர் ஏழு வருடங்கள் இயேசுகிறிஸ்துவைப் போலவே வாழ்க்கையை அமைத்துக் கொண்டும், அவருடைய உபதேசங்களைப் படித்துக் கொண்டும், அதன்படி நடந்து கொண்டும் தன்னைத் தயார் செய்து கொள்வதே அந்த நாடகத்தின்பால் மக்களுக்குள்ள அமோக ஈடு பாட்டுக்குக் காரணம்.

ஒரு பாத்திரத்தில் தோன்றுவதற்குமுன் நடிகர் தம்மை எவ்வாறு தயார் செய்து கொள்ள வேண்டுமென்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டா இருக்கிறது.

# நாடக விமர்சனம்

பட்டுக்கோட்டை சிவ. இளங்கோ *

உலகில் எந்த ஒன்றையும் செய்யும்போது பிறர் அதைப்பற்றி என்ன கருதுகிருர்கள் என்பதைக் கவனிக்காதவர்கள் கிடையாது. அதுபோல ஒன்றைப் பற்றி பிறர் கருதுவதை விமர்சனம் என்று சொல்லுகிருேம். இந்த விமர்சனம்தான் எந்தக் கலையும் வளர உதவியாக இருக்கும். நாடக விமர்சனத்தின் தரம் மேனுடு களில் எல்லாம் மிகமிகச் சிறந்து விளங்குகிறது. உலகப் பெரும் நாடகங்களைப் படைத்த ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல பெயர் பெற்றிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த நாடகங்களுக்கான விமர்சனங் களும் சிறந்து விளங்குகின்றன. தமிழகத்தில்—தமிழ் மொழியில் ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கு ஒப்பான நாடகங்கள் இல்லையென்ற காரணம் காட்டி அதனுலேயே அங்குபோன்று இங்கு நாடக விமர்சனக் கலை வளர முடியவில்லை என்று சிலர் கூறலாம். ஆனுல் இருக்கும் நாடகங்களின் தரத்துக்கேற்பவாவது இங்கு விமர் சனம் உள்ளதா என்ருல் இல்லையென்றே கூறவேண்டும்.

இதற்கு உதாரணமாக 'இருளும் ஒளியும்' நாடகத்திற்குக் கிடைத்த விமர் சனங்களிலிருந்து சில எடுத்துக்காட்டுகளினுல் விளக்கலாம் எனக் கருதுகிறேன். இருளும் ஒளியும் நாடகத்தைப்பற்றி தமிழகம் நன்கறியும். ஸேவா ஸ்டேஜ் இந்த நாடகத்தினுல் ஒரு புது வழியைத் தொடங்கி வைத்தனர். ஆனுல் அந்த வழி அவர்களாலேயே தொடர்ந்து கையாளப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது தான். இருந்தாலும் அந்த நிலை ஏற்பட்டதற்கான முழுப்பொறுப்பும் அவர்களைச் சாராது. ஏனெனில் மிகக்குறைந்த நடிகர்களோடு, குறைந்த காட்சிகளோடு, நடிப்பதற்கு நிறைய இடம் தந்து அமைக்கப்பட்டிருந்த ஒரு நாடகத்திற்கு பத்திரிகைகளோ, விமர்சகர்களோ அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தை அளிக்க தவறிவிட்டனர்.

இந்த நாட்டிலே விமர்சனம், கலை வளர இடப்படும் எரு என்பதை உணராது ஏதோ பக்கத்தை நிரப்பவேண்டுமென்பதற்காகவும், எதிரியைத் தாக்குவதற்கு எப்பொழுது சந்தர்ப்பம் வாய்க்கிறது என்பதை எதிர்பார்த்து காத்துக் கிடந்து பாய்வது போலவும் எழுதினுல் பலனில்லை. ஒருவர்க்கொருவர் முரண்பாடு இருக்கலாம். உலக இயற்கை அது! வேறுபட்ட கொள்கைகளின், மாறுபட்ட தத்துவங்களின் கூட்டமைப்புதானே இந்த உலகம்! ஆனுல் முரண்பாடு தர்க்க ரீதியாக, அறிவுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். ஆராய்ச்சிக் கண் கொண்டு அதை விளக்கும் திறன்வேண்டும். அந்தத் திறன் நம் நாட்டு விமர்சகர்கள் பலருக்குத் தேவை. மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான் என்று எழுதக்கூடிய விமர்சகர்களை இன்றைய சமுதாயம் தலை முழுகினுல்தான் நாட்டுக்கு நல்லது; நாடகக் கலைக்கும் நல்லது.

அந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வருகிறது. இருப்பினும் நாம் அடையவேண்டிய எல்லை மிகமிகத் தொலைவிலிருக்கிறது. நாடகக் கலை வளர

---

* கல்வி நிலைய மாணவர்.

வேண்டுமானுல் விமர்சனக் கலேயும் வளரவேண்டும். நாடகக் கலேஞர்கள் எந்த நோக்கத்தோடு நாடகங்களே உருவாக்குகிருர்கள் என்பதைப் பொதுமக்கள் அறியவும், நாடகங்களின் தரம் எப்படி அமையவேண்டுமென பொதுமக்கள் விரும்பு கிருர்கள் என்பதைக் கலேஞர்களுக்கு உணர்த்தவும் இடையில் உள்ள பெரும் பாலம் விமர்சகர்கள்தாம். அந்தப் பாலம் எவ்வளவு உறுதியுடன் உள்ளதோ அப்படித் தான் அமையும் பாலத்தின் புறமுள்ள இருகரைகளும்.

டாக்டர் சிதம்பரநாதனுர் கல்வி நிலேய மாணவர்களிடையே அன்றெருநாள் பேசுகையில் பண்டைத் தமிழ் மக்கள் நாடகத்தை ஓர்ந்து பார்க்கும் பழக்க முடையவர்களாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டார். இன்ரே ஓர்ந்து பார்ப்பதற் கென்றே உள்ள விமர்சகர்கள்கூட அப்பணியை சரிவர செய்வதில்லே. விமர்சனம் என்ருல் கதைச் சுருக்கத்தையும், இன்னின்னுர் இன்ன இன்ன பாத்திரத்தில் இப்படி நடித்தார்கள் என்பதையும் மட்டும் ஏதோ கேள்விகளுக்குப் பதில் கூறும் பாணியில் அமைவது ஒழியவேண்டும்.

கதை உருவாவதற்கான சூழ்நிலே என்ன, அந்தக் கதையின் காலமும் பின்னணியும் என்ன என்பதையெல்லாம் ஆராயும் மனப்பான்மையோ, நடிகர் களுடைய நடிப்புத் திறமையை அவர்கள் ஏற்றுள்ள பாத்திரத்தின் குண சித்திரத்தைக் கொண்டு மதிப்பிடும் நிலேயோ ஏற்படாதது வருந்தத்தக்கது.

தமிழகத்தில் இன்று நாடகங்களுக்குத் தனிப்பெருமையிருப்பதாக என்னுல் துணிந்து கூறமுடியவில்லே. சினிமா அல்லது நாடக உலகில் பெருமையும் பெயரும் பெற்ற ஒரு சில கலேஞர்களுக்காக என்றே நாடகங்கள் நடத்தப் பெறுகின்றன. அந்தக் குறிப்பிட்ட ஒரு சிலருக்காகவே கூட்டமும் கூடுகிறது. இதை விட்டு பயில்முறை (அமெச்சூர்) நாடகக்குழுக்களே எடுத்துக் கொண்டால் ஏதோ வெறும் பொழுதுபோக்கு என்ற கருத்திலேயே, அந்தப் பொழுதுபோக்குப் பணியைக்கூட செவ்வையுறச் செய்யவேண்டும் என்ற எண்ணமில்லாமல் (பாவம்! அவர்களேக் கூறுவதில் பயன் என்ன? அவர்களுக்குக் கிடைக்கும் வசதி அப்படித் தான் இருக்கிறது!) நாடகம் நடத்துகிருர்கள்.

நாடகக் கலேயின் இந்த துர்ப்பாக்கியமான நிலே மாறவேண்டுமானுல் அது விமர்சகர்களால்தான் முடியும். இன்று பத்திரிகைகள் நான் முன்பு சொன்னபடி ஒரு கேள்விப் பட்டியலே (Questionnaire) வைத்துக்கொண்டு, அந்த இரண்டு மூன்று கேள்விகளுக்கான பதிலே நிரப்புவதிலேயே தங்களுடைய விமர்சன வேலே முடிந்து விட்டதாகக் கருதுகிருர்கள். இந்த நிலே மாறவேண்டுமானுல் பத்திரிகைகளில் நாடக விமர்சனத்துக்கு என்று சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டு அங்கே பலரும் தங்களுடைய கருத்துக்களேத் தெரிவிக்க வாய்ப்பளிக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. நாடகத்திற்கென்றே தனிப்பட்டு ஒரு சில பத்திரிகைகள் வேண்டும். ஸேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலேயக் கையெழுத்துப் பத்திரிகை இன்னும் கொஞ்ச நாட்களில் அந்த வரிசையில் (அச்சுருவில்) காலடி வைக்கலாம். இன்னும் பல பத்திரிகைகளும் தொடர்ந்து வெளிவரவேண்டும்.

தமிழகத்தில் பார்த்தா, துமிலன், புத்தனேரி சுப்பிரமணியம், கோவி. மணி சேகரன், அரங்கண்ணல் முதலிய நல்ல பல நாடக விமர்சகர்கள் இருக்கிருர்கள். இந்தப் பரம்பரை வளரவேண்டும்; அப்பொழுதுதான் நாடக விமர்சனக் கலே வளரும்; நாடகக் கலே வளரும்.

ஸேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் செய்துவரும் தொண்டு, தமிழ் நாட்டு நடிப்புக் கலைக்கு, ஒரு சிறந்த அஸ்திவாரமாகும். திறம்பட நடிக்கும் சக்தியை நாடகக் கலைதான் நடிகருக்கு அளிக்க முடியும். நடிக்க ஆர்வமுள்ளவர்களை, சிறந்த நடிகர்களாகச் செய்யும், இந்த நற்பணியை திருவாளர்கள் சகஸ்ரநாமமும், ராஜாமணியும் ஊக்கத்துடன் செய்து வருவது மிகவும் போற்றத்தக்கது. நம் தேசத்தில் எப்பகுதியிலும் செய்யாத இப்பணியில் பூரண வெற்றி பெறவும், இவர்கள் நாடகக் கலையார்வம் மேன்மேலும் வளர்ந்தோங்கவும், எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஏ. வி. மெய்யப்பன்**

---

நாடகக் கல்வி நிலையத்திற்குச் சென்று, அங்குள்ள இளைஞர் களுக்கு எனக்குத் தெரிந்த விஷயங்களைப் புகட்ட வாய்ப்பொன்று சமீபத்தில் கிட்டியது. அச்சமயம் நான் கவனித்த அளவில் கல்வி பயிலுகிறவர்களின் முகங்களில் புதிய கருத்துக்களையும் கிரகிக்கும் ஆற்றல் இருப்பதன் அறிகுறிகள் காணப்பட்டதை மிகவும் போற்றுகிறேன்.

**கி. சந்திரசேகரன்**

---

இது விஞ்ஞான காலம். எதையும் காரண காரிய முறையில் தெளிவாக விளக்கத் தெரிந்தால்தான், அதன் உண்மைப் பெருமையை உலகறியச் செய்ய முடியும். ஆகையால், நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் கலைப் பண்புகளை அறிவியல் முறையில் உணர்வதும் உணர்த்துவதும் தேவையாகி விட்டன. கல்வி நிலையமாக அமைந்துள்ள இந்த நல்ல அமைப்பு, இத்துறையில் ஆற்றவேண்டிய பெருந்தொண்டு, மக்களும் அரசாங்கமும் போற்றத் தக்கதாக் விளங்க வேண்டும்; விளங்கும்.

**மு. வரதராசன்**

# கேரளத்தில் கலை விழா

எஸ். கே. சொருபன் *

ஸேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் தொடங்கிய சில நாட்களிலேயே தமிழ் நாடக வளர்ச்சிக்கு இது பெரியதோர் துணை புரியத்தக்க நிறுவனமாய் விளங்குமென்பதைப் பலரும் உணர்ந்தனர். அந்த உணர்ச்சி "கேரள சாஹித்ய பரிஷத்" அக்டோபர் முதல் வாரத்தில் கோட்டயத்தில் நடத்திய 26-ம் ஆண்டு விழாவிற்கு தமிழ் நாடகம் பற்றிப் பேச அழைக்கப்பட்டிருந்த கல்வி நிலையப் பேராசிரியர் திரு. பி. எஸ். ராமையாவுடன் தனது பிரதிநிதி யொருவரை அனுப்பியதன் மூலம் வளர்ந்தது. அந்த பிரதிநிதியாகச் செல்லும் பேறு எனக்குக் கிடைத்தது.

அக்டோபர் முதல் நாள் மாலை சென்னை மத்திய புகை வண்டி நிலையத்திலிருந்து 'கொச்சின் எக்ஸ்பிரஸி'ல் புறப்பட்டேன். புகை வண்டி நிலையத்திற்கு மாணவ நண்பர்கள் வந்திருந்து என்னை வழியனுப்பி வைத்தபோது எல்லையில்லா மகிழ்ச்சியோடு இறுமாந்திருந்த நான் வண்டி புறப்பட்டபோதுதான் சூழ் நிலையைக் கண்டேன். நான் பிரயாணம் செய்த பெட்டி இரண்டாம் வகுப்பென்றாலும் மூன்றாம் வகுப்பைவிட மிக மோசமாக இருந்தது. ஆம்...! புகை வண்டி நிலையத்தினர் தங்களுடைய தாராள மனப்பான்மையை மிக அதிகமாகக் காட்டி விட்டதால் நான் பட்ட தொல்லை கொஞ்சநஞ்சமன்று! இது மட்டுமா? காட்பாடி செல்லும் வரையில் வண்டி இருளில் மூழ்கியிருந்தது!

இரண்டாம் தேதி மாலை வரை பிரயாணம் நீடித்தாலும் எனக்கு எந்தவிதமான அலுப்போ சலிப்போ ஏற்படவில்லை. அதற்குக் காரணம்—சில மாதங்களாகக் காணாதிருந்த இயற்கைக் காட்சிகளின் சொக்கவைக்கும் சூழ் நிலையும் பிரிந்திருந்த நண்பர் பலரை மீண்டும் சந்தித்ததும்தான் எனலாம். மகிழ்ச்சியில் மனம் திளைத்திருந்த என்னை கோட்டயத்தில் சம்மேளன நிர்வாகிகள் வரவேற்று தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

தமிழ் நாடகத்தைப் பற்றிப் பேச வந்திருந்த திரு. பி. எஸ். ராமையாவும் மற்றும் வந்திருந்த விருந்தினர்கள் எல்லோருமாக அக்டோபர் மூன்றும் தேதி காலை சுமார் 10 மணிக்கு மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த மகா நாட்டுப் பந்தலுக்குச் சென்றோம். கேரள கவிகளுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் வழிகாட்டியாயிருந்த 'வர்கீஸ் மாப்பிள்ளை'யின் பெயர் இந்த பந்தலுக்கு சூட்டப்பட்டிருந்தது. 10-30 மணிக்கு கேரள கொட்டு வாத்தியங்கள் முழங்க மத்திய மந்திரி புரொபசர் ஹுமாயூன் கபீரும், மகாகவி வள்ளத்தோலும் பந்தலுக்கு அழைத்துவரப் பட்டனர். கேரள கானம் ஒலிக்க விழா ஆரம்பமாகியது. வரவேற்புக்குழுத் தலைவர் திரு. கே. எம். செரியன் யாவரையும் வரவேற்றுப் பேசுகையில் அரசாங்க உதவியுடன் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கலைக் களஞ்சியம் (Encyclopedia) மாதிரி கேரளத்திலும் ஆரம்பிப்பதோடு டைப்ரைட்டருக்குப் பொருந்தும்படி மலையாள லிபியில் மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அரபி, பர்சிய மொழி வல்லுனரும் மத்திய அரசாங்க அமைச்சருமான ஹுமாயூன் கபீர் சம்மேளனத்தை

* கல்வி நிலைய மாணவர்

ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் ஒவ்வொரு மொழியிலும் முக்கியமான நூல்கள் மாற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று கூறினர். தலைமை வகித்த மகாகவி வள்ளத்தோல் மலேயாள இலக்கிய வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறினர்.

பிற்பகலில், சாஸ்திரீய சாஹித்திய சம்மேளனத்தை கேரள கல்வி அமைச்சர் புரொபஸர் ஜோஸப் முண்டசேரி ஆரம்பித்து வைத்தபின், கேரள முதலமைச்சர் சங்கரன் நம்பூதிரிபாட் கலை, இலக்கியக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். இந்த கண்காட்சியில் எல்லா இந்திய மொழிப் புத்தகங்களும் இடம் பெற்றிருந்ததோடு அச்சடித்த புத்தகமோ என்ற ஐயத்தை எழுப்பிய கையெழுத்துப் பத்திரிகைகளும் இருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். இம்மாதிரி புத்தகக் காட்சி இந்தியாவில் இரண்டாவது முறையாக இங்குதான் நடத்தப்பட்டது என்பது சிறப்பிற்குரியது. இரவில் கலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்த கேரள கவர்னர் டாக்டர் ராமகிருஷ்ண ராவ், கலை வளர்ச்சியில் அரசாங்கமும் அக்கறை கொண்டுள்ளதாகவும், தங்களால் இயன்ற உதவியைச் செய்ய அரசாங்கம் காத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார். பின்னர் ரஷ்யா சென்று திரும்பிய பத்மினி, ராகினி ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரண்டாம் நாளான நான்காம் தேதியன்று முற்பகலில் நடந்த மலேயாள இலக்கிய சம்மேளனத்திற்குப் பின் பிற்பகலில் பி. வி. மாமா வரீர்கார், எம்.பி., தலைமையில் நடந்த இந்திய நாடக சம்மேளனத்தில் ஸம்ஸ்கிருதம், தமிழ், ஒரியா, உருது, ஹிந்தி நாடகங்களைப்பற்றி முறையே ஆத்ய ரங்காச்சாரி, பி. எஸ். ராமையா காலிந்தி சரணி பானிக்ரஹி, முகம்மது ஹசன், ஸ்ரீராம்குப்தா ஆகியோர் பேசினர். திரு. வரீர்கார் தலைமையுரையில் ஒவ்வொரு மாவட்ட முக்கிய இடங்களிலும் அரசாங்கம் நாடக அரங்கம் அமைக்கவேண்டும் என்ருர். சமஸ்கிருத நாடகம் பற்றிப் பேசிய ஆத்ய ரங்காச்சாரி இந்திய மொழிகளில் நாடகம் தோன்ற வழிகாட்டியாக இருந்தது சமஸ்கிருத நாடகம்தான் என்று கூறினர். தமிழ் நாடகம் பற்றிப் பேசிய திரு. பி. எஸ். ராமையா, தமிழில் பல நூற்ருண்டுகளுக்கு முன்பே நாடகம் தோன்றி விட்டதாகக்கூறி, நாடகக்கலை வளர, என். எஸ். கே. நாடக சபா, டி, கே. எஸ். சகோதரர்கள், ஸேவா ஸ்டேஜ், கலாக்ஷேத்திரம் போன்றவை செய்துவரும் முயற்சிகளையும் எடுத்துக்கூறி, தென்னிந்திய நாடக உலகில் ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையம் ஒரு புது சகாப்தத்தை ஆரம்பித்து வைத்திருப்பதையும் குறிப்பிட்டார்.

மூன்ரும் நாள் ஆத்ய ரங்காச்சாரி தலைமையில் தொடர்ந்து நடைபெற்ற நாடக சம்மேளனத்தில் குஜராத்தி, வங்காளம், மலேயாளம், மராத்தி நாடகங்கள் பற்றி முறையே சந்த்ரவதன் சி. மேத்தா, சசின் சென் குப்தா, என். கிருஷ்ணப் பிள்ளை, பி. வி. மாமா வரீர்கார் ஆகியோர் பேசினர். அஸ்ஸாம் நாடகத்தைப்பற்றி ஸ்ரீசக்ரீஸ்வரும், காஷ்மீர நாடகத்தைப்பற்றி ஜே. என். கௌலும் எழுதி அனுப்பியிருந்தனர். தலைமையுரையில் ஆத்ய ரங்காச்சாரி, கன்னட நாடகத்தில் 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில்தான் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், சிவராம் கரந்த் போன்ருேர் தற்போது நாடகத்திற்கு பாராட்டும்படியான தொண்டாற்றுவதாகவும் குறிப்பிட்டார். சந்த்ரவதன் சி. மேத்தா (குஜராத்தி) 1956-ம் ஆண்டு சங்கீத நாடக அகாடமியின் தீர்மானப்படி, 1876-ம் ஆண்டு நாடகச் சட்டம் நீக்கப்பட வேண்டுமெனவும், நாடகக் கொட்டகைகள் அதிக அளவில் அரசாங்கத்தாரால் நிறுவப்பட வேண்டுமெனவும் கூறினர். வங்காளத்தில் தற்போது எண்ணிக்கையில் நாடகம் அதிகமாயிருப்பினும் தரத்தில் குறைந்திருப்பதாகவும், இதற்கு அரசாங்கம்தான் முக்கிய காரணமெனவும், மக்கள் மனத்தை கிளரச்செய்து

அவர்களை முன்னேற்றப் பாதையை நோக்கி இழுத்துச் செல்லும்படியான புதுமை நாடகங்கள்தான் தேவை என்றும் சசீன் சென் குப்தா (வங்காளம்) கூறினர். பம்பாய் ராஜ்ய அரசாங்கம் சிறந்த நாடகாசிரியர்களுக்கும் பயில்முறை (Amateur) நாடகக் குழுக்களுக்கும் பரிசுகள் வழங்கி நாடகக்கலை வளர ஊக்குவிப்பதாகவும் மாமா வரீர்கார் (மராத்தி) குறிப்பிட்டார்.

பிற்பகலில் கூடிய குழந்தைகள் சம்மேளனம் இந்த விழாவிற்கே சிகரம் வைத்ததுபோல் இருந்தது. இதில் தலைமையுரை வழங்கியவரும் மற்றும் பேசிய யாவரும் சிறுவர்களும் சிறுமிகளும்தான் என்றாலும், அவர்கள் பேச்சு மிகவும் ரசித்து பாராட்டப்படும்படி அமைந்திருந்தது. மாலையில், பல போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அடுத்து டாக்டர் பி. ஜே. தாமஸ் எம். பி. தலைமையில் சரித்திர சாஹித்ய சம்மேளனம் நடைபெற்றது.

இப்படி கோலாகலமாக 7-ம் தேதிவரை நடைபெற்ற கேரள சாஹித்ய சம்மேளனத்தில் தினமும் இரவில் நாடகம், நாட்டியம், கதகளி, சங்கீதம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதில் முதல்நாள் நடைபெற்ற சென்னை ‘பாரதீ பாலே குரூப்’பின் நாட்டிய நாடகமும், இரண்டாம் நாள் நடைபெற்ற கோழிக்கோடு எக்ஸ்பெரிமெண்டல் ஆர்ட்ஸ் சென்டரின் திரு. கே. டி. முகம்மது எழுதிய “வெளிச்சம் விளக்க நேசிக்குன்னு” (The Light searches for the Lamp) என்ற மலையாள நாடகமும் பாராட்டத்தக்கதாயிருந்தன. இந்த நாடகத்தின் கதையில் புதுமையில்லாவிடினும் உயிரூட்டும் வசனங்களால் மிகவும் சோபித்தது. கதையில் கதாநாயக நாயகியர் தந்தைக்கே முக்கியத்வம் கொடுத்து, நாடகம் முழுதும் ஒரே வீட்டில் நடைபெறுவதாக அமைக்கப்பட்டிருந்ததும் சிறப்பிற்குரிய அம்சங்களாகும். சம்மேளன நிர்வாகிகள் விருந்தோம்பலில் தமிழ் நாட்டுக்கு கேரளம் சளைத்ததல்ல என்று நிலை நிறுத்த மிகவும் முயன்றனர். புதுவழி காட்டி பூரித்து நிற்கும் கேரள மக்கள் பல்லாயிரக்கணக்கில் விழாவிற்கு கூடி மிக மிக அமைதியுடன் நடந்துகொண்டும், கேரள அரசாங்கத்தினர் வந்திருந்த விருந்தினர் கன்யாகுமரி, திருவனந்தபுரம் போன்ற முக்கிய இடங்களைச் சுற்றிப்பார்க்க எல்லா வசதிகளும் செய்து கொடுத்தும் அனைவருடைய பராட்டையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாடு வியக்கத் தோன்றிய நமது நாடக கல்வி நிலையம் இந்த சம்மேளனத்துக்குத் தன் பிரதிநிதியை அனுப்பியதால் பெரும் பயன் பெற்றது எனலாம். இந்தியா முழுதிலுமிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் நம் கல்வி நிலையத்தைப்பற்றி அறிந்து அகமகிழ்ந்து ஆசி கூறியதுடன் தமது முழு ஆதரவையும் நமக்கு அளிப்பதாக வாக்குறுதி தந்துள்ளனர். உருது நாடகம் பற்றிப் பேச வந்திருந்த டாக்டர் ஹாஸன், கல்வி நிலையத்தைப் பார்ப்பதற்கெனவே சென்னைக்கு வந்திருந்து, மாணவர்களுக்கு ஒரு அருமையான சொற்பொழிவு வழங்கியதுடன், நிலையம் செய்துவரும் அரும்பணியையும் வியந்து பாராட்டி விட்டு, வாய்ப்பு அளித்தால் வட இந்தியாவிலிருந்து நாடகக்கலையைக் கற்க மாணவர்களை இங்கு அனுப்புவதாகக் கூறினர்.

### ஆஸ்திரியாவில் நடந்தது!

ஐரோப்பிய நாடுகளில் கலை ஆர்வம் மிக்க நாடு ஆஸ்திரியா. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அதன் தலைநகரான வியன்னா படு சேதம் அடைந்தது. யுத்தம் முடிந்தபின் மக்கள் அங்கு கட்ட முனைந்தது பெரிய அரண்மனை அல்ல, ஆஸ்பத்திரி அல்ல; நாடகம் போடும் கலை மன்றத்தையே முதலில் கட்டினர்.

**PHILIPS**

for

**MUSIC**

Radio : Radiogram : Philigram

Record Changer : Tape Recorder :

Disc Jockey : Long Playing Records.

★

PHILIPS

PHILIPS INDIA PRIVATE LTD.

★ லட்சக்கணக்கான மக்களுக்குத் திருப்தியளிக்கும் கடை !

★ பொதுமக்கள் நம்பிக்கையுடன் வரும் கடை !!

★ எல்லோருக்கும் சேவை செய்து உத்திரவாதமுடன் திருப்தி யளிக்கும் கடை !!!

★

**ஜெனரல் ஸ்டோர்ஸ்**

ஜவுளி வியாபாரம்

**திருவல்லிக்கேணி, சென்னை-5.**

போன் : 86635 ஸ்தாபிதம் : 1920

எல்லாவிதமான வர்ண வகைகள் கிடைக்குமிடம் :

போன்: 3085

★

**எஸ். வி. அம்பாள் & கம்பெனி**

(உரிமையாளர்: எஸ். எஸ். பி. லிங்கம்)

பெயின்ட் & ஸ்பிரிட் வியாபாரம்,

**319—322, ராசப்ப செட்டி தெரு, சென்னை-3.**



# நான் ஏன் நடிகனுக விரும்புகிறேன்?

கே. டி. ராதாகிருஷ்ணன்*

உலகில் உயிருள்ள பிராணிகள் எத்தனையென்று சொல்வது மிகக் கடினம்; எல்லாவற்றையும்விட மனிதன் உயர்ந்தவன் என்று மகா மேதைகளான நம் முன்னுேர்கள் சொல்லுகிருர்கள், ஆனுல் "மனிதன்" என்று கருதத் தகுதி யுடையவர்கள் இன்று மிகக் குறைவு என்பது என் கருத்து.

நடிகன் என்ருல் பிறரைப்போல் பாசாங்கு செய்பவன். நடிப்பு இதோடு நின்றுவிடாது. ஒரு நடிகனின் முக்கிய வேலே, பிறரைப்போல் பாசாங்கு செய்யும் நல்லவர்களையும், கெட்டவர்களையும் படம் பிடித்து காட்டும் அளவுக்கு திறமை யுடையவனுகவும் இருக்கவேண்டும்.

நடிப்பு ஒரு சாதாரண கலேயல்ல. எல்லேயில்லாத ஒரு கலே. நடிப்பைப் பற்றி ஒன்றும் தெரியாத காலத்திலே நான் நடித்தேன். சிலர் என் நடிப்பையும் பாராட்டினர். அதன் காரணம் எனக்குத்தெரியாது.

முதன் முதலாக என்னுடைய ஆசை, எல்லோரும் என் நடிப்பை பார்த்துப் புகழவேண்டும்; நல்ல கெட்டிக்காரப் பையன் என்று எல்லோரும் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டேன். பிறகு பெரியவன் ஆனதும் அதே ஆசைதான் இருந்தது. இப்படியே சில ஆண்டுகள் ஓடின. எனக்கு வேண்டிய நண்பர்கள், சில சொந்தக்காரர்கள் எல்லோரும் சொல்வார்கள்: "நீ வட இந்திய நடிகன் திலீப்குமார் போல் இருக்கிருய், முயன்ருல் முன்னேறலாம்" என்று அடிக்கடி சொல்லுவார்கள். சிறுவயதிலிருந்தே கலே ஆர்வமுள்ள எனக்கு இவர்களின் வார்த்தைகள், மேலும் ஊக்கம் கொடுத்தன. அன்ருட வாழ்க்கைக்குத் "தாளம்" போடும் நான் நடிகனுகப் பல வழிகள் ஆராய்ந்து பணமில்லாத பல நடிகர்களின் சோகக் கதைகளையும், அவர்களின் குணங்களையும், சிலரின் மடத்தனத்தையும், இன்னும் சிலரின் அகம்பாவத்தையும், கண்டும் கேட்டும், பலவழிகளில் முயன்றேன். எங்கும் தோல்வி. காரணங்கள் இரண்டு: ஒன்று நாடகக் கலே தெரியாது. இரண்டு பணமில்லாதது. இருந்தும் பல முயற்சிகள் செய்து வந்தேன். எங்கும் பணத்தின் வெறியைத்தான் கண்டேன். எப்படியும் ஒரு நல்ல நடிகனுக வேண்டும்; நடிப்பால் மக்களை சந்தோஷப்படுத்த வேண்டும்; புகழுடன் வாழ வேண்டும்; நிறையப் பணம் சம்பாதிக்கவேண்டும்; நான் கஷ்டப்பட்டுத் திண்டாடிய வேளையில் உதவிய என்னுடைய சில சொந்தக்காரர்கள், சில நண்பர்கள், எல்லோருக்கும் பல உதவிகள் செய்யவேண்டும்; கொஞ்சநாள் வாழ்க்கை சுகங்களை அனுபவித்து, பிறகு தன் புகழையும், பணத்தையும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக உபயோகித்து எல்லோரும் ஓரினம், ஆண், பெண், தவிர வேறு ஜாதியில்லே; பணத்துக்கு முதலிடம் கொடுக்காமல், அறிவுக்கும், ஆண்மைக்கும், முதலிடம் கொடுக்கும் ஒரு நவ இந்தியாவை சிருஷ்டித்து கடைசியில் உயிருடன் வாழ்ந்தால், இறைவனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு ஏதேனும் ஒரு தனி இடத்திற்குச்சென்று, எல்லாவற்றையும் மறந்து ஒரே சிந்தையில் ஆழ்ந்து, ஆவி

* கல்வி நிலேய மாணவர்

பிரிய வேண்டும். இதுதான் என் ஆசை, திட்டம். ஒரு நடிகனுக்கு வேண்டிய முகமும், உடலமைப்பும் எனக்கு உண்டு என்று பலர் சொல்கிறார்கள், ஆர்வமும் உண்டு, ஆனால் வசதியில்லை. நாடகக் கலையை வளர்க்க ஓரளவு பொருளும் தேவை. என்னிடம் பணம் இல்லாவிட்டாலும் பணமுள்ள கலை ஆர்வமுள்ளவர்கள் நினைத்தால் ஒரு சிறந்த கலைஞனாக்க முடியும், ஆனால் இந்த நாள் வரையில் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிடைத்தால் அதைத்தான் அதிர்ஷ்டம் என்பார்கள். நான் விதியை எப்படி நம்புகிறேனோ அப்படியே முயற்சியையும் நம்புபவன். எனவே ஆசையுண்டு, புகழுடையவனாகவும், பணமுள்ளவனாகவும் இருக்க. ஆனால் அந்த பணத்தையும், புகழையும், பொது நலத்துக்காக உபயோகப்படுத்தவும் ஆசையுண்டு.

நான் ஒரு நடிகனாக விரும்புகிறேன்; நடிகனாக என் குருநாதர்கள் ஆசீர்வதிப்பீர்கள் என்று எண்ணிக்கொண்டு இந்த சிறு கட்டுரையை இப்பொழுது நிறுத்துகிறேன். என் கற்பனையிலோ, நான் நடந்து செல்லும் வாழ்க்கைப் பாதையிலோ தவறுகள் இருந்தால், அதைத் திருத்தி நல்ல பாதையில் என் வாழ்க்கையை திருப்புவீர்கள் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

---

# சமுதாய நாடக மன்றங்கள்

''சமுதாய நாடக மன்ற மென்றால் என்ன?''

நஞ்சப்பா ஒரு டாக்டர்; இருளப்பன் ஒரு இஞ்சினியர்; முத்தையா ஒரு மேஸ்திரி; கனகசபை ஒரு கல்லூரிப் பேராசிரியர். இவர்கள் நால்வரும் வழக்கம்போல கூடுகின்றனர். நஞ்சப்பா, நாம் ஒரு நாடகம் போடலாமே என்கிறார்! கனகசபை இதோ கதை என்கிறார்! இருளப்பன் படம் வரைவதும், காட்சி ஜோடனையும் எனக்கு முடியுமென்கிறார்! முத்தையா டிக்கட் விற்க நான் ரெடி என்கிறார்! அந்த இடத்திலேயே சமுதாய நாடகம் மன்றம் தோன்றி விட்டது. இவர்கள் அனைவரும் தொழிலால் நாடகக் கலைஞர்கள் அல்ல ........பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதும் இவர்கள் நோக்கமல்ல. நாடகம் போட வேண்டுமென்பதே இவர்கள் நோக்கம். இவர்கள் தியேட்டரைத் தேடி ஓடவில்லை அவர்களுடைய Evening Club இருக்கிறதே, அதையே தியேட்டர் ஆக்கிவிடுகிறார்கள்! அதில் சுமார் 100 பேர்தான் உட்கார முடியும். அதுவே அவர்களுக்குப் போதும். அந்தத் தியேட்டர்தான் கம்யூனிட்டி தியேட்டர் எனப்படும்.

சமுதாயத்தில் பல துறைகளில், அலுவல் பார்க்கும் பலர், நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்கள் சேர்ந்து ஒரு கூட்டாகக் கூடி அதிகப் பொருட் செலவும், ஆடம்பரமுமில்லாமல் தங்கள் மனத் திருப்திக்காகவும், பொழுது போக்குக்காகவும் நடத்தும் நாடகங்களே சமுதாய நாடகங்களாகும். இந்த இலக்கியத்திற்குத்தான் ''Community Theatre Movement'' எனப்படும்.

Community Theatre-ன் ஆரம்பமே அமெரிக்காதான். இன்று அமெரிக்கா முழுவதும் 1000 Community Theatre.கள் உள்ளன. இவற்றில் பல்லாயிரக் கணக்கான பேர் ஈடுபட்டு தங்கள் நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்! ஒவ்வொரு மன்றமும் வருட மொன்றுக்கு ஆறு, ஏழு நாடகங்கள் நடத்துகின்றனர்; சீன் இழுப்பது சீன் வரைவது முதல் எல்லாக் காரியங்களும் அவர்களே நடத்துகின்றனர். இவர்கள் நடத்துகின்ற நாடகங்களை 15 மில்லியன் மக்கள் பார்த்து ரசிக்கின்றனர்.

---

குறிப்பு :—மாணவர் கோமல் சுவாமிநாதன் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி.

## கோவையில்

**கல்யாணம் மற்ற விசேஷங்களுக்கு**

காஞ்சீபுரம், பெங்களூர், பனரஸ் பட்டு புடவை களுக்கும், எல்லாவிதமான மில் ஜவுளிகளுக்கும், சில்க் ரகங்களுக்கும் நம்பிக்கையான இடம்

# விஜயலக்ஷ்மி ஹால்

போன்: 1236

(பள்ளிவாசல் கட்டிடம்)

**ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.**

★

தங்களின் தேவைக்கு விஜயம் செய்யுங்கள்!

ரெடிமேட் மெத்தைகளும் தலையணைகளும் கிடைக்கும்.

**எமது புதிய வெளியீடுகள்!**

| | | |
|---|---|---|
| **ராஜாஜி** | | |
| கற்பனைக்காடு | ... ரூ. | 1·50 |
| **மறைமலையடிகள்** | | |
| அறிவுரைக் கொத்து | ... ரூ. | 3·00 |
| **வ. உ. சிதம்பரனார்** | | |
| சாந்திக்கு மார்க்கம் | ... ரூ. | 1·75 |
| வலிமைக்கு மார்க்கம் | ... ரூ. | 1·50 |
| **விபுலாநந்த அடிகள்** | | |
| விபுலாநந்தத் தேன் | ... ரூ. | 2·50 |
| **"சோமு"** | | |
| மன்மத மலர் | ... ரூ. | 2·00 |
| **கி. ஆ. பெ. விசுவநாதம்** | | |
| தமிழ்ச் செல்வம் | ... ரூ. | 2·00 |

★

**பாரி நிலையம்,**

**59, பிராட்வே :: சென்னை-1.**

**YOURS FOR LOVELY**

PHOTOGRAPHS

# LUZ STUDIO

**Phone: 71798**

**PHOTOGRAPHIC DEALERS**

**MYLAPORE - MADRAS**

## விரைவில் வருகிறது!

திரைவானிலே ஒரு துருவ நட்சத்திரம்!

## சிவாஜி கணேசன்

இரு வேடங்களில் தோன்றும்

**வீனஸ் பிக்சர்ஸ்**

# "உத்தம புத்திரன்"

பத்மினி - கண்ணும்பா - ராகினி - தங்கவேலு

நம்பியார் - O. A. K. தேவர் - ஸ்டண்ட் சோமு

M. S. S. பாக்கியம் - ஹெலன்

★

திரைக்கதை, வசனம் :

**ஸ்ரீதர்.**

★

டைரக்ஷன் :

**T. பிரகாஷ் ராவ்.**

★

சங்கீதம் : ஜி. ராமனுதன் ஆர்ட் : கங்கா

காமரா : வின்சென்ட்

★

ஸ்டுடியோ : **ஜெமினி.**

# சங்கநாதம்

மாணவர்கள் எல்லோரும் பயிற்சிக்குச் சேர்ந்து தங்கள் முந்திய நாடக அனுபவங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றி ஒருவருக்கொருவர் பரிச்சயம் ஆன வுடனேயே சங்கம் ஆரம்பிப்பதென்று நினைத்திருந்தது.

ஆனால் மிகுதியான வேலைகளுக்கிடையே அதற்கு அவகாசமில்லாததால் உடனடியாகக் கவனிக்கவேண்டிய கையெழுத்துப் பத்திரிகை, நாடக வாசிப்பு, நாடகத் தயாரிப்பு, நூல் நிலையம், நாடகத் தேர்வு ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் கமிட்டிகளைத் தேர்ந்தெடுத்து, பிற்பாடு சங்கம் அமைக்கப்பட்டதும் அக்கமிட்டிகளை இணைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.



சங்க போஷகர்

பிற்பாடு அக்டோபர் 4-ந் தேதி எல்லா மாணவர்களுமாகச் சேர்ந்து அடையாறு கடற்கரைக்கு நடந்து செல்வதென ஏற்பாடாயிற்று. அடையாறு அடைவதற்கு முன்னமே சாந்தோம் கடற்கரையில், அமைதியிருளும், கதிர் நிலவும் ஒன்றோடொன்று ஒத்துழைத்து மாணவர்களை மகிழ்விக்க, ரஸமான பேச்சுக்களுக்கிடையே சங்கத்தைப் பற்றிய பூர்வாங்க யோசனைகள் நடைபெற்றேறின.

பிறகு அக்டோபர் 15-ந் தேதி, முதல் பயிற்சித் திட்டம் காரிய பூர்வமாக வெற்றியுடன் பூர்த்தியடைந்த நன்னாளில், பேராசிரியர்களுக்கு மாணவர்கள் நடத்திய பிரிவுபசாரக் கூட்டத்தில் ‘மாணவர் சங்கம்’ எல்லோருடைய ஏகோபித்த கரகோஷங்களுக்கிடையே உதயமாயிற்று.

நாடகக் கலை வளர்ச்சிக்குப் பாடுபடுவதும்; ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலைய முன்னேற்றத்திற்கு உழைப்பதும்; இங்கே பயின்ற, பயிலும் மாணவர்களுக்கிடையே நல்லதோர் கூட்டுறவு மனப்பான்மை வளரப் பாடுபடுவதும் சங்கத்தின் குறிக்கோள்களாக நிர்ணயிக்கப்பட்டன. கல்வி நிலையத் தலைவர் (திரு. எஸ். வி. ஸஹஸ்ரநாமம்) சங்கத்தின் போஷகராகவும், நிலையப் பேராசிரியர்கள் (திரு. பி. எஸ். ராமையா, கலாஸாகரம் ராஜகோபால்) கௌரவத் தலைவர்களாகவும், நிலையக் காரியதரிசி (திரு. என். வி. ராஜாமணி) பொதுச் செயலாளராகவும் சங்க விதிகளின் படி பலத்த கை தட்டலுக்கிடையே அறிவிக்கப்பட்டார்கள்.

மறுநாள் அக்டோபர் 16-ம் தேதி மற்ற நிர்வாகிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. தேர்தலை சங்க போஷகர் திரு. எஸ். வி. ஸஹஸ்ரநாமம் அவர்கள் தலைமை வகித்து நடத்தித் தந்தார். தேர்தலிலே மாணவர்கள் காட்டிய உற்சாகமும், பணிபுரிய ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு வந்த காட்சியும் சிறப்புற இருந்தன.

தேர்தல் விவரம் பின்வருமாறு :—

நிர்வாகத் தலைவர் :

**எஸ். கே. சொரூபன்**

துணைத் தலைவர் :

**அருணமோஹன்**

கூட்டுச் செயலாளர்கள் :

**சிவ. இளங்கோ**

**ஆர். ராமகிருஷ்ணன்**

செயற்குழு உறுப்பினர்கள் :

**ஜி. பி. ராம்நாத்**

**முத்துகிருஷ்ணன்**

**கே. எம். கிருஷ்னன்**

**வசந்தா**

**சுந்தரேசுவரன்**

கூட்டுச் செயலாளர்களில் ஒருவரான சிவ. இளங்கோ தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் சார்பாக நன்றி கூறும்போது இந்தச் சங்கம் நாடக வளர்ச்சிக்கு ஒரு கேந்திரஸ்தானமாய் அமையக்கூடிய விதத்திலே பணியாற்றும் எனக் குறிப்பிட்டார்.

---

## முத்தமிழில் முதன்மை

ஆர். ராமகிருஷ்ணன் *

தமிழென்று பேரிட்டார் எம்மொழிக்கு
தரணி கட்டி ஆண்டிட்ட எம் முன்னோர் ;
அமிழ் தனைய சுவை பெற்ற தெம் மொழி ;
ஆண்மை தம் மூச் சென்றூர் எம் முன்னோர்
கமழ்கின்ற மணத்தை முக் கூறிட்டார் ;
இயலிசை நா டக மென்றே பேரிட்டார் ;
தமிழின் நா டகக் கலையைப் போற்றிடுவோம் ;
தாய்க்குச் செய் சேவை யென ஏற்றிடுவோம் ;

* கல்வி நிலைய மாணவர்

தயாராகிறது!

கதையில், கருத்தில், கானத்தில்

புதுமை!

★

T. G. R. பிக்சர்ஸ்

தயாரிக்கும்

"இவன் அவனே தான்"

சிவாஜி கணேசன், ஸஹஸ்ரநாமம்

ஜமுனு, பண்டரிபாய், ப்ரமீளா

மற்றும் பலர்.

★

டைரக்ஷன் & ஒளிப்பதிவு:

பி. ஸ்ரீதர்

★

கதை: ராக்ஷ்மி, B.A.

வசனம்: கலைப்பித்தன்

இசை: M. ரங்காராவ்

ஆர்ட்: பி. என். மேனன்

★

விவரங்களுக்கு:

T. G. R. பிக்சர்ஸ்,

56, உஸ்மான் ரோடு :: சென்னை-17.

'Grams :
"Swadeshi" Coimbatore.

'Phone: Mills : 149
Residence : 666

# THE VIJAYALAKSHMI MILLS LIMITED.

**Kuniyamuthur P.O., Coimbatore,**

S. INDIA.

★

**CAPITAL**

| | | |
|---|---|---|
| **Authorised** | ... | **Rs. 25,00,000** |
| **Paid up** | ... | **Rs. 13,02,400** |

★

**RING SPINDLES: 26,536**

*Counts Manufactured :*

Ring Yarns from 10s to 60s and Double Yarns, Cone Yarns, Quality 2/60s Staple Fibre Yarn

**BEST FOR HAND & POWER LOOMS.**

For Particulars write to :

*Managing Agents :*

**M/s. BALAKRISHNA & CO.,**

**KUNIYAMUTHUR P. O., Coimbatore Dist.**

# பயின்ற பாடங்கள்


கு. ம. கிருஷ்ணன் *

புது முயற்சி வெகுப் புதுமை!
இது வரையில் இராதது
நாடக கலையதற்கும்
நல்லதோர் பாடசாலை
சொல்லின்றி செயல் புரியும்
சிறு பயிற்சி முதலில்...
இல்லொன்றில் ஓர் இளைஞன்
எழில் படுத்திக் கொண்டு
நல்லழகி தன்னுயிராம்
நங்கையினைக் காண
செல்லுகின்ற நிகழ்ச்சியினை
சித்தரிக்கும்...
குரல் வளைய நெளிய
குழைந்துயர்ந்து பேசுதற்கு
முரல் எழும் விதம னைத்தும்
முறையோடு வகைப் படுத்தி
தரல் வேண்டு மென்றே ஓர்
தனிப்பாடம் தந்துள்ளார்கள்
தேசொரியும் கருத்துகளெடுக்கப் பெற்ற
தெளிவான நற்கதையை தேர்ந்தெடுத்து
வாசித்து நன்ருகப் புரிந்து கொண்டு
வருவித்து நடிகர்களை ; அவர்களுக்கும்
மாசின்றி உணர்வித்த பின்னரே தான்
மனமொத்து பாடங்கள் கொடுக்க வேண்டும்.
ஒப்பனைகள் உடையணிகள் இவற்றைப் பற்றி
ஓரளவு புரிந்துள்ளோம் என்று நாமும்
செப்புகின்ற அளவுக்கு செயல் புரிந்து
தெளிவாக சொல்லியுளர், முறைகளெல்லாம்
அப்படியே நாம் செய்து விடலாமென்று
ஆசை வரல் யாருக்கும் சகசம் ; ஆயின்
இப்படி மேல் யாருக்கு என்ன வேலை
என்றெழுதி விட்டவனும் இருக்கின்ருனே ?
வேடங்கள் பூணுவதில் புதுமை செய்து
வேற்றுருவம் பெறுகின்ருேம், காணும்போது
'' நாடகமா ? மெய் வாழ்வா ? கண்ணின் மாலா ?
நமையெல்லாம் அழவைத்து சிரிக்கச் செய்தான்
கூடுமோ அவன் போல நாமும் செய்ய ?
குலதெய்வம் அவனன் ருே ?'' இது போலெல்லாம்
நாடெங்கும் பேசுகின்ற அளவில் நாமும்
நடிப்போடு உடைமுறையும் அறிந்து கொண்டோம் !
இத்துடனே பாடங்கள் முடிந்ததாலே
இன்னுமொரு செய்தியினை சொல்லிக் கொண்டு
முத்தமிழில் வாழ்த்துக்கள் உனக்குரைத்து
முடித்துவிட எண்ணுகிறேன் முடங்கல் தன்னை
முத்திங்கள் உருண்டோடி பயிற்சிக் காலம்
முடிந்ததால் நிறைவிழாக் கொண்டாடி நல்ல
தித்திப்பு பண்டமும் விருந்து முண்டோம் !
தின்கின்ற பொழுதிலே என்ன ஆனந்தம் ! !

---

* கல்வி நிலைய மாணவர்.

நாடக தேர்வு கமிட்டி



1. மு. லியோ
2. திருநாவுக்கரசு
3. ஆர். நாச்சிமுத்து

நாடக வர்சிப்பு கமிட்டி



1. எஸ். எம். ராமன்
2. செ. முத்துகிருஷ்ணன்



நூல் நிலைய நிர்வாகி:
ஆர். ராமகிருஷ்ணன்
இப்பொழுது மாணவர் சங்கக் கூட்டுச்
செயலாளர்களில் ஒருவராக
பொறுப்பேற்றிருக்கிறார்.



மாணவர் சங்கத்தின் நிர்வாகத் தலைவர்
எஸ். கே. சொரூபனும்,
கூட்டுச் செயலாளர் சிவ. இளங்கோவும்

---



பால்ராஜ்சஹானியும், துர்க்காபாய் கோட்டேயும் கல்வி நிலையத்தில்.

# ஸேவா ஸ்டேஜ்

# நாடக கல்வி நிலையம்

★

## நிகழ்ச்சிக் குறிப்பு

15— 7—1957 ... நாடக கல்வி நிலையம் இன்று நிதியமைச்சர் கனம் சி. சுப்ரமணியம் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. அதை முன்னிட்டு "ஊரும் தேரும்" என்ற நாடகம் ஸேவா ஸ்டேஜ் குழுவினரால் அரங்கேற்றம்.

18— 7—1957 ... "தமிழ் இலக்கியத்தில் நாடகம்" சொற்பொழிவு: திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்.

19— 7—1957 ... "தேரோட்டி மகன்" நாடக வாசிப்பு: ஆசிரியர் பி. எஸ். ராமையா.

23— 7—1957 ... "எனது நாடக அனுபவம்" மாணவர் சொற்பொழிவுகள் ஆரம்பம்.

26— 7—1957 ... "இருளும் ஒளியும்" நாடகம் படித்தல்.

31— 7—1957 ... மாணவர் சங்கம்: பூர்வாங்கக் கூட்டம். இடைக்காலக் குழுவினர் தேர்தல்.

1— 8—1957 ... "தமிழ் இலக்கியங்கள்" சொற்பொழிவு: பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்.

3— 8—1957 ... Bury the Dead. ஆங்கில நாடக வாசிப்பு.

4— 8—1957 ... "பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்" மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் ஆதரவில் மாணவர்கள் நாடகம் பார்த்தனர்.

6— 8—1957 ... "குயில்" நாடக வாசிப்பு.

8— 8—1957 ... "வாக்கும் வக்கும்" நாடக வாசிப்பு.

9— 8—1957 ... "ஆந்திராவில் நாடக இயக்கம்" சொற்பொழிவு: ஏ. கோபால் ராவ்.

12— 8—1957 ... "கம்பனின் நாடகப் பண்பு" சொற்பொழிவு: பி. ஸ்ரீ.

13— 8—1957 ... "ஓரங்க நாடகம்" சொற்பொழிவு: திரு. பெ. தூரன்.

15— 8—1957 ... "ஸேவாஸ் நாடக மேடை" மாணவர் கையெழுத்துப் பத்திரிகை முதல் வெளியீடு.

சுதந்திரப் போர் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டம்: அதையொட்டி சொற்பொழிவும், ஓரங்க நாடகமும் நடைபெற்றன.

17— 8—1957 ... இடைக்காலப் பரீட்சைகள்.

18— 8—1957 ... "பராசக்தி" எழும்பூர் டிராமடிக் சொஸைடி ஆதரவில் மாணவர்கள் நாடகம் பார்த்தனர்.

20— 8—1957 ... "இந்த இரண்டு நூற்றுண்டுகளில் நாடகம்" சொற்பொழிவு: திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்.

21— 8—1957 ... "கலேயும் கல்வியும்" சொற்பொழிவு: திரு. எஸ். டி. சுந்தரம்.
"தமிழ்ச் செல்வம்" நாடகம் படித்தல்.

| | | |
|---|---|---|
| 22— 8—1957 | ... | விவாத அரங்கு கூடியது. |
| 27— 8—1957 | ... | திரு. பி. என். ரெட்டி விஜயம். |
| 31— 8—1957 | ... | "ஸேவாஸ் நாடக மேடை" கையெழுத்துப் பத்திரிகை இரண்டாவது காட்சி வெளியீடு. |
| 2— 9—1957 | ... | "தமிழ்க் கலைகளில் நாடகம்" சொற்பொழிவு: டாக்டர் மு. வரதராசனுர். |
| 4— 9—1957 | ... | பயிற்சி நாடகங்கள்: "கொடை வள்ளல்", "குரங்கின் பாதம்", "உண்மைச் செல்வம்", "சிறைக் கோட்டம்" ஆகிய நான்கு ஓரங்க நாடகங்கள் மயிலை ஒய். எம். ஐ. ஏ. தியேட்டரில் மாணவரால் நடத்தப்பட்டன. |
| 6— 9—1957 | ... | "நாடகக் கலை" சொற்பொழிவு: திருவாளர் பல்ராஜ் சஹானி, பண்டரிபாய், துர்காகோட்டே விஜயம். டி. கே. ஷண்முகம் விஜயமும், மாணவருக்கு அறிவுரையும். |
| 9— 9—1957 | ... | "நாடகம் நுண்கலையா"? விவாதம்: ந. பிச்சமூர்த்தி, தலைவர். கலாசாகரம் ராஜகோபால், திரு. சிட்டி பிரதம பேச்சாளர்கள். |
| 10— 9—1957 | ... | மாணவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள்: விஷய நிர்ணயிப்பு. |
| 11— 9—1957 | ... | "பாஞ்சாலி சபதம்" நாடக வாசிப்பு: பாரதி பிறந்த விழா. |
| 12— 9—1957 | ... | "நாடகக் கலை" சொற்பொழிவு: டாக்டர் அ. சிதம்பரநாதனுர்.<br>ஸேவா ஸ்டேஜின் "நாலுவேலி நிலம்" நாடக ஒத்திகை. |
| 13— 9—1957 | ... | "ஓரங்க நாடகம்" சொற்பொழிவு. |
| 14— 9—1957 | ... | மாணவர் விழா நாடகம்: பாத்திரங்களுக்குத் தேர்வு.<br>"ஔவையார்" ரஸிக ரஞ்ஜனி ஸபா ஆதரவில் நாடகம் பார்த்தல். |
| 17— 9—1957 | ... | "Bridge" நாடக வாசிப்பு. |
| 18— 9—1957 | ... | "ராஜ தண்டனை" நாடக வாசிப்பு. |
| 19— 9—1957 | ... | மாணவர் ஸ்டுடியோ விஜயம்.<br>"இந்திய நாடகம்" ஆராய்ச்சிக் கட்டுரை: எஸ். கே. சொரூபன். |
| 20— 9—1957 | ... | "நாலு வேலி நிலம்" விழா நாடகம் ஒத்திகை ஆரம்பம்.<br>"மேக் அப்" சொற்பொழிவு: ஏ. கோபால் ராவ்.<br>"ஸேவாஸ் நாடக மேடை" கையெழுத்துப் பத்திரிகை மூன்ருவது காட்சி வெளியீடு. |
| 21— 9—1957 | ... | "ஸ்டேஜ் லைட்டிங்" சொற்பொழிவு: திரு. டி. ஜி. ராஜு. |
| 22— 9—1957 | ... | "நாலுவேலி நிலம்" விசேஷ ஒத்திகை: ஆசிரியர் தி. ஜானகிராம்.<br>"சாந்தி" நாடக வாசிப்பு.<br>"சாணக்கியன் சபதம்" சிவ. இளங்கோ, சொரூபன் எழுதிய (மாணவர்) விழா நாடகம் அரங்கேற்றம். |
| 24— 9—1957 | ... | "புதிய பாதை" புது நாடகம், கோமல் சுவாமிநாதன் (மாணவர்) அளிப்பு. |
| 25— 9—1957 | ... | "சாணக்கியன் சபதம்" மாணவர் நாடகம், தேர்வு நடப்பு.<br>"நாடகத்தில் சொல்லின் கலை" சொற்பொழிவு: திரு. சோமு.<br>"நாடக நினைவுகள்" சொற்பொழிவு: பி. என். ரெட்டி<br>"பொற்கொல்லன்" ஓரங்க நாடகம், கு. ம. கிருஷ்ணன் (மாணவர்) அளிப்பு. |

| | | |
|---|---|---|
| 26— 9—1957 | ... | " Waiting for Galiff " ஆங்கில நாடகம் பார்த்தல். |
| 27— 9—1957 | ... | " ராஜ ராஜ சோழன் " நாடகம், பாரத் பைன் ஆர்ட்ஸ் ஆதரவில் மாணவர்கள் பார்த்தார்கள். |
| 29— 9—1957 | ... | மகாபலிபுரம் விஜயம். |
| 30— 9—1957 | ... | " கலைஞன் பிறக்கிருன் " பி. எஸ். ராமையா தலைவர், பிரதம பேச்சாளர்கள் : சிவ. இளங்கோ, ரா. நாச்சிமுத்து. |
| 1—10—1957 | ... | விழா நாடகங்கள், ஆலோசனைக் கூட்டம்.<br>" கேரள ஸாஹித்ய ஸம்மேளனம் "—ஆசிரியர் பி. எஸ். ராமையா, மாணவர் எஸ். கே. சொருபன் விஜயம். |
| 2—10—1957 | ... | காந்தி ஜயந்தி, ஸரஸ்வதி பூஜை.<br>" பல்லி படுச்சு " தெலுங்கு நாடகம் பார்த்தல். |
| 5—10—1957 | ... | ஸ்ரீ பார்த்தா விஜயம்.<br>" மாணவர் சங்கம் " சாந்தோம் கடற்கரையில் ஆலோசனைக் கூட்டம். |
| 10—10—1957 | ... | டாக்டர் ஹாசன் விஜயமும், சொற்பொழிவும் ; " உருது நாடகம் " |
| 13—10—1957 | ... | " சுழல் " ; அமெச்சூர் கம்பைன்ஸ் ; நாடகம் பார்த்தல். |
| 14—10—1957 | ... | ஸ்ரீமதி ருக்மிணி தேவி விஜயமும் அறிவுரையும்.<br>" நமது பண்டை நாடகச் செல்வம் " சொற்பொழிவு : ஸ்ரீ கி. சந்திர சேகரன். |
| 15—10—1957 | ... | சி. எஸ். கமலாபதி விஜயமும் சொற்பொழிவும். டி. கே. ஷண்முகமும் உடன் வருகை.<br>மாணவர் பிரிவுபசார விழா.<br>மாணவர் சங்க உதயம். |
| 16—10—1957 | ... | மாணவர் சங்க நிர்வாகக் குழு தேர்தல். |
| 19—10—1957 | ... | கலாக்ஷேத்திரம் ; மாணவர் விஜயம். ருக்மிணி தேவியின் வரவேற்புரை. |
| 21—10—1957 | ... | " நாடகத்தில் நகைச்சுவை " சொற்பொழிவு : டி. என். சிவதாணு. |
| 22—10—1957 | ... | தீபாவளி விருந்து. |
| 23—10—1957 to 26—10—1957 | ... | மாணவர் நாடகங்கள் : ஸ்டேஜ் ஒத்திகை. |
| 25—10—1957 | ... | ஏ. வி. மெய்யப்ப செட்டியார் வருகை. |
| 27—10—1957 | ... | சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்க அங்கத்தினர்கள் விஜயம். |
| 28—10—1957 | ... | " நாலுவேலி நிலம் " ஆசிரியர் தயாரிப்பில் மாணவர் நடிக்கும் உதவி நாடகம் ; ஏ. வி. மெய்யப்ப செட்டியார் தலைவர். |
| 29—10—1957 | ... | கனம் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் விஜயம். |
| 30—10—1957 | ... | முதல் பயிற்சி நிறைவு விழா ; " சாணக்கியன் சபதம் " (நாடகம்) மாணவர் தயாரிப்பு : கனம் திரு. சி. சுப்ரமணியம் தலைவர் ; திரு. எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார் நன்மதிப்பிதழ்கள் வழங்குதல். |
| 31—10—1957 | ... | மாணவர் சங்கம் ; பொதுக் கூட்டம். |

Phone No. 88095

*BUY AT*

# VANI PHARMACY

(Premier Chemists in the Garden City of Madras)

**Dispensing Chemists & Druggists**

**T' NAGAR :: MADRAS-17**

★

*Licensee for:*

**Denatured Spirit, Tonic, Wines & Brandy**
**On Prescription**

## M. S. P. Balakrishna Chetty & Co.

**GLASS MERCHANTS,**

**2/33, Thathamuthiappan Street,**

**MADRAS-1.**

★

*Direct Importers of:*

Belgium Window Glass, Thick Sheet Glass, Silvered Polished Plate Glass, Vitrolite Colour Glass, Zinc Sheets & Plywood etc., etc.

சேவா ஸ்டேஜ்

நாடகக் கல்வி நிலையம்

சென்னை-14.

★

எமது

நாடகப் பிரசுரங்களை

விரைவில் எதிர்பாருங்கள்!




# தீப்பெட்டிகள்

★

தயாரிப்பாளர்கள் :

**அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை,**

பெரம்பூர் : சென்னை.

சென்னை சர்க்கார்
கைத்தொழில் அண்டு
வியாபார இலாக்காவின்
ஒரு பகுதி

*Diplomas are in demand in Modern life*
*for every Art,*
*even for Cooking !*

The thousands and thousands of cooks all over the country, especially the housewives who serve the most delicious and appetising dishes day in and day out in millions of homes have learnt by practice and service the fine flavours that cleverly and deftly used


## L. G. COMPOUNDED ASAFOETIDA

can impart to prepared food. They sense its fragrance by its pleasant whiff......it is so, for over sixty years now.

**For Good Food Rely on L. G.**

**LALJEE GODHOO & CO., MADRAS-1.** *H. O.* **BOMBAY.** *Branch :* **KUMBAKONAM.**

செப்டம்பர் நான்காம் நாள் ஒய். எம். ஐ. ஏ. தியேட்டரில்



'கொடை வள்ளல்' நாடகத்தில் ஒரு காட்சி.




'சிறைக் கோட்டம்' நாடகத்தில் அரசவைக் காட்சி.

நடைபெற்ற ஓரங்க நாடகக் காட்சிகள்



உணர்ச்சியைத் தூண்டும் இந்தச் சம்பவம் 'சிறைக் கோட்டம்' நாடகத்தில்தான்.



இந்த நால்வரும் ஒன்று சேர்ந்தது 'குரங்கின் பாதம்' நாடகத்தில்

## ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையம்

ஆசிரியர்கள் தயாரிப்பில் மாணவர்கள் நடிக்கும் உதவி நாடகம்

# "நாலுவேலி நிலம்"

கதை வசனம் : தி. ஜானகிராமன்

உதவித் தயாரிப்பாளர் : ஆர். நாச்சிமுத்து

★

நடிகர்கள்

| | | |
|---|---|---|
| வாள்சுத்தியார் | ... | எஸ். எம். ராமன் |
| கண்ணுசாமிப்பிள்ளை | ... | கே. என். அருணமோகன் |
| நடராஜன் | ... | ஜி. ராஜசேகர் |
| அய்யாப்பிள்ளை | ... | எம். லியோ |
| சுப்பட்டா | ... | சிவ. இளங்கோ |
| ராமதாஸ் | ... | வி. நேமிநாதன் |
| மேச்சேரியான் | ... | கே. எம். கிருஷ்ணன் |
| கட்டைப் பயல் | ... | கோமல் சுவாமிநாதன் |
| செவுத்தியான் | ... | ஆர். நாச்சிமுத்து |
| சீமா அய்யங்கார் | ... | கே. டி. ராதாகிருஷ்ணன் |
| பட்டுப்பிள்ளை | ... | வெ. ச. நடராஜன் |
| குருக்கள் | ... | வே. ரங்கராஜன் |
| ராமதாஸ் மனைவி, முனுசாமி | ... | ஆர். ராமகிருஷ்ணன் |
| தலைமை ஆசிரியர் பொன்னுசாமி, வழிப்போக்கன் | ... | செ. முத்துகிருஷ்ணன் |
| கொத்தனர் | ... | ஜி. பி. ராம்நாத் |
| இன்ஸ்பெக்டர் | ... | கஸ்தூரி |
| கான்ஸ்டபிள், விவசாயி | ... | பி. ஜோகி |
| டாக்டர் | ... | குப்புசாமி |
| மாசிலாமணி | ... | சுமித்ரா |
| சகுந்தலை | ... | வி. வசந்தா |
| நீலாம்பாள் | ... | விஜயலக்ஷ்மி |
| ராஜி | ... | கமலா |

★

28—10—'57 திங்கட்கிழமை மாலை 6-30 மணி

## ராஜா அண்ணமலை ஹால்

## ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலையம்

முதல் பயிற்சி நிறைவு விழா

# "சாணக்கியன் சபதம்"

(மாணவர் தயாரிப்பு)

கதை வசனம் : சிவ. இளங்கோ & எஸ். கே. சொருபன்
பாடல்கள் : கு. ம. கிருஷ்ணன்
இசையமைப்பு : சி. ஆர். ராமமூர்த்தி குழுவினர் (ஸேவா ஸ்டேஜ்)
தயாரிப்பாளர்கள் : வே. ரங்கராஜன் & ஆர். நாச்சிமுத்து

★

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| சந்திரகுப்தன் | ... | ஜி. பி. ராம்நாத் |
| சாணக்கியன் | ... | ஏ. பி. திருநாவுக்கரசு |
| ராக்ஷசன் | ... | செ. முத்துகிருஷ்ணன் |
| சர்வார்த்தசித்தி | ... | ஆர். நாச்சிமுத்து |
| தனநந்தன் | ... | எஸ். ஆர். குப்புசாமி |
| சுகல்பா | ... | பி. ஜோகி |
| மலையநாட்டு மன்னர் | ... | கே. என். அருணமோகன் |
| மலையநாட்டு அமைச்சர் | ... | வெ. ச. நடராஜன் |
| சுபாந்து | ... | கே. டி. ராதாகிருஷ்ணன் |
| ஜம்புமித்ரன் | ... | ஆர். ராமகிருஷ்ணன் |
| சாமா சாஸ்திரிகள் | ... | கோமல் சுவாமிநாதன் |
| கங்காதரன் | ... | ஜி. ராஜசேகர் |
| நிபுணகன் | ... | சிவ. இளங்கோ |
| கட்டியக்காரன் | ... | எம். லியோ |
| காவலாளிகள் | ... | கிருஷ்ணன், நடராஜன், ரங்கராஜன், சொரூபன் |
| கோசலநாட்டு இளவரசர் | ... | நேமிநாதன் |
| ஒற்றன் | ... | கஸ்தூரி |
| மூராதேவி | ... | சுமித்ரா |
| பிரபா | ... | விஜயலக்ஷ்மி |
| சாந்தா | ... | வி. வசந்தா |
| நடன மாதர் | ... | பி. கமலா & வசந்தா |

★

30—10—'57 புதன்கிழமை மாலை 6 மணி

**ராஜா அண்ணாமலை ஹால்**

# கல்வி நிலையத்திற்கு கல்வி அமைச்சர் வருகை

கல்வி நிலையத்திற்கு, இன்று காலை (30—10—'57) சென்னை ராஜ்ய கல்வி மந்திரி கனம் சி. சுப்ரமணியம் அவர்கள் விஜயம் செய்தார்கள். அவரை எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்களும் ராஜாமணி அவர்களும் வரவேற்றனர். ஸேவா ஸ்டேஜ் நாடக கல்வி நிலைய வேலை முறைகளையும் பாடத் திட்டத்தையும் கல்வி மந்திரி மிகவும் உற்சாகத்துடன் பார்வையிட்டார். பிறகு அவர் பேசுகையில் கூறியதாவது :

" நாடக கல்வி நிலையம் ஒரு ஆரம்பப் பயிற்சி சாலை. தற்சமயம் இத்தகையப் பயிற்சி நிலையம் மிகவும் அவசியப்படுகிறது. பழைய காலத்து நாடக மேடை, நடிப்பு முறை மாறி நாடக மேடை புதுமை அடைந்து வருகிறது. அது மேன் மேலும் சிறக்க வேண்டும். நாம் எப்படி பொருளாதாரத் துறையில் முன்னேறி வருகிறோமோ அதுபோல கலைத் துறையிலும் முன்னேற வேண்டும். அதற்கு இத்தகைய கல்வி நிலையங்கள் பெரிதும் பயன்படும். ஆனால் இன்றைய தினம் நாடகக்கலை அவ்வளவு சிறப்புற்றதாக சொல்ல முடியாது. இரண்டொரு மன்றங்கள் நடத்தும் நாடகங்கள்தான் தரத்தில் உயர்ந்ததாக இருக்கிறன. மற்றவை எல்லாம் சரியான பயிற்சி இல்லாமல் இருக்கின்றன. மேலும் காட்சி ஜோடனை, விளக் கமைப்பு, ஒளியைப் பரப்புவது முதலியன முறையோடு இருந்தால்தான் நாடகத்தை ரசிக்க முடியும். இம்மாதிரி ஒரு முறையான பயிற்சியைக் கொடுக்க கல்வி நிலையம் மிக அவசியம்."

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது. " இக் கலையில் வல்லுனர்கள் அதில் உள்ள நுணுக்கங்களை இயற்கையிலே திறமை பெற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும் போதுதான் கலை வளருகிறது. எப்படி ஒரு விளக்கினால் ஆயிரம் விளக்குகளை ஏற்றிவிட முடியுமோ அதுபோல ஒரு கலைத் திறமை கொண்டவர் மூலம் பல கலைஞர்களை உற்பத்தி செய்ய முடியும். அதோடு இக் கலையைப் போதிக்க வரு பவர்களும் அதைப்பற்றி சிந்தனை செய்து தெளிவடைய முடிகிறது. அதனால் அவர் களுக்கும் லாபம்; பயிற்சி பெறுகிறவர்களுக்கும் லாபம். இக் கல்வி நிலையம் நீடூழி வாழ வாழ்த்துகிறேன் ".

கல்வி நிலையத்தின் சார்பில் அமைச்சருக்கு நன்றி கூறும்போது டி. கே. ஷண்முகம் பேசுகையில் சுப்ரமணியம் அவர்கள் கல்வி மந்திரியாக மட்டும் இராமல் கலை மந்திரியாகவும் இருக்கிறார் என்றும், அவருடைய சொற்பொழிவு நாடகக் கல்வி நிலைய மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் கலைஞர்களுக்கும் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இதற்கு முன்தினம் (28–10–'57) ராஜா அண்ணாமலை மன்றத்தில், சிறு கதை எழுத்தாளர் தி. ஜானகிராமன் எழுதிய "நாலுவேலி நிலம்" என்ற நாடகம் மாணவர்களால் நடத்தப்பட்டது. நாடகம் மிகவும் சிறப்புற்று, ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது.

நாடகத்திற்கு ஏ. வி. மெய்யப்பன் தலைமை தாங்கி நடிகர்களை வெகுவாகப் பாராட்டினார். அவர் தன் தலைமையுரையில் கூறியதாவது" இந்த நாடகத்தில் யார் சிறப்பாக நடித்தார்கள்; யார் நடிக்கவில்லை என்று கூற இடமில்லை. அனைவரும் மிகச் சிறப்பாக நடித்துள்ளனர். மாணவர்களிடம் மிகுந்த திறமை காணப்படுகிறது. இம்மாதிரி நாடகத்திறமை மிக்கவர்கள்தான் சினிமாத் துறையில் வரவேண்டும். அப்போது தான் சினிமாத்துறையும் மிகச்சிறப்படைய முடியும். இன்று சினிமாவிற்கு பாலூட்டி தாயாக விளங்குவது நாடகம் தான். ஆனால் இதே சினிமா தான் நாடகத்தையும் கொலை செய்கிறது. இந்நிலைமை மாறி நாடகக் கலை வளரவேண்டும். எதிர்பார்த்ததைவிட அதிகமாக கல்வி நிலையம் சாதித்து விட்டது என்பதற்கு இந்த நாடகமே அத்தாட்சி. இக்கல்வி நிலையத்திற்கு மக்கள் ஆதரவு கொடுத்து அதை நாடகக் கலை முன்னேற வழி வகுக்கவேண்டும்."

எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் வரவேற்புரை கூற பி. எஸ். ராமையா அவர்கள் நன்றி கூறினர்.

## ஒரு அன்பருடைய வாழ்த்து!

" நாடகம் மூன்று உறுப்புக்களால் ஆகியது ; நாடகத்தை எழுதும் ஆசிரியர், நடிக்கும் குழுவினர், பார்க்கும் அவையினர் ஆவார்கள். இவைகள் ஒவ்வொன்றும் சம முக்கியத்துவம் பெற்றன; நாடகத்தில் ஒருமைப்பாடு தெரிய மூன்றும் சேர்ந்து விளங்கவேண்டும்" என்று ஒரு அயல் நாட்டுக் கலைஞர் சொல்வதாகக் கூறிவிட்டுக் கல்வி நிலையம் முதல் பயிற்சி நிறைவு விழா கொண்டாடுவதை அறிந்து சந்தோஷ முற்ற ஒரு அன்பர் எழுதுகிறார்.

" அமெச்சூர் நாடக சபையினரும் ஆரம்பக் கலைஞர்களும் நாடகத்தின் பல்வேறு நுட்பங்களை ஓர்ந்தறிந்து நாடகத்தின் முழு வெற்றிக்கு வழிகாண ஏதுகரம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். கல்வி நிலையம் ஆரம்பித்ததிலிருந்து அவர் களுக்கு அதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பணியைக் கல்வி நிலையம் சிறந்த முறையில் செய்ய முன் வந்ததற்காக நாமெல்லோரும் பெருமைப்பட வேண்டும்."



## கல்வி நிலையத்தில் பணியாற்ற
## கலையன்பர்கள் தேவை!

★

<u>தகுதிகள் :</u>

1. எள் என்றால் எள்ளாக இருக்கவேண்டும்.
2. எட்டு மணியென்றால் எட்டடிக்க ஐந்து நிமிஷமாக இருக்கவேண்டும்.
3. ஒன்று, இரண்டு, மூன்று . . . என்று பத்து வரை எண்ணிக்கொடுத்தால் பதினொன்று பன்னிரண்டு என்று தானாக எண்ணிப் பார்க்கும் கற்பனைத் திறன் வேண்டும்,

★

### ஸேவா ஸ்டேஜ்
## நாடக கல்வி நிலையம்
### சென்னை-14.

C.C.P. Works, Ltd., Madras-2.


தீபாவளித் திருநாளில் தித்திக்கும் செந்தமிழில்
திக்கெல்லாம் இசை ஒலிக்கும் !
ஏ எல் எஸ்
புரொடக்ஷன்ஸ்
அம்பிகாபதி
வசனம் & டைரக்ஷன்: ப. நீலகண்டன்
... சங்கீதம்: ஜி. ராமனாதன்...
ALS
PRODUCTIONS
பூரண உரிமையாளர்கள்: ராமநாதன் பிக்சர்ஸ். சென்னை-14




WRAPPER PRINTED AT THE B. N. K. PRESS (PRIVATE) LTD. MADRAS-26